
# ஈட்டுரைத் தேனருவி



ஆழ்வார் முருகதாஸ்

# கட்டுரைத் தேனருவி

ஆழ்வார் முருகதாஸ்

வெளியீடு

வதிரி, அபிவிருத்தி நிறுவனம

நூலின் பெயர்:
கட்டுரைத்தேனருவி

ஆசிரியர்:
ஆ.முருகதாஸ்

புத்தக உரிமை:
திருமதி முருகதாஸ் இந்திராதேவி

விலாசம்:
பாக்கியலட்சுமி பவனம்,
அல்வாய் தெற்கு,
வதிரி.

அளவு:
1/8

பக்கங்கள்: **100**

பதிவுத் திகதி: **01.01.2003**

அட்டைப்படம்: மல்ரிவிஷன் கிராபிக்ஸ்

அச்சுப்பதிப்பு:
மல்ரிவிஷன், நெல்லியடி.

விலை: **125.00**

## சமர்ப்பணம்

இல்லறமதில் இனிதே இணைந்து
நல்லறமதனை நன்றே ஓச்சி
பாலகன் எத்தனை பாருக்கே தந்து
சற்றும் சளைக்காமல் வியர்வை சிந்தி
என்னைப்பேராளனாக்கி தம்மையே
என்னில் கண்டு இத்தரணிக்கு
என்னை அறிய வைத்து வாழும் என்
தந்தையாம் ஆழ்வாப்பிள்ளைக்கும்
அன்னையாம் பாக்கியத்திற்கும்
இச்சிறு நூல் சமர்ப்பணம்.

# ஆசியுரை

## திரு வே.தி. செல்வரத்தினம்
## வலயக் கல்விப் பணிப்பாளர்,
## வலயக் கல்வித் திணைக்களம்
## வடமராட்சி.

கட்டுரை தானாக எழுதும் பழக்கம் மாணவர்கள் மத்தியில் அருகி வருவது கல்விச் சமுதாயத்தை எதிர்காலம் பற்றி சிந்திக்க வைக்கிறது. இக்காலத்தில் திரு ஆ. முருகதாஸ் ஆசிரியர் அவர்களின் ஆக்கம் சகலருக்கும் பயன்படக்கூடியதாக இருக்கும். நாட்டுக்காக உழைத்த பெரியோரின் வரலாறு, ஆற்றிய தொண்டுகள், தியாகங்கள் யாவும் மாணவர்கள் கற்பதற்கு ஏற்றதாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவ்வாக்கம் ஏனைய ஆசிரியர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையும். திரு ஆ. முருகதாஸ் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. மேலும் மேலும் இத்தகைய ஆக்கங்களை ஆசிரியர் வெளியிட எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்**
**வலயக்கல்விப் பணிப்பானர்**
**வடமராட்சி**

# வரவேற்கின்றோம் வாழ்த்துகின்றோம்

எமது இரண்டாவது வெளியீடான ''கட்டுரைத்தேனருவி'' வெளிவருவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது கிராமத்தைப்பொறுத்தமட்டில் இப்புத்தகமானது 14வது வெளியீடாகும். இப்பணிகள் மேலும தொடர வேண்டும் என்பதே எமது அவா. அவர்களால் கிராமம் பெருமையடைகின்றது. கிராமத்தால் அவர்கள் பெருமையடைகின்றார்கள்.

''பிற நாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை''

எனப்பாரதியார் பாட்டிற்கிணங்க ஆழ்வார் முருகதாஸ் அவர்கள் தனது பணியினைத் தமிழுக்குத் தந்துள்ளமை வரவேற்கக் கூடியதாகும். மாணவர்களின் தேவையை நன்றாக உணர்ந்து தேடலில் இறங்கி வெற்றி பெற்றுள்ளார். இவர் முதலில் ஊட்டுவது தன்னம்பிக்கையும் முயற்சியுமேயாகும். அறிவியல் சார்ந்த கருத்துக்களை தேனருவியாக பாய்ச்சியுள்ளார். அழுத்தமாகச் சொல்வதாயின் மாணவர்களுக்கு மனிதர்களைக் காட்டுகின்றர்ர். அதனூடாக மனிதத்தை உணர்த்துகின்றார்.

தமிழ் அகராதிகளைக் கையில் வைத்துக்கொண்டு கட்டுரைகள் படிக்க வேண்டியகாலமிது. அந்தச்சிரமம் இங்கே தவிர்க்கப்பட்டுள்ளது. சாமானியனும் புரிந்து கொள்ளும் சொற்பிரயோகங்களையே இவர் பாவித்துள்ளமை இங்கே பாராட்ட வேண்டியுள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின் இவர் ஆசிரியராக இருந்து எழுதவில்லை தன்னை ஒரு மாணவனாகக் கருதியே எழுதியுள்ளார்.

இவர் எமது நிறுவனத்தோடு ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்பு உடையவர். நிறுவன நூலக சேவையின் நூலகராகப் பணியாற்றியவர். எமது செயற்றிட்டங்களுக்காகப் பாடுபட்டவர். இவர் மேலும் இது போன்ற முயற்சியில் இறங்க வேண்டும். எமது நிறுவனத்தை ஆக்கிய எம்.எஸ்.சீனித்தம்பியின் ஆசி இவருக்குக் கிடைக்கும் எனக் கூறி வாழ்த்துகின்றோம்.

வளர்க இவரது தமிழ்ப்பணி

**தி. வரதராசன்**
தலைவர்

வதிரி அபிவிருத்தி நிறுவனம்
பரிசாந்தி
அல்வாய்தெற்கு,
வதிரி.
20.04.2002

# அணிந்துரை.

''கட்டுரைத்தேனருவி'' எனும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நூலின் ஆசிரியர் திரு ஆ. முருகதாஸ் அவர்களை நான் நன்கு அறிவேன். இவர் முன்பு நீண்டகாலமாக உயர்தர மாணவர்களுக்கு தர்க்கம் (அளவையியலும் விஞ்ஞானமுறையும்) போதித்த அநுபவம் மிக்கவர்.இன்று தாம் கற்பிக்கும் பாடசாலை மாணவர்களின் மொழித்திறன் நிலைமையை அநுபவபூர்வமாக அறிந்து அதற்குப் பரிகாரம் காணும் நோக்கிலும், அதேவேளை க.பொ.த சாதாரண தரத்தில் பயிலும் ஏனைய மாணவர்களுக்கும் பயன்படவேண்டும் என்ற எண்ணத்திலும் 30 கட்டுரைகள் அடங்கிய இத்தொகுதியை நூலுருவில் கொண்டுவந்துள்ளார்.

மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களில் தலைசிறந்தது மனித சிந்தனையைப் பரப்பும் சாதனமான மொழியே ஆகும். மனித நாகரீகத்தின் தோற்றம் மொழியின் தோற்றத்துடனேயே ஆரம்பமாகியது என ஆய்வாளர் மொழிவர்.பண்பாடு சார்ந்த நடத்தைக் கோலங்களை ஒரு சந்ததியிலிருந்து மறுசந்ததியினர்க்கு கையளித்தல் என்பதும் மொழியின் பிரயோகத்தினாலேயே நிகழ்கின்றது. மொழியும் சமூகமும் இணைந்து செல்வன. எனினும் மொழியானது எம்மை நிகழ்காலச் சூழலிருந்து விடுவிப்பதோடு அதனது குறியீட்டுப் பண்பு காரணமாக எமது சூழலைக் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு விரிவு படுத்தியுமுள்ளது. யதார்த்த உலகில் உள்பொருளல்லாத பல இல்பொருள்களையும் நாம் மொழியினால் படைக்க முடிகின்றமையே இதற்குக்காரணம். எண்ணக்கரு ஆக்கத்தை மொழி எளிதாக்குகின்றது. எண்ணக்கரு உருவாக்கத்தில் மொழித்திறன் வகிக்கும் பங்கு காரணமாக இன்று மொழியியல் ஆய்வுகள் விஞ்ஞான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னைய நாளில் மெய்யியல், இலக்கியத்திறனாய்வு என்பவற்றுடன் மட்டும் இணைந்ததாக இருந்து வந்த மொழி, இன்று ஒரு தனித்துறையாக வளர்ச்சியடைந்து மொழியறிவியல் (**linguistic science** ) என்ற முறையில் முன்னேறிச் செல்கின்றது.

இன்றைய தகவல் யுகத்தில் (**information era** ) மொழியின் நவீனமயப் பயன்பாடு மொழிக்கு வளம் சேர்ப்பது. மொழியின்

ஆற்றல் இவ்வாறாக விதந்து பேசப்பட்டு வருகின்றபோதிலும் தமிழை முதன்மொழியாகக் கொண்ட எம்பிள்ளைகளிடத்தில் மொழியறிவுகுன்றி வருவதை மதிப்பீட்டு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. மொழிக் கல்வியின் ஒரு முக்கிய நோக்கம் எண்ணங்களையும் கருத்துக்களையும் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தும் ஆற்றலை விருத்திசெய்தல் ஆகும். நூல்நயம் காணலும் இலக்கியச்சுவை இன்பம் பெறலும் கூட மொழியறிவினூடாகவே நிகழ்வன. இவற்றுக்கும் மேலாக புதியனவற்றைப் படைக்கவேண்டும் என்ற ஆக்க ஆளுமை உந்தல் ஒருவனின் மொழியறிவைப் பொறுத்தே வீரியத்துடன் செயலுருவம் பெறும். மாணவர்களின் ஆக்க ஆளுமைப் பண்பு, கட்டுரைவகை வினாக்களுக்கு மாணவர் எழுதும் விடைகளில் வெளிப்படும் எடுத்துக்கொண்ட தலைப்புக்குப் பொருத்தமாக, தாம் தெரிவிக்கும் கருத்துக்களிடையே ஒருமையும் ஒழுங்கமைப்பும் **(unity and order)** பிரதிபலிக்கும் வகையில் வாக்கியங்களை அமைத்து பந்தி பிரித்து எழுதுதல் படைப்பாற்றலின் சிறப்பைக் காட்டும். காரண காரியத் தொடர்பை விளக்கும் தருக்க நியாயமும் தங்கு தடையற்ற ஓட்டமும் கட்டுரையில் இசைவை (**coherence**) ஏற்படுத்தும். முன்னுரையும் முடிவுரையும் கூட இறுக்கமாகவும் கட்டுரைத் தலைப்புக்குப் பொருத்தமாகவும் அமைந்து, கட்டுரையின் மையப்பொருளைத் தெளிவுற எடுத்துக்காட்டலும் அவசியம்.

எழுத்துத்திறன் வெளிப்பாட்டுக்கு நல்ல வாசிப்பும் அவசியம் சிறந்தனவற்றைத் தேடி வாசித்தல் அறிவு வளர்ச்சிக்கு மாத்திரமன்றி மொழித்திறன் வளர்ச்சிக்கும் பயன்படும். இன்று மேலை நாடுகளில் ஆரம்பக்கல்வி மட்டத்தில் **(primary level)** கூட மேலோட்ட வாசிப்பின் **(skimming)** அவசியம் வற்புறுத்தப்பட்டு பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. மேலோட்ட வாசிப்பில் ஏற்படும் "கவர்ச்சியே" வாசகனை வாசிக்கத் தூண்டும். இன்றைய அறிவுத் தொகுதிப் பெருக்கமும் வெளியீட்டுச் சாதனங்களின் பெருக்கமும் மேலோட்ட வாசிப்பின் அவசியத்தை வற்புறுத்துவது இன்றைய தகவல்யுகத்தில் தவிர்க்க முடியாததாகின்றது.

எமது பிள்ளைகளின் தமிழ்மொழித் திறனை வளப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளில் ஆசிரியர்களின் பங்கு சிறப்பானது. மாணவரின் அறிவை சமகாலப் போக்குகளுடன் இணைந்ததாய்

செப்பனிடும் பணிகளிலும் வரையறுத்த பாட விதானத்துக்கும் மேலாக சுயகற்றல் திறன்களை வளர்த்து, குறித்த நிலைமைகளில் **“பிரச்சினை விடுவித்தல்” (problem solving )** தொடர்பாக பிரயோகிக்கின்ற வழிமுறைகள் பற்றிய புரிந்துணர்வை அவர்களிடத்து ஏற்படுத்தும் பணியிலும் ஆசிரியப் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பொறுப்பின் முக்கியத்துவம் உணரப்பட்ட நிலையிலேயே **”வாழ்நாட் கல்வி” ( life long learning) “கற்பதற்குக் கற்றல்” (learning to learn)** ஆகிய கோட்பாடுகளுக்கு செயலுருவம் கொடுப்பவர்களும் ஆசிரியர்களே என்ற உண்மையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆசிரியம் இன்று ஒரு வாண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் ஆசிரியத்தின் பொறுப்பை **( accountability )** வெளிக் காட்டும் ஒரு செயற்பாடாக இந்நூல் வெளிவருவது ஆசிரிய உலகத்துக்கு ஒரு நல்லுதாரணம் ஆகும். இந் நூலிலுள்ள கட்டுரைகள் பல்துறை சார்ந்த அறிவை மாணவர்களுக்கு வழங்குவன. உலகப் பெரியார்களின் வரலாறு உணர்த்தும் கட்டுரைகளையும் முதுமொழி விளக்கக் கட்டுரைகளையும் உழைப்பு,விளையாட்டுத்துறை, ஆசிரியத்துவம் போன்றனவற்றின் சிறப்பை உணர்த்தும் கட்டுரை களையும் உலகசமுதாயம் தகவல்புரட்சி என தற்காலக் கருத்துக் களைத் தாங்கி இந்நூல் வெளிவருவது, மாணவர்களின் மொழியறிவு விருத்தியில் இந்நூலாசிரியர் எடுத்துக்கொண்ட கரிசனையையே காட்டுகின்றது. க.பொ.த (சாதாரணதர) பரீட்சை வினா மாதிரிகளுக்கான கட்டுரைகளை வழங்கியிருப்பதும் மாணவர்களின் நலன் கருதியே. இந்நாளில் நூல் உருவாக்கத்தில் ஏற்படும் அதிக செலவீனங்களையும் பொருட்படுத்தாது இந் நூலாசிரியர் எடுத்துக் கொண்ட இம் முயற்சிக்கு பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கும் ஒத்துழைப்பே ஊக்கம் தரும். இந்த ஊக்கம் மென்மேலும் பல நூல்களை இந் நூலாசிரியர் எழுதுவதற்கு உந்து சக்தியாகும்.

**த.கலாமணி**
**விரிவுரையாளர்,**
**கல்வியியற்றுறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# என்னுரை

ஆரம்பத்தில் இந்நூலை யான் எழுதவேண்டும் என எண்ணவில்லை. எமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கு யான் அதிபர் திரு பா.வெற்றிவேல் அவர்களினால் செயற்குழுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். அதில் கட்டுரைகள் திருத்துதல், பேச்சுக்கள் தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டேன். இதற்கு, இதனால் கிடைத்த அனுபவமும் ஒரு காரணமெனக் கூறலாம். அப்போது மாணவர்களின் கட்டுரைகள் தரமற்றனவாகவே காணப்பட்டன. எனவே அவர்களின் அறிவுத்துறையை விருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்கிணங்க துணிச்சலோடு இறங்கினேன்.

எமது மாணவர் தேடிக்கற்கக் கூடியவர்களாக மாற்றமடைய வேண்டும். அவர்கள் பரீட்சைகளை மட்டும் முக்கிய நோக்கமாக கொள்ளாது அறிவுத்துறையை விருத்தி செய்பவர்களாக தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இந்நூலில் 30 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் 1999, 2000, 2001 ,2002 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த (சாதாரணதரம்) தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் 11ல் வெளிவந்த வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை கட்டுரை அமைப்புக்களின் மாதிரிகளாக அமையும். அத்துடன் மாணவர்களுக்கு வரலாறு, பொருளியல், அறிவியல், மருத்துவம் போன்ற ஏனைய துறைகளும் இங்கு புகுத்தப்பட்டமை சிறப்பம்சமாகும்.

நான் அணிந்துரை வழங்குவதற்கு ஒருவரைச் சிந்தித்த போது திரு த.கலாமணி தனது கலாநிதிப் பட்டத்தினைப் பெறும் பொருட்டு அவுஸ்திரேலியாவுக்குச் சென்று இங்கு வந்தார். அவரிடம் இந்நூலுக்கு அணிந்துரை எனும் அணிகலனை வழங்குமாறு கேட்டபோது எந்தவித மறுப்புமின்றி ஒத்துக் கொண்டார். அவர் இக் கட்டுரைகளை நன்கு வாசித்துத் தன் பணியினைச் செவ்வையாக நிறைவேற்றினார். திரு த.கலாமணி (விரிவுரையாளர்-கல்வியியற்றுறை- யாழ் பல்கலைக்கழகம்) அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றிகள்.

அடுத்து எமது வடமராட்சிக் கல்விப்பணிப்பளர் திரு வே.தி.செல்வரட்ணம் அவர்களுக்கு ஆசிச்செய்தி வழங்கியமைக்காக என் நெஞ்சங் கலந்த நன்றிகள்.

எனது முன்னாள் ஆங்கில ஆசான் திரு வே. அமிர்தலிங்கம் அவரகள் அறிமுகவுரையை வழங்கியமைக்காக என் நன்றிகள்.

எனது எழுத்துப் பிரதிகளில் உள்ள வழுக்களைத் திருத்தி உதவி செய்த திரு க.குணேஸ்வரன் பி.ஏ (சிறப்பு-தமிழ்) அவர்களுக்கு என் நன்றிகள். அத்துடன் அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவிய திரு சோ.மகேஸ்வரன் அவர்கள் என் நன்றிக்குரியவர். இத்துறையில் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த என்மைத்துனர் திரு எம்.எஸ்.எஸ். இரத்தினசேகரன் (ஆர்.பி) அவர்களுக்கு என் நன்றிகள். இறுதியாக கணணியில் அழகுற வடிவமைப்புச் செய்த நெல்லியடி மல்ரிவிஷன் ஓவ்செற் பிறின்ரேஸ் ஸ்தாபனத்திற்கு என் நன்றிகள். சிறப்பாக திருவாளர்கள் முகுந்தன், தர்மேந்திரா ஆகியோருக்கு மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**ஆ. முருகதாஸ்**

**"பாக்கியலட்சுமி பவனம்"**
**வதிரி,**
**அல்வாய்.**
2003.01.01

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | உலக சமுதாயம் | 01 |
| 2) | எமது நாட்டின் சுற்றாடல் சூழலைப்பாதுகாப்போம் | 04 |
| 3) | 21ம் நூற்றாண்டை நோக்கி | 07 |
| 4) | ஆசிரியத்துமும் சமுதாயத்தின் பங்களிப்பும் | 10 |
| 5) | வடபகுதிப்பொருளாதாரத்தில் பனை வளம் | 14 |
| 6) | விளையாட்டுத்துறைகளின் மகத்துவம் | 18 |
| 7) | உரையாடல் - மரணதண்டனை நியாயமானதா? | 21 |
| 8) | உரையாடல் - இளைஞர்கள் சமுதாயத்தை சீரழிக்கிறார்களா? | 24 |
| 9) | கலைகளுள் நாடகக்கலையின் முக்கியத்துவம் | 27 |
| 10) | முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் | 30 |
| 11) | இறக்குமதிக்கட்டுப்பாட்டினால் நாட்டில் உற்பத்தி பெருகும் | 32 |
| 12) | புதிய தகவல்புரட்சியில் இன்ரனெற் | 34 |
| 13) | மருத்துவத்துறை கண்ட மகத்தான சாதனைகள் | 37 |
| 14) | உழைப்பும்உயர்வும் | 40 |
| 15) | நாட்டார் இலக்கியம் | 44 |
| 16) | முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் | 47 |
| 17) | தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் | 50 |
| 18) | பெற்றோரைப்பேணுவோம் | 53 |
| 19) | பேரறிஞர் சீ. என். அண்ணாத்தரை | 57 |
| 20) | இருபதாம் நூண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களுள் தமிழ்த் தொண்டு செய்த ஒருவர் கந்த முருகேசனார். | 61 |
| 21) | மகாத்மா காந்தி | 65 |
| 22) | ஜவகர்லால் நேரு | 69 |
| 23) | நான் கண்ட அதிபர் | 73 |
| 24) | கலாநிதி அம்பேத்கார் | 77 |
| 25) | லால் பகதூர் சாஸ்திரி | 81 |
| 26) | சிவகாமியின் செல்வன் | 85 |
| 27) | பஸ் நிலையமொன்றின் சுயசரிதை | 89 |
| 28) | விளையாட்டுத்துறை பற்றிய சொற்பொழிவு | 91 |
| 29) | கற்பனைச் சிறுகதை - வெளிநாட்டு வாழ்க்கை | 94 |
| 30) | போதைப்பொருள் பாவனை | 97 |

# உலக சமுதாயம்

உலகம் சுருங்கிவிட்டது. ஒருமூலையில் இருந்துகொண்டே உலகில் நடைபெறும் சம்பவங்களைத் தொடர்பு சாதனங்கள் மூலம் இன்று நாம் அறியக்கூடியதாய் உள்ளது. இன்று மனிதன் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தனது வாழ்க்கையை இயந்திரமயமாக்கியுள்ளான். தமிழ்மக்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர். தமிழர்கள் நடைபெற்ற யுத்தங்கள் வறுமை போன்ற காரணங்களுக்காக புலம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தம் உயிர் உடமைகளைக்காக்கும் பொருட்டும் பணத்தைத்தேடவும் நாகரீக மோகத்தினாலும் இடம் பெயர்ந்தனர். எனினும் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களே கூடுதலாகப் புலம் பெயர்ந்துள்ளனர் எமது மக்கள் தாம் வாழும் நாட்டுமொழிகளையும் கற்று அங்கு தொழில் புரிகின்றனர்.

அத்துடன் படித்த சமூகத்தினர் எமது நாட்டைவிட்டு கூடுதலான சம்பளத்தைப் பெறும் பொருட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். வைத்தியத்துறை நிபுணர்கள், பொறியியலாளர்கள், கல்விமான்கள், வேறு தொழில்துறையில் ஈடுபடுவோர் வெளிநாடுகளுக்குச் சென்றனர். எமது நாட்டிலுள்ள பல்துறை மூளைசாலிகள் வெளியேற்றத்தினால் இங்குள்ள மக்கள் பல்வேறுவிதமான இன்னல்களை எதிர்நோக்கு கின்றனர்.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் உலக நாடுகளில் மாணவர்மையக் கற்பித்தலே நடைபெறுகின்றது. அம்மாணவர் குழுச் செயற்பாடுகளுடன் கல்வி கற்கின்றவர்களாக உள்ளனர். அவர்கள் துடிப்போடு கருத்துணர்வுடன் கண்டறிந்து கற்கின்றனர். அங்கு கற்றல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி மாணவர் மகிழ்ச்சியுடன் கற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. மாணவர் தாமே விரும்பிக் கல்வி கற்பது கற்றல் -கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

நுட்பமுறைகளில் செவிப்புலசாதனங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். செவிப்புல சாதனங்களுள் ஒலிப்பதிவுத்தட்டு, ஒலிப்பதிவு நாடாக்கள், பெட்டிகைப் பதிகருவி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கட்புலசெவிப்புல சாதனங்களுள்

தொலைக்காட்சி, திறந்த சுற்றுக்கள், கணனி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இச்சாதனங்களை உயர்வகுப்பு மாணவர்தாமே கையாண்டு தொழிற்படுகின்ற வல்லமை படைத்தவர்களாக காணப்படுகின்றனர். பிறநாட்டுமாணவர்கள் தற்காலத்தில் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கல்வி கற்கின்றனர். தங்களுக்கு எழும் சந்தேகங்களை இணையம் எனும் வலையமைப்பின் மூலம் வெளிநாடுகளிலுள்ள ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் கேட்டு அறிந்துகொள்கின்றார்கள். இதிலிருந்து வெளிநாட்டிலுள்ள மாணவர்கள் கணணித்துறையில் பெற்ற அபிவிருத்தி சிறப்பானது என்பது விளங்குகின்றது.

அமெரிக்காவிலுள்ள மாணவர் விடுமுறைக் காலங்களில் வீடுகளுக்குச் சென்று வர்ணங்களைப்பூசி சம்பளத்தைப் பெறுகின்றனர்.அது போல் ஜப்பான் நாட்டிலுள்ள மாணவர்கள் விடுமுறைக்காலங்களில் வயல்களுக்குச் சென்று களை பிடுங்குகின்றனர். இம்மாணவர் தம் கைச்செலவிற்கு தாமே உழைக்கின்றனர். எனவேமாணவர் தம் பாடசாலை வாழ்க்கையிலேயே தொழில் செய்யவேண்டுமென்ற மனநிலை கொண்டவர்களாக உள்ளனர்.

ஆரம்ப வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்கள் வகுப்பறைகளில் தாமாகவே தொழிற்படுவர். அவர்கள் எந்நேரமும் சுறுசுறுப்புள்ளவர்களாகக் காணப்படுவர்.அதற்குக் காரணம் தொலைக் காட்சி, இணையம், கணனி ஆகியவை சாதாரண மக்கள் வீடுகளில் காணப்படுகின்ற தொடர்புச்சாதனங்களாகும். ஆனால் எமது மாணவர்கள் பாடசாலைகள் வீடுகளிலேயே இச்சாதனங்களைக் கண்ணாலும் பார்க்கமுடியாத ஒரு கூட்டத்தினராகக் காணப்படுகின்றனர். அத்துடன் வெளிநாட்டு மாணவர்கள் தம் வீடுகளிலேயே இந்த ஊடகங்களைக் கையாள்வதன் மூலம் சிறந்த அனுபவம் பெற்றவர்களாக உள்ளனர். அவர்கள் தாம் பெற்ற அனுபவம் மூலம் பெற்றோரின் அனுமதியுடனும் இந்த ஊடகங்களின் புதிய நுட்ப முறைகளை அறிந்து கொள்வர். எனவே ஆரம்பக் கல்வி மாணவர் பெற்றோரினால் வற்புறுத்தப்படாமல் தாம் விரும்பிய நேரத்தில் கற்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளனர்.

மின்சாரமூலம் மக்கள் தமது வேலைகளைச் சுலபமாக்கிக் கொள்கின்றனர். அதாவது சமையல், உடுப்புத்துவைத்தல், மலகூடம் துப்பரவாக்குதல், ஆகியவற்றை மின்சாரஉதவியோடு மக்கள் செய்கின்றனர். இதனால் அங்கு தொழில்களில் பாகுபாடு காட்டாத பண்பு மக்களிடம் ஓங்கி வளர்ந்துள்ளது.

கல்வியும் தொலைத்தொடர்பு நுட்பங்களும் "பூமிக்கிராமம்" எனும் அளவுக்கு இப்பரந்த உலகைச் சுருக்கி விட்டன. உலகை ஒற்றையலகாக கொண்டு பொருளியல், அரசியல், மற்றும் அனைத்துத் துறைகளும் கணணித்திரையின் உதவியுடன் கல்வியியல் ஊடாக உலகமயமாதலை நோக்கி நகரத் தொடங்கிவிட்டன. இந்நகர்வுகளின் நம்பிக்கை 21ம் நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்வதா கவே இருக்கும். இதற்கு ஏற்ப உலகின் எந்தப்பகுதியிலும் தொழில் செய்து வாழக்கூடிய தேர்ச்சியுள்ளவர்களாக எமது மாணவர்களை ஆக்குவது ஆசிரியர்களின் தவிர்க்க முடியாத பொறுப்பாகியுள்ளது.

**தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான ஒருதலையங்கம் இடுக.**

ஆதிகால மனிதன் சூழலோடு ஒன்றி வாழ்ந்தான் ஆனால் இன்று சூழலைத் தன் தேவைகட்குப் பயன்படுத்தும் முயற்சியில் மனிதன் அதனைச் சூறையாடி அதன் இயற்கைத் தோற்றத்தை மாற்றியமைத்துள்ளான். இதனால் சூழல் மாசுபடுதல் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. சூழல் மாசடைதல் பல நாடுகளிலும் இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகின் சூழல் ஏன் மென்மேலும் அதிகமாக மாசடைந்து வருகின்றது என்பதையும் சூழல் மாசடைவது இன்றுள்ள நிலையில் இலங்கைக்கு ஒருமுக்கிய பிரச்சினையாக உள்ளது என்பதையும் ஆராய்ந்து ஒரு விளக்கக் கட்டுரை வரைக

(250 சொற்களில் அமைதல் வேண்டும்)

(க.பொ.த. சாதாரணம் 2001 தமிழ் 11)

## எமது நாட்டின் சூழலைப் பாதுகாப்போம்

நாம் இன்று வாழ்கின்ற சூழல் பல் வழிகளாலும் அழுக்கடைகின்றது. இதனால் எமது சுத்தம் சுகாதாரம் கெட்டுப்போகின்றது. சுத்தம் சுகம் தரும் என்பதற்கேற்ப எமது சூழலைப் பாதுகாப்பதும் எம் சுத்தம் பேணி சுகத்தைப் பேணவேண்டியது இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைகளினதும் கடமையாகும். நகரங்களில் நெருக்கடியாக மக்கள் வாழும் வீடுகளும் சூழல் மாசடைதலிற்கு ஒரு காரணமாகும்.

எமது சூழலில் நிலம், நீர், வளிமண்டலம் என்பன நவீன விஞ்ஞான கைத்தொழில் வளர்ச்சி மக்களது பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் அழுக்கடைகின்றன. இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகளாலும் நீர் மாசடைகின்றது. பல்வேறு தொழிற்சாலைகளை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் அங்கு வெளியேறும் புகை தூசி போன்ற அழுக்குகளால் பாதிக்கப்படுகின்றனர். கைத்தொழில் வசதிக்காக ஆற்றங்கரையோரத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. அவற்றின் கழிவுகள் ஆற்றினுள்ளே கலக்க விடப்படுகின்றன. இதனால் ஆற்று நீர் அழுக்கடைவதுடன் அதில்

வாழும் மீன் போன்ற உயிரினங்கள் அழிந்தும் விடுகின்றன. இதனால் எமது நாட்டின் மீன் வளம் குறைவடைகின்றது. அத்துடன் வர்த்தகத்துறையில் பாதிப்பு ஏற்படுகின்றது.

வாகனங்களிலிருந்து வரும் புகை அணு ஆயுதங்களின் பாவனை என்பனவும் வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. நாம் சுவாசிக்கும் வளி அசுத்தமடைகின்றது. இதனால் சூரியனிலிருந்து வரும் தோலைத் தாக்கக்கூடிய கதிர்களைத் தடுக்கும் ஓசோன் எனப்படும் வளிமண்டல மேற்பரப்பிலுள்ள படையில் கூட துவாரங்கள் ஏற்பட்டு அத்துவாரங்கள் ஊடாக நச்சுக்கதிர்கள் புவியை வந்தடைகின்றன. இதனால் மனிதனின் தோலில் பாரிய நோய்கள் ஏற்படும் என அஞ்சப்படுகின்றது.

விவசாயத்தில் அதிக பயன் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் நவீன வளமாக்கிகளாலும் இரசானப்பொருட்களாலும் அணுஆயுதப் பரிசோதனை என்பவற்றாலும் நிலம் மாசடைகின்றது. இதனால் வளமற்ற நிலமே மிகுதியாக இருக்கும் என அஞ்சப்படுகின்றது.

இவைமட்டுமன்றி வீதிகளில் குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் உள்ளன. அழுகியபழங்கள், பொருட்கள் பாதையோரங்களில் இறந்த மிருகங்களின் உடல்கள் அகற்றப்படாமல் இருப்பதாலும் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன் பல தொற்று நோய்க்கிருமிகள் பெருகி வளருவதற்கு வாய்ப்பளிக்கின்றது.

வாகனங்களிலும் படமாளிகைகளிலும் மக்கள் சிகரெட் சுருட்டு போன்றவற்றை புகைக்கின்றார்கள் இப்புகைப் பழக்கம் மக்களுக்கு பல வகையான தீமைகளை ஏற்படுத்துகின்றது. இதனால் அவர்கள் ஈரல், சுவாசப்பை போன்றவற்றில் ஏற்படும் நோய்களினால் துன்பமடைய நேரிடுகின்றது.

உலகில் அணுஆயுதப் பாவனையால் மக்கள் மரண மடைகின்றார்கள். அத்துடன் பாரிய அழிவு ஏற்படுகின்றது. நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருமளவிலான வீழ்ச்சி ஏற்படுகின்றது. நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாக அமைகின்றது. மக்கள் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறரார்கள்.

எமது நாட்டு மக்கள் சூழல் மாசடைவதனால் பலவிதமான நோய்களுக்கு ஆளாகின்றனர் அத்துடன் மக்களின் ஆயுட்காலம் குறைவடைந்து செல்கின்றது. குறைந்த வயதிலேயே அவர்கள் மரணத்தைத் தழுவிக்கொள்கின்றனர். எமது நாட்டு மக்களுக்கு கோடிக்கணக்கான பணத்தை அரச வைத்தியசாலைக்கென அரசு செலவிடுகின்றது. இதனால் அரசு அபிவிருத்தித் திட்டங்களுக்கு தனது பண முதலீட்டை முதலீடு செய்யமுடியாமல் உள்ளது. சூழல் என்பது நாட்டின் வளம் எமது இயற்கை வளங்கள் பேணப்பட்டுள்ள இடம் எமது சூழலேயாகும். காடழிப்பினால் நாட்டில் மழையின்மை ஏற்படுகின்றது. இதனால் பெரும்போக சிறுபோக நெற்செய்கை பாதிப்படைகின்றது. அத்துடன் விவசாயம் வீழ்ச்சியடைகின்றது. நாட்டின் உற்பத்தி குறைவடைகின்றது. எனவே சூழல் இயற்கை எமக்களித்த செல்வம் அதை அழியாது பாதுகாக்க வேண்டியது மனிதர்களாகிய எமது கடமையாகும்.

# 21ம் நூற்றாண்டை நோக்கி

பாரினிலே பரமனால் படைக்கப்பட்ட அனைத்துப் பொருட்களிலும் சிகரமாய் விளங்குபவன் மனிதனே. இவன் இந்த உயரிய சிறப்பினைப் பெறுவதற்கு காரணம் பகுத்தறிவு என்கின்ற சிறந்த மதிநுட்பமாகும். ஆரம்ப காலத்தில் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் தற்காலத்தில் உன்னதமான நிலையில் வாழ்கின்றான். அதற்குக்காரணம் மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமையும் சமாதானமும் சகவாழ்வும் ஆகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலம் தொடக்கம் நவீனகாலமாகிய கணணிகளின் காலமாகிய தற்காலம் வரை மனிதன் தன் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கைக்கொள்பவனாகவே காணப்படுகின்றான். முற்காலத்தில் உணவுக்காக அலைந்து திரிந்த மனிதன் தற்காலத்தில் அதனுடன் இணைந்து நாகரிக மாற்றத்தையும் நுகருகின்றான். அதற்கான அடிப்படைக்காரணம் அவனிடத்தே வளர்ந்த நண்ணறிவுடன் கூடிய சிந்தனையும் முயற்சியுமாகும். இவ்வாறாக மனிதன சகலதுறைகளிலும் அகலக்கால் பதித்து 20ம் நூற்றாண்டில் வெற்றி கொண்டு 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க முனைகின்றான்.

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் சாதனைகள் படைக்கவேண்டுமெனக் கனவு காண்கின்றது மாணவசமுதாயம்-----! உலகம் நாளுக்கு நாளாக புதிய கண்டுபிடிப்புகள் சாதனைகள் ஆகியவற்றை எதிர் கொள்கின்றது. இத்தனைக்கும் மத்தியில் 21ம் நூற்றாண்டைவியக்க வைக்கும் அளவிற்கு விண்வெளிப்பயணங்கள் முன்னணியில் திகழ்கின்றன. பூமியில் இருந்தவாறே சந்திரனுக்குத் தந்தி அடிக்கும் நிலையை உலகம் எய்தி விட்டது. இக்காலம் எனவே உலகை ஆச்சரியமாக்கும் உன்னதமான நாளைய சமுதாயத்தின் தூண்களாக நிற்கும் மாணவ சமுதாயம் அளவில்லாத புதிய சாதனைகள் புரியவிளைகின்றது.

பொருளாதார வளர்ச்சியின்மை, வறுமை, அகதிகள் பிரச்சினைகள், போதைப்பொருள்பாவனை, வேலையில்லாத் திண்டாட்டம் வர்த்தகரீதியான கல்விமுறையின் பரம்பலும், விழுமியங்களின் சிதைவுகளும் போன்ற சவால்களை உலகின் 76 சதவீதமான அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் மண்டல நாடுகள் எதிர்நோக்குகின்றன.

21ம் நூற்றாண்டின் சவால்கள் குறித்த அவுஸ்திரேலிய ஆணைக்குழு பின்வருமாறு கூறுகின்றது. "எதிர்காலம் என்பது நாம் செல்லுமிடமல்ல மாறாக நாம் அதனை உருவாக்குகின்றோம். அதற்கான வழிகள் கண்டறியப்படுவதில்லை உருவாக்கப்படுகின்றன. அத்தகைய வழி முறைகளை உருவாக்குவது உருவாக்குபவரையும் சென்றடையும் இடத்தையும் மாற்றியமைக்கின்றது. இதற்குக் கல்வி அறிவு துணை செய்யும் .

21ம் நூற்றாண்டிற்கான யுனெஸ்கோ கல்வி அறிக்கையிலும் உலக ரீதியாக மனித வாழ்வை மேம்படுத்த உதவும் கல்வி தொடர்பாக பின்வரும் 4 அம்சங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்கிறது. அறிந்து கொள்ளக்கற்றல், செய்யக்கற்றல், இணைந்து வாழக்கற்றல், வாழ்நாள் பூராகவும் கல்வி பெற்று வாழக் கற்றல், இவ்வாறுகல்வி மூலமாக அனைத்துச் சவால்களையும் வெற்றி கொள்ளலாம் என்ற உணர்வு மைய சர்வதேச விழிப்புணர்வாக எழுந்துள்ளது.

இந்த உணர்வுகளை எமது ஆசிரியர்கள் உள்வாங்கி எமது சொத்துக்களான மாணவர்களுக்கு புதிய எழுச்சியுடனும் பொறுப்புணர்வுடனும் கல்வியை வழங்கவேண்டியுள்ளது. கல்வி முறையில் ஆசிரியர்கள் ஒரு பலவீனமான ஊழியர் என்ற நிலை நீங்கி சகல துறைகளிலும் அறிஞர்களாகப் பிரகாசிக்கும் வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக் கொள்ளுதல் அவசியம்.

இன்று பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசு கவர்ச்சிகரமான சம்பளங்களை வழங்குகின்றது. எனவே ஆசிரியர் குறைந்தது 500ரூபாவையாவது நூல்களை வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும். மாதந்தோறும் நூல்களை வாங்கி ஆசிரியர் தனது வீட்டில் சிறிய நூலகமொன்றை அமைத்துக்கொள்ளலாம். இதனால் அவர் தனது அறிவை விருத்தி செய்து கொள்ள உதவுகின்றது. அத்துடன் பாடசாலை நூலகம் ஏனைய பொது நூலகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் அவர் அறிவை வளர்க்கலாம். "ஆசிரியர் என்பவர் தான் மரணிக்கும் வரை நூல்களை வாசித்தல் ஒருசிறந்த பண்பாக கொள்ளப்படுகின்றது.

இதற்கு ஆசிரிய கலாசாலை, பாடசாலைமாணவர்மன்றங்கள் ஏனைய பயிற்சிக்கல்லூரிகள், தொழிற்சங்கங்கள் புதிய வழியைக்

காணவேண்டியுள்ளது. கல்வியிடம் மேலும் பல கடமைகளையும் அபிலாசைகளையும் இன்றைய சமுதாயம் எதிர்பார்க்கின்றது. இதற்காக புதிய அமைப்புக்களையும் செயற்றிட்டங்களையும் ஆக்கி நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு ஆசிரியரின் பலமும் விழிப்புணர்வுமே பயன்படும். எமது ஆசிரியர்களின் கையில் தான் 21ம் நூற்றாண்டு உள்ளது எனில் மிகையாகாது.

மேலும் தொழில்நுட்பத்துறையிலும் உலகம் உன்னத நிலையை நோக்கிச் சென்று கொணடிருக்கின்றது. நவீன வாகனங்கள் இயந்திரங்கள் தொழில்நுட்பச்சாதனங்கள் அளவிலா உற்பத்தி வளர்ச்சி கண்டுள்ளன. உலகம் இன்று சுருங்கி விட்டது. நாம் உலகில் ஒருமூலையில் நடக்கும் சமபவத்தைத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. வெளிநாட்டில் உள்ளவர்களுடன் சுலபமாக அவர்களின் உறவினர் தொடர்பாட இச்சாதனங்கள் உதவுகின்றது. இத்தகைய முறைகளில் முன்னேறிச்செல்லும் மக்கள் வாழ்க்கை 21ம் நூற்றாண்டை சுலபமாக எதிர்கொள்ளச் சாத்தியக்கூறுகள் உள்ளன.

விஞ்ஞானம், கல்வி, கலை, மருத்துவம் போன்ற துறைகளில் வளர்ச்சி கண்டுவந்த 20ம் நூற்றாண்டுமக்கள் 21ம் நூற்றாண்டில் வளமான வாழ்வை அடைவர். மருத்துவத்துறையிலே நவீனசத்திர சிகிச்சைமுறைகள் லேசர் சிகிச்சைமுறைகள் குளோனிங்முறை இனப்பெருக்க முறைகள் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் நவீன நோய்த்தடுப்பு ஊசிகள் என்பன புதிதுபுதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இத்துறையில் அகலக்கால் பெற்ற மக்கள் 21ம் நூற்றாண்டில் எதிர்நோக்கும் முன்னேற்றம் சொல்லிலடங்காதது ஆகிவிடும்.

வளர்ந்து வரும் இவ்வுலகில்20ம் நூற்றாண்டிலேயே வியக்கத்தக்க வளர்ச்சி கண்ட மக்கள் 21ம் நூற்றாண்டில் இன்னும் பாரிய முன்னேற்றத்தைக் காண்பர். இதற்கு மக்கள் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி முன்னேறினால் பாரிய வெற்றி காண்பர். போர்முனைப்பில் ஈடுபடும் வல்லரசுகள் தம்மிட்முள்ள இலத்திரனியல் அணுஇரசாயன ஆயுதங்களை மக்கள் அழிவுக்காக பயன்படுத்துவதை நீக்கவேண்டும். அவற்றை மக்களின் ஆக்க சக்திக்காக பயன்படுத்தி 21ம் நூற்றாண்டை அமைதியும் சாந்தியும் உள்ள பூமியாக்க வேண்டும்.

# ஆசிரியத்துவமும் சமுதாயத்தின் பங்களிப்பும்

கல்வியே வாழ்க்கை. வாழ்க்கையே கல்வி என்பதற்கிணங்க எமது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது கல்வி. வாழ்க்கையில் ஏனைய புத்தி ஜீவிகளோடு தலைநிமிர்ந்தது வாழ்வதற்குக் கல்வி உதவுகின்றது. ஏனைய எல்லாச் செயற்பாடுகளையும் விட அழியாச் செல்வம் கல்வியேயாகும. கொடுக்கக் கொடுக்கக் குறைவில்லாச் செல்வம் கல்வியேயாகும். கொடுக்க கொடுக்க அறிவு பெருகிக் கொண்டே போகிறது.

கற்றல் என்பது ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்புவரை பல்வேறு சந்தர்ப்பங்கள், அனுபவங்கள் வாயிலாக தொடர்ச்சியாக நடைபெறும் நிரந்தர செயற்பாடாகும். அதாவது கருவறையிலிருந்து கல்லறை வரை கல் என்பதாகும். இத்தகைய கற்றல் செயற்பாடுகளை ஒருவரின் குடும்பம், வீட்டுச்சூழல், சமூகச்சூழல் , இயற்கைச் சூழல், செயற்கைச் சூழல் போன்றவற்றினால் பல்வேறு வகைகளின் பரவலாகவும், கூட்டாகவும் நடைபெறுகின்றது. பாடசாலைகளை முதன்மையாகக் கொண்ட கல்வி சார் நிறுவனத்தினூடாக நடைபெறும் கல்விச் செயற்பாடு முக்கியமானது.

கல்வியானது ஒருவரால் மற்றொருவருக்கு வழங்கப்பட வேண்டிய ஒன்றல்ல. மாறாக அது சுயமாக பெற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும் என்பது வலியுறுத்த வேண்டிய விடயமாகும். ஆரம்ப காலக் கல்வி கோலவுருக்கள் ஆசிரிய மையக் கல்வியாகவும் , பாடவிதானங்கள் மனனஞ்செய்வதாகவும், பரீட்சை வினாக்களுக்குப் பொறிமுறை ரீதியில் விடையளிக்கக் கூடியதாகவும் காணப்பட்டது. இதனால் மாணவர்கள் செயற்றிறனற்றவராகவும், கல்வியில் ஆர்வம் அற்றவராகவும் மாறியது மட்டுமன்றி, அவர்களிடம் நெறிபிறழ்வு ஏற்பட வாய்ப்பை உண்டு பண்ணியது என்பது மறக்கமுடியாத உண்மை. அத்தோடு மாணவர்களிடையே வேலைவாய்ப்பின்மை, மனவிரக்தி, குடியாட்சிப் பண்புகளை மதிக்காமை ஆகிய பண்புகள் மலிந்து காணப்பட்டன. இதனால் அமைதியின்மை, பகையுணர்வு, பாடசாலை இடைவிலகல், கல்வி வெளியீடுகள், தொழில் வாய்ப்புக்களுக்குப் பொருந்தாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்தன.

இவை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மூன்றும் சேர்ந்து சவால்களைச் சந்திப்பதற்காகப் புதிய கல்விச் சீர்திருத்தத்தை முன்வைத்தன.

புதிய கல்விச் சீர்திருத்தம் இன்று மாணவர் மையக் கல்வியாகவே பரிணமிக்கின்றது. மாணவர்கள் செயற்பாடுகளே இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாணவர் உபகரணங்களில் தொட்டுணர்ந்து செயற்படுவதனால் அவர்களுக்குக் கல்வியில் விருப்பம் ஏற்படுகின்றது. அத்துடன் விளையாட்டு முறைக் கல்வி, விநோதச் செயற்பாடுகள் ஆகியன அறிமுகப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தை பெற்றோருக்கு விளக்குவதற்கு ஆசிரியர் முன்நின்று உழைக்கின்றார். இதனால் பெற்றோர் ஆசிரியர் தொடர்பு வலிமையுடையதாகின்றது.

மனிதனைச் சிந்திக்கும் பிராணி எனத் தத்துவஞானி ஒருவர் கூறியுள்ளார். பாரம்பரியமாகத் தரப்படுகின்ற வரைவிலக்கணம் இது. காலத்திற்குக் காலம் முக்கியத்துவம் நோக்கி அறிஞர் சமுதாயம் போற்ற வேண்டிய நிலையிலுள்ளவர்களைப் போற்றிக் கொண்டே வருகின்றது. போற்றப்பட வேண்டியவர்கள் வரிசையில் ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள்.

சமுதாயத்தில அஞ்ஞான இருளை அகற்றி, ஞானஒளியை பரப்பும் உதய சூரியன்களாக நாம் ஆசிரியர்களை இன்று காணலாம். சமய உலகிலும் சரி, விஞ்ஞான உலகிலும் சரி மனம் கொள்ள வேண்டிய ஆசிரிய பரம்பரை ஒன்று உருவாகியே வருகிறது. கல்லால மரத்தின் கீழ் இந்து சமயக் குருபாரம்பரியம் ஆரம்பமாகின்றது. ஆசோக மன்னன் காலத்தில் குளிர்ந்த பௌத்த பாரம்பரியம் ஒன்று பெரு விருட்சமாகின்றது. அதேபோல் ரோமாபுரியில் ஆரம்பமாகிய கிறீஸ்தவமதம். மக்காவிலே நபிகள்நாயகம் அவர்களால் அடியெடுத்து வைக்கப்பட்ட இஸ்லாமிய மதம் என்பவை நதியின் பெரு விருட்சமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. தத்துவ உலகத்தில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ முதலியோரைக் கொண்ட ஒரு குரு பரம்பரை தொடர்கிறது. இதுபோல விஞ்ஞான உலகத்திலே தொலமி, ஆக்கிமிடீஸ், தோமஸ் அல்வா எடிசன், கொப்பனீகஸ் முதலியோர் ஆரம்பித்த குருபரம்பரை ஐன்ஸ்ரீன் வரை வளர்ந்தமை எமக்குப் புரிகின்றது.

மனிதனிடம் மனிதப்பண்புகள் கல்வியினூடாகவே வளர்ந்து வருகின்றது. உளவிருத்தியே மனிதப்பண்பாட்டிற்கு அடித்தளமாகின்றது. உளவளர்ச்சியில் கல்வியின் பெறுமானம் முக்கியத்துவப்படுகின்றது. உளம் பண்பாக வளர்ச்சியடையும்போது மனிதனிடம் அமைதியும், நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்படுத்தப்படுகின்றது. இதற்காக சமூக விழுமியங்கள் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது. கல்வி வாழ்க்கைக்கானது என்ற நோக்கம் அர்த்தமுடையதாகின்றது.

கல்வியினூடாக விஞ்ஞானமும், தொழிநுட்பமும் வேகமாக வளர்ச்சியடைந்தபோது சமூதாயச் செயற்பாடுகள் திறக்கப்பட்டு தொடர்பாடல் விரிவடையத் தொடங்கியது. பல்தேசியச் சமூகச் செயற்பாடுகள் மனித வாழ்வில் உட்புகுந்தன. பல்தேசிய சமூக கலப்புகள் ஏற்பட்டபோது கலாச்சார சீரழிவு ஏற்படத்தொடங்கியது.

மனித செயற்பாடுகள் இயந்திரமயமாகின. மனித சிந்தனைகள், அறிவாற்றல், செயல்திறன்கள் புதிய உலகைக் கட்டியெழுப்புவதிலும் அதற்கப்பால் அடுத்த உலகத்தைப் பற்றியதாகவும் வளர்ச்சியடையத் தொடங்கின. இதற்கமைய கல்வி செயற்பாடுகளிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டன.

மனிதப் பண்புகள் இன்று மதிக்கப்படவில்லை. மாணவர் ஆசிரியர்களை மதிக்கும் பண்பு அருகி வருவதை நாம் இன்று சமுதாயத்தில் காணலாம். பெற்றோர் இவ்விடயத்தில் மாணவர்களை வழிகாட்ட வேண்டும். பெற்றோருக்கு அடுத்த தெய்வங்களாக ஆசிரியர்களைப் போற்ற வேண்டுமென்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

சமூக விருத்தியில் பெண்களின் பங்கு முக்கியமானது. சமூக கலாச்சாரத்தைப் பேணுவதில் அவர்களுக்கு முக்கிய பங்குண்டு. நீரைப் பாதுகாத்தல், உணவு பகிர்தல் , முதியோரைப் பாதுகாத்தல். விருந்தோம்பல், அன்பு, கருணை , சாந்தம், தியாகம் , நிதி போன்றவற்றில் உள்ளுணர்வுகளுடன் முன் மாதிரியாகச் செயற்பட வேண்டும். தாயைப் போல பிள்ளை என்பதற்கிணங்க பின்பற்றல் மூலம் அடுத்த தலைமுறை சமூக விருத்தியில் பொறுப்புடன் செயற்பட

இது வழிவகுக்கும். குடும்பம் பிள்ளையின் முதலாவது கற்றல் இடம். இங்கு பிள்ளை நல் மனப்பாங்கினைப் பெறவகை செய்வதில் பெண்களின் பங்கு முக்கியமானது.

சமூகச் சீர்கேடுகளைக் களைய ஆக்கபூர்வமான சிந்தனை தேவை. இந்தச் சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையில் கல்விச் செயற்பாடுகள் அமையவேண்டும். இதில் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமானது. ஆசிரியர்கள் தம்மைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும். தமது பணியின் முக்கியத்துவத்தைச் சிந்திக்க வேண்டும். கல்வியினூடாக நல்ல மனப்பாங்கினை வளர்க்க வேண்டும். மனித உளம் பண்படையக் கூடிய விதத்தில் கல்வி ஊட்ட வேண்டும்.

சமுதாயத்தில் ஆசிரிய - மாணவர் உறவு சிந்திக்கக் கூடியது. நிழல் எம்மைத்தொடர்வது போல ஆசிரிய மாணவ உறவு தொடர வேண்டும்.

# வடபகுதிப் பொருளாதாரத்தில் பனைவளம்

இந்தப் பூமியில் கற்பகதரு என அழைக்கப்படுவது பனைமரம் ஆகும். இதன் கருத்து கேட்பதெல்லாம் எமக்குத் தருவதாகும. மரத்தின் அடி வேரிலிருந்து உச்சி நுனிவரை மனிதருக்குப் பயன்படுவது பனைமரமாகும். பண்டைக் காலத்திலிருந்தே பனை மரம் மனித வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருந்ததாக வரலாறுகளிலிருந்தும், இலக்கிய ஆதாரங்களிலிருந்தும் அறிய முடிகிறது. பனையுள்ள நாட்டில் பஞ்சமில்லை பனையின்றி வாழ்வில்லை என்ற முதுமொழிகள் பனையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த பனையிலிருந்து பல்லாயிரக் கணக்கான பயன்களைப் பெறுவதற்கு ஆதிகால மக்கள் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக திருக்குடந்தை அருணாசலப் புலவர் இயற்றிய தாலவிலாசம் என்ற பனையைப் பற்றிய நூலில் 801 விதங்களில் பனைமரம் பயன்பட்டதாக கூறினார்.

பனையானது பல நூற்றாண்டு காலமாக இலங்கையில் வரண்ட பகுதிகளில் சிறப்பாக வடபகுதியில் இயற்கைத் தாவரமாக வளர்ந்த வரும் ஒரு பயிராகும். பனையின் பிரயோசனங்கள் பல்லாண்டு காலமாக அனுபவிக்கப்பட்டு வந்த போதும் அடிப்படையிலான முக்கியத்துவமும் தேவையும் அண்மைக்காலத்திலேயே எழுந்தவையாகும். இன்றைய பொருளாதார வீழ்ச்சியடைந்த காலகட்டத்தில் விவசாயப் பொருட்களுடன் பனைமரச் செய்கையும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாண விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்களது மனித உழைப்பும் முயற்சியுமே முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால் பனை மரச் செய்கையைப் பொறுத் வரையில் ஏனைய பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்றவற்றிற்கு எடுக்கவேண்டிய முயற்சிகள் எதுவும் எடுக்க வேண்டியதில்லை.

சிறுபான்மைத்தமிழர் என்னும் இனமே சீவல்தொழிலைச் செய்து வந்தது. பனம்பொருள் உற்பத்தியை விருத்தி செய்ய முடியாமல்

இருப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் சமூக அமைப்பும் ஒரு காரணமாக அமைகின்றது. ஆரம்பத்தில் இத்தொழில் இடம் பெயரும் விவசாயிகளாலும், கள் இறக்கும் தொழிலாளர்களாலுமே செய்யப்பட்டன.காலவோட்டத்தில் இப்பிரதேசங்களில் சாதிப் பிரிவினைகள் வேரூன்றியபோது இத்தொழிலானது கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கென வ்ரையறுக்கபட்டது. இவர்கள் தொழில் காரணமாக பொருளாதாரம், அந்தஸ்து, கல்வி ஆகிய துறைகளில் சமுதாயத்தின் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டனர். இத்தொழிலை ஏனைய தொழில்களுடன் ஒப்பிடும்போது இதற்குத் தேவையும், வேலைவாய்ப்பும் இருந்தபோதிலும் சமூக அந்தஸ்து காரணமாக ஏனைய சமூகத்தினர் இத்தொழிலைச் செய்ய முன்வருவதில்லை. பொது இடங்களில் இத்தொழிலாளர்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுவதால் பெரும்பாலானோர் வேறு தொழில்களைச் செய்தனர்.

1972ம் ஆண்டு மரவரிமுறை அழிக்கப்பட்டு கூட்டுறவுத் தவறணை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் அன்று நிதியமைச்சராகப் பதவிவகித்த கலாநிதி என்.எம். பெரேரா அவர்களேயாவார. இப்பாரிய மாற்றமானது தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது எனக் கூறலாம். இதற்கு முன் தவறணைகளை வைத்திருந்த உரிமையாளரின் பின்னணியில் கூட்டுறவுத் தவறணைகள் எரிக்கப்பட்டன. பலவிதமான இன்னல்களைச் சந்தித்த போதிலும் கூட்டுறவுத் தவறணைகள் இன்று தலைநிமிர்ந்த நிற்கின்றன.

பனைப் பயிரைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாண மாவட்டத் தில் 3.5 மில்லியன் பனைகள் உண்டு என மதிப்பிடப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபை 1978ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. தற்போது 2001ம் ஆண்டு மார்கழி மாதம்தொடக்கம் இந்துக்கலாச்சார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இச்சபையின் பிராந்திய நிலையங்கள் மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில்இயங்கி வருகின்றது. இதன்பயனாக 19 தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இத்துடன் 2000 தவறணைகளும் காணப்பட்டன. இச்சங்கங்களிலும், தவறணைகளிலும் இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழில் புரிகின்றனர்.

நாள்தோறும் விற்பனையாகாத கள்ளு தவறணைகள் தோறும் ஊற்றப்பட்டன. இதனைக் கருத்திற்கொண்டு, இக்கள்ளைப் பயன்படுத்தி சாராய வடிசாலை கைதடியில் ஆரம்பிக்கபட்டது. 1975ம் ஆண்டு உலகிலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட வடிசாலை இது ஆகும். அதன்பின் திக்கம் வடிசாலை 1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் தரமான சாராயம் உற்பத்தி செய்யப்பட்டது. முல்லைத்தீவு, சங்கானை, ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் சிறிய வடிசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உற்பத்தி விதைகள் மூலம் பெறப்படும் களியினால் பனாட்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பனங்களி சூரிய ஒளி படுவதன் மூலம் பனாட்டாகின்றது. இவ் உற்பத்தி விதைகள் மூலம் பெறப்படும் பானங்கள், பழப்பாகு, பனாட்டு , பனஞ்சீனி, பனங்கட்டி , ஒடியல் , புழுக்கொடியல் ஆகியவற்றைக் கற்பகம் என அழைக்கப்படும் பனை அபிவிருத்தி சபை விற்பனை செய்து வருகின்றது. இன்று எமது பிரதேசத்தில 10 கற்பக விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன.

சுயவேலைவாய்ப்பு மூலம் இளம் விதவைகள், ஏழை இளம் பெண்கள் ஆகியோர் பனை ஓலை மூலம் பன்ன வேலைப் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். இந்த உற்பத்திப்பொருட்களை கற்பகம் விற்பனை செய்கின்றது. பனை அபிவிருத்தி சபை அவர்களுக்குத்தேவையான மூலப்பொருட்களையும், சிறு முதலீட்டாளர்களுக்கான குறுகிய காலக் கடனுதவியையும் வழங்குகிறது. அங்கத்தவர்களின் சேமிப்புப்பழக்கம் விரிவாக்கப்படுகின்றது. மரபு ரீதியான உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்வதிலும், விற்பனை செய்வதிலும் உற்பத்தியாளருக்கும், விற்பனையாளருக்கும் முறையான வருமானத்தை அவர்களின் உற்பத்தி மூலம் பெற்றுக் கொடுக்கின்றது.

1982ம் ஆண்டு தொடக்கம் பனை அபிவிருத்திச் சபை பனை விதைகளை மீள நடுவதில ஆர்வங்காட்டி வருகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கநகர் மாமுனை ஆகிய இடங்களில 500 ஏக்கரில் இவ் விதைகளை நாட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது. வவுனியாவிலுள்ள புளியங்குளம், மட்டக்களப்பிலுள்ள ராஜதுரை பண்ணையில் 50 ஏக்கரிலும் மன்னாரிலுள்ள நாவில் குளத்திலும் 10 ஏக்கரில் பனம் விதைகளை நடப் பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது.

2001ம் ஆண்டில் 2.5 லட்சம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

பனை ஓலையிலிருந்து பெட்டி, கடகம், பாய், தொப்பி, தடுக்கு போன்ற கைப்பணிப்பொருட்களும் பிற கைப்பணிப் பொருட்களும் ஆக்கப்படுகின்றன. இவை தவிர வீடு வேயவும் , கூரை வேயவும், வேலியடைக்கவும, வரிச்சுமட்டையாகவும், கால் நடைகளின் உணவாகவும, வீட்டின் அலங்காரப் பொருளாகவும் பயன்படுகின்றது.

வீட்டுக் கூரை, மரங்கள், துலா, தளபாடங்கள், கைப்பணிப்பொருட்கள் இதனால் ஆக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் கள்ளு விற்பனையில் மாத்திரம் ஈடுபட்டிருந்த சபை தற்போது பல்வேறு பயிற்சிகளைக் கொடுப்பதுடன் உற்பத்திகளுக்கும் ஊக்கமளித்து வருகின்றது. அத்துடன் இச்சமூகத்தின் இளைஞர் கல்வி மேம்பாட்டிற்கான கல்விப் பிரிவையும், தொழிலளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினையும், விபத்து நிதி உதவியினையும் இப்பனை அபிவிருத்திச் சபை வழங்கி வருகின்றது.

பனையின் வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து வறிய மக்களுக்கு வாழ்வளிக்கலாம். சுற்றுப் புறச் சூழலைப் பொதுகாத்துக்கொள்ளலாம் கடற்கரையோர, வரண்ட பிரதேச நுண்ணிய சூழலைப் பேணிக் கொள்ளலாம், நவீன விஞ்ஞான முறைகளைக் கையாள்வதன் மூலம் பனை உற்பத்தியை இச்சபை முன்னேற்றமடையச் செய்யலாம்.

## விளையாட்டுத் துறைகளின் மகத்துவம்

நாம் கல்வியை எவ்வாறு முக்கியமாகக் கருதுகின்றோமோ அதேபோல விளையாட்டுக்களையும் முக்கியமானதாகக் கொள்ள வேண்டும். இதனால்தான் பாடசாலைகளில் உடற்கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது எனக் கூறலாம். பாடசாலைகள் ஆரம்பித்ததும் மாணவர்கள் கற்றலுக்கு ஆயத்தமாக 15 நிமிடங்கள் உடல் நலனோம்புப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அதன் பின்னரே மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் அதுமட்டுமல்ல உயர்வகுப்புக்களில் உடற்கல்வி ஒருபாடமாகப் போதிக்கப்படுகின்றது. வருடாந்த மெய்வன்மைப்போட்டி, வலயமட்டத்திற்கான வலைப் பந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவை வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. விளையாட்டின் மூலம் உடல் வலிமை யடைவதுடன் உளவலிமையும் ஏற்படுகின்றது.நாம் விளையாட்டை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். சிறு விளையாட்டு, உள்ளக விளையாட்டு, வெளியக விளையாட்டு என்பவை ஆகும். சிறு விளையாட்டில் சடுகுடு, கிளித்தட்டு என்பனவும் உள்ளக விளையாட்டில் மேசைப்பந்து, பூப்பந்து, ரெனிஸ், கரம், செஸ் என்பனவும் வெளியக விளையாட்டில் உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், றகர் என்பனவும் அடங்கும்.

விளையாட்டு தனிமுறையிலோ குழுமுறையிலோ போட்டியை ஏற்படுத்தும். இவ்விளையாட்டுக்கள் திறமையாக அமைக்கப்பட்ட இரு குழுக்கள் விளையாட்டில் வெற்றி பெற எத்தனிப்பது போட்டியாகும். அந்த நேரம் மற்றக்குழு அந்த எதிர்ப்பைத் தாங்கி விளையாடுவது மனங்கொள்ளத்தக்க காட்சியாகும்.

பயிற்சியே முழுமையளிக்கின்றது. என்பதற்கேற்ப பாடசாலை களில், உடற்கல்வி ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. விளையாட்டுகளில் வெற்றி தோல்வியைச் சமனாகக்கணிக்கும் மனப்பாங்கு, விட்டுக்கொடுக்கும் தன்மை, மனோதிடம் ஆகிய சிறந்த ஒழுக்கநெறிகள் வளர்கின்றன. நாம் விளையாடும் போது நடுவரின் தீர்ப்பு பாதகமாக அமையினும் நல்ல பண்புள்ளவர்களாக நடக்க வேண்டும். அறிஞர் அண்ணா கூறியது போல "மாற்றான் வீட்டுத்தோட்டத்து மல்லிகையும் மணங்கமழும்"

எதிர் அணியிடம் திறமை காணப்படின் அதனைப் பாராட்டத் தவறக்கூடாது. வெற்றி தோல்விகளை விமர்சிக்காமல் களத்திலேயே அதனை விட்டுவிடும் தன்மை எம்மில் மேலோங்கிக் காணப்பட வேண்டும்.

ஒலிம்பிக்கின் தாரக மந்திரம் "வெற்றி பெறுவதை விட பங்கு பற்றுவது மேலானது" என்பதாகும். மாணவர் கல்விக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் விளையாட்டிற்கு கொடுப்பதில்லை. எந்த விளையாட்டு ஆயினும் அதில் பூரணபயிற்சி வேண்டும்.

அத்துடன் அந்த விளையாட்டின் நுட்ப முறைகளைத் துறைபோகக்கற்க வேண்டும். எமது நாட்டின் தேசிய விளையாட்டாக கரப்பந்தாட்டம் ஆகும். ஆனால் எமது நாட்டில் சர்வதேச விளையாட்டாக துடுப்பெடுத்தாட்டமே (கிரிக்கட்) காணப் படுகின்றது.இலங்கை அணியின் துடுப்பெடுத்தாட்ட வீரர்களில் சனத் ஜயசூரியா, முத்தையா முரளீதரன் ஆகியோரை உலகப்புகழ் பெற்ற வீரர்களாக குறிப்பிடலாம். பாடசாலைகளில் சிறந்த முறையில் விளையாடுவதன் மூலம் தேசிய மட்டத்தினை எட்டமுடியும்.

கொழும்பில் சர்வதேசப்புகழ் மிக்க பயிற்றுனர்களால் உதைபந்தாட்டத்தில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறந்த வீரகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. அங்கு எமது மாவட்டத்தை விட சிறந்த நவீன நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அப்பயிற்சிகளில் பல செய்கை முறைப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு அதில் சிறந்த நுட்ப முறைகளை அறிவதோடு தனது உடலை உறுதியாக வைத்திருக்கவேண்டும். உடல் உறுதிக்கு போஷணைப் பெறுமானமுள்ள உணவு உட்கொள்ளல் அவசியமானதாகும்.

இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் சதுரங்கம் பிரபல்யம் பெற்று வருகின்றது. சதுரங்கம் ஒருவரின் தர்க்க சிந்தனை வளர்ச்சி, கணிப்பீட்டுத் திறன் விருத்தி, ஞாபக சக்தி என்பவற்றிற்கோர் சிறந்த பயிற்சியாகும். எமது பாடசாலைகளிலும் சதுரங்கத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் மூளைத்திறனை விருத்தி செய்யலாம்.

1948 ஒலிம்பிக் போட்டியில் (சுதந்திரத்தில்) எமது நாட்டைச்சேர்ந்த டங்கன் வைற் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2ம் இடத்தில் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார். மிலேனியம் ஆண்டில் (2000ல்) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் சுசந்திகாஜெயசிங்க 3ம் இடத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இச்சாதனை 5 தசாப்தங்களுக்குப் பின்னரே நடைபெற்றது. என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஓடிவிளையாடுவதனால் சீரான குருதிச் சுற்றோட்டம் நடைபெறுகின்றது. உடலின் வேகம் ,பலம் ,துரிதம் என்பனவும் அதிகரிக்கும். விளையாட்டுப்போட்டிகள் உடற்கட்டு ,உடல் வனப்பு நோயற்ற வாழ்வு போன்ற உடல் சம்பந்தமான வெகுமதியை அளிக்கின்றது.

குழுநிலை விளையாட்டுக்களின் மூலம் ஒற்றுமையே முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே வாழ்க்கையிலும் நாம் ஒற்றுமை, கீழ்ப்படிவு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜைகளாக வாழ்வோமாக.

**இன்று எமது நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதால் மரண தண்டனையை நடைமுறைப் படுத்துவது நியாயமானதாகும்** என்ற கருத்தினை ஆதரிக்கும் ஒருவருக்கும் அதனை எதிர்க்கும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் ஒரு உரையாடல் (க.பொ.த. சாதாரணம்2000மார்கழி)

**நாதன்**:-இன்று எமது நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதால் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது நியாயமானதாகும். மது அருந்தல் போதைப்பொருள் பாவித்தல் ஆகிய தீய பழக்கங்களுக்கு மக்கள் அடிமையாகின்றனர். இதன் காரணமாக எமது நாட்டில் குற்றச்செயல்கள் தினந்தோறும் அதிகரித்து வருவதை நாம் பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். கணவன் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வருவதனால் மனைவியுடன் குடும்பத்தில் சண்டை ஏற்படுகின்றது. அதன் காரணமாக கணவன் மனைவியை கொலை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

**குமார்**:-மதுஅருந்துதல், போதைப்பொருள் அருந்தும் கணவனை நல்ல திசைக்கு மாற்றுகின்ற நல்ல மனைவியையும் இச்சமுதாயத்தில் நாம் காண்கின்றோம். பிள்ளைகள் வளர்ந்த பின் தங்கள் தந்தையைத் திருத்துகின்ற நிலையையும் நாம் அன்றாடம் காண்கின்றோம்.

**நாதன்**:-காதல் நட்பு பாலியல் வன்முறையைத் தோற்றுவிக்கின்றது. இதற்கு நான் ஒரு உண்மைக கதையைக் கூறுகின்றேன். இந்தியாவில் அபிரா என்ற க.பொ.த உயர்தர மாணவி இவள் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவள். அபிரா அழகிய தோற்ற முடையவள். அவள் ரியூசன் படிப்பதற்காக தினமும் பேருந்து வண்டியில் செல்பவள். ஒருநாள் அவள் ரியூசன் முடிந்து பேருந்து நிலையத்திற்கு வந்தாள் இறுதிப்பேருந்து சென்றுவிட்டது. பேருந்து சென்றாலும் அவளின் மாமனார் மோட்டாண் வண்டியில் ஏற்றிச்செல்வார். ஆனால் அன்றைய தினம் அவரின் மோட்டார் வாகனம் பழுதடைந்தமையால் அவளை ஏற்ற மாமனாரும் வரவில்லை. இதனைச் சாதகமாக

பயன்படுத்தினான் ரமணன் என்ற க.பொ.த. (சா.த) மாணவன். அவன் அபிராவை நோக்கி தான் மிதிவண்டியில் ஏற்றிச்சென்று வீடு சேர்த்து விடுவதாகக் கூறினான். பொழுது மறைந்ததனால் அவளும் ஒத்துக்கொண்டாள். ரமணன் மிதி வண்டியில் அபிராவை ஏற்றிக்கொண்டு சென்றான். பாதையில் அவளின் உடல் உரச ரமணனுக்கு காம உணர்ச்சி ஏற்பட்டது. ரமணன் அபிராவை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தக் கேட்டான். அவள் ஒத்துக்கொள்ளவில்லை. ரமணன் சன நடமாட்டமில்லாத இடத்தில் இறக்கி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி தனது பட்டியினால் கழுத்தை நெரித்து கொன்று கிணறு ஒன்றில் போட்டான். அபிராவின் வீட்டுக்காரர் அவளைத் தேடினர். பிறகு அவளுக்கு ஏற்பட்ட அவல நிலையை அவர்கள் அறிந்து பெருங்கவலை அடைந்தனர். கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டான் ரமணன். இறுதியில் அவனுக்கு மரண தண்டனையை நீதிமன்றம் வழங்கியது. குற்றச் செயலுக்கு மரணதண்டனை வழங்குவது சரியானது தான்.

குமார் :-ரமணன் உணர்ச்சி மேலீட்டைக் கட்டுப்படுத்தி அபிராவை மிதிவண்டியில் சேர்த்திருந்தால் அவன் நேர்மையான மாணவன் எனச் சமூகத்தினால் பாராட்டப்பட்டிருப்பான். ரமணனால் ஆசையைக் கட்டுப்படுத்தியிருந்தால் கொலைக்குற்றத்திலிருந்து தப்பியிருப்பான். அபிரா பாலியல் வல்லுறவுக்கு ஒத்துக் கொண்டிருந்தால் இவ்விபரீதம் ஏற்படாமல் இருந்திருக்கும் ரமணனின் உணர்ச்சி மேலீட்டினால்தான் இந்நிகழ்வு நடந்திருக்கிறது. அதனால் அவருக்கு மரணதண்டனை வழங்காமல் வேறு ஏதாவது ஒரு தண்டனையை வழங்கியிருக்கலாம்.

நாதன்:-வவுனியாவில் லீலா என்ற யுவதி குடும்பக் கஷ்டத்தின் பேரில் குவைத்திற்கு சென்றாள் அவள் அங்கு சென்ற 2 மாதத்திற்குள் கொலை செய்யப்பட்டாள். அவள் கொலை செய்யப்பட்டு பின் அவளின் உடல் வீட்டிற்கு அனுப்பப்பட்டது. இவள் அங்கு தவறு செய்தமையால் தான் இந்நிலை ஏற்பட்டது. இத்தவறு செய்தமைக்கு என்ன பின்னணியினால் ஏற்பட்டது என்பதை சிந்தியுங்கள்.

குமார்:-ஏழ்மையின் காரணமாக குவைத்திற்குச் சென்ற யுவதிக்கு இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது. அந்த யுவதி மீதிருந்த பகைமை காரணமாகவே ஏற்பட்டது. இக்கொலை செய்தவருக்கு மனித நேயம், இரக்கம் ஆகியன இல்லையா?

நாதன்:-குற்றம் செய்பவன் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும். அது மரண தண்டனையாகவே அமைய வேண்டும்.

குமார்:-மது அருந்துதல், போதைப்பொருள் பாவித்தல் ஆகிய பழக்கங்களை ஒழிப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமெனச் சிந்திப்பது அவசியமாகும். சிறு வயதிலிருந்து குழந்தைகள் மத்தியில் நற்குணப் பண்புகளை வளர்த்து வரப் பெரியோர்கள் உதவ வேண்டும். செயற்கை முறையில் காணும் இன்பம் துன்பத்திற்கே இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையை இளஞ் சந்ததியினருக்கு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் தொழில் நேரங்களைத் தவிர விளையாட்டு நாடகம் சமய வழிபாடு சமூக சேவை ஆகிய சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் இளைஞர் யுவதிகள் அறிவு மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்யலாம். இதனால் சமுதாயத்தில் நற்பிரஜைகளாக இளஞ் சமுதாயம் வாழ முடியும்.

**''இன்றைய இளைஞர்கள் எமது சமுதாயத்தைச் சீரழிக்கின்றார்கள்''** என்ற கருத்தினை ஆதரிக்கும் ஒருகருக்கும் அக்கருத்தை எதிர்க்கும் மற்றொவருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் (1999 மார்கழி தமிழ் 11 க.பொ.த. சாதாரணம்)

இந்த உரையாடலின் இக்கருத்தை ஆதரிப்பவராக அமலன் என்பவரும் இக் கருத்தை எதிர்ப்பவராக விமலன் என்பவரும் காணப்படுகின்றார்கள்.

**அமலன்:-** விமலா வணக்கம்! உன்னைக்கண்டு நீண்ட நாளாகுது எங்கே சென்றாய்?

**விமலன்:-** அண்மையில் அரசாங்கமும் புலிகளும் சேர்ந்து தரைவழிப் பாதை திறந்தார்கள் அதுதான் நான் ஒருக்கால் கொழும்பிற்கு போய்விட்டு வாறேன்.

**அமலன்:-** இன்றைய இளைஞர்கள் எமது சமுதாயத்தைச் சீரழிக்கிறவர்களாக காணப்படுகின்றார்கள் இதற்கு முக்கிய காரணம் எமது கடந்த கால கல்விக் கொள்கையில் ஏற்பட்ட குறைபாடேயாகும். இன்றைய இளைஞர்கள் க.பொ.த (சா.த- உ.த )ஆகிய வகுப்புக்களில் சித்தியடைந்தும் வேலை யில்லாமல் ஊர்சுற்றித் திரிபவர்களாகவே காணப் படுகின்றார்கள். அதுமட்டுமல்ல பல்கலைக்கழக பட்டதாரிகளும் வேலை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் மனதில் விரக்தி அடைந்தவர்களாக வீட்டிற்கும் நாட்டிற்கும உதவாக் கரைகளாகத் திரிகிறார்கள். அரசு இவர்களுக்கு உரிய காலத்தில வேலை வாய்ப்பு அளிக்க வில்லை.

**விமலன்:-** இந்த இளைஞர்கள் வேறு வேலைகளுக்குச் சென்றாலும் தமக்கு கௌரவக் குறைவு என நினைக் கிறார்கள். தமது படிப்பிற்கு ஏற்ற தரமான வெண்கல உத்தியோகங்களேயே விரும்புகிறார்கள் அந்த உத்தியோகங்களை அரசு இளைஞர் களுக்கு வழங்க இழுத்தடிப்பு செய்து கொண்டே போகின்றது.

இதற்கு இப்போதைய கல்விச் சீர்திருத்தத்தில் தொழில் நுட்பப்பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதனால் அம்மாணவர்களுக்கு வேலையின்மைப் பிரச்சினை ஓரளவாவது தீர்க்கப்படும். அதனால் இளைஞர்கள் சமுதாயத்தில் நற் பிரஜைகளாக வாழக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

**அமலன்:-** இவ்வயதில் இளைஞர்கள் பெற்றோருக்கு அடிபணிவதை விட தம் ஒத்த பாலினராகிய குழுவிற்கு அடிபணியும் தன்மை யுடையவர்களாகவே காணப்படுவர். எனவே பெற்றோர் தம்பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டும். அவற்றுடன் புகை பிடித்தல், மதுஅருந்துதல், போதைப்பொருள் பாவித்தல் போன்றவற்றிற்கு அடிமையாகின்றனர்.இவற்றைப் பொழுது போக்கிற்காக ஆரம்பிக்கும் இளைஞர்கள் பின் தமது பழக்கமாக மாற்றி சமுதாயத்தில் தீயவர்களாக ஏனையோரால் கணிக்கப்படுகின்றனர்.

**விமலன் :-** இன்று இளைஞர்கள் பெற்றோர் ஆசிரியர் முதியோர் ஆகியவர்களை மதிப்பது அருகியே காணப்படுகின்றது. அவர்கள் தமது பொழுது போக்குகளை தமது வீட்டிற்கு பயன்தரக் கூடியவீட்டுத் தோட்டத்தை அமைக்கலாம். இதனால் அவர்களுடைய மனப்பாங்கு வீட்டிற்கு உதவுபவர்களாக மாற்றமடையும் அத்துடன் தமது கல்வி அறிவைப் பெருக்க நூலகங்களைப் பயன்படுத்தலாம். இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பெற்றோர் பல இன்னல்களை அடைகின்றனர் என்பதை எடுத்துக் கூற வேண்டும்.

**அமலன்:-** இளைஞர்கள் தமது பெற்றோருடன் படமாளிகைக்கு செல்ல விரும்புவதில்லை. இளைஞர்கள் தம் ஒத்த பாலின குழுவினருடன் திரைப்படங்களைப் படமாளிகையில் பார்க்க விரும்புகின்றனர். அத்துடன் ஆபாசப் படங்களைப் பார்ப்பதன் மூலம் பாலியல் தொடர்புகளில் விருப்பமுள்ளவர்களாக மனமாற்றம் அடைகின்றனர்.

**விமலன்:-** அவ்வாறு இளைஞர்கள் விரும்பவில்லையாயின் வீட்டில் பெற்றோர் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்

அவர்களுக்கென வீட்டிலேயே தொலைக்காட்சி, இன்ரனெற் போன்றவற்றைப் பார்ப்பதற்கு பெற்றோரும் அவர்களுடன் சேர்ந்து படத்தைப்பார்க்க வேண்டும். அப்போது பெற்றோரினால் சிறந்த படங்களை இளைஞர்கள் பார்ப்பதற்கே வாய்ப்பளிப்பார்கள்.

அமலன்:- முன்பருவங்களை விட யௌவன பருவத்தில் இளைஞர்கள் எதிர்ப்பாலாலருடன் பழகுவதையேவிரும்புவர். படிப்படியாக இளைஞர்கள் எதிர்ப்பாலாருடன் பழகும் போது காதல் எனத் தவறாக கருதக்கூடும்.இத்தொடர்பு தொடர்ந்து ஏற்பட்டால் பாலியல் தொடர்பு ஏற்படவும் இடமுண்டு. அந்த நேரத்தில் இளைஞனுக்கு எதிர்ப்பாலாருடன் ஏற்படும் ஆசை காரணமாக உணர்ச்சி வரச்சந்தர்ப்பம் ஏற்பட்டு பாலியல் வல்லுறவு என்னும் பாழ்கிணற்றில் தள்ளி விடுகின்றது.

விமலன்:- மனதில் தோன்றும் எண்ணங்கள் ஆசைகள் ஆகியவற்றைப் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகைய விடயங்களில் அதிக அக்கறைகொள்ளக் கூடாது. இக்காதல் பாலியல் தொடர்பு காரணமாக கல்வி எதிர்காலத்தைப் பாழடித்தல் போன்ற நிலமைஏற்படலாம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும். இளைஞர் தவறான வழியில் திசை திரும்பி விடக் கூடியவர்கள் இச்சமுதாயத்தில் உள்ளனர் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும் எனவே இன்றைய மாணவர்களே நாட்டின் எதிர்கால ஒளி விளக்குகள் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். அத்துடன் கல்வி உலகில் சாதனை படைக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மாணவர் வாழ வேண்டும்.

## கலைகளுள் நாடகக்கலையின் முக்கியத்துவம்

மனதைச் சமநிலைப்படுத்தி வைப்பதற்கு கலை உதவுகின்றது. இக்கலைகளுள் இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றை முதன்மையானவைகளாக எடுத்துக்கூறலாம். இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லை. சிவன் கூட இசைக்கு மயங்கி இராவணனை விடுவித்த வரலாறு உண்டு. 12ம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து வந்த அந்தகனான யாழ்பாடி ஒருவன் இங்கே மன்னன் முன்பு யாழ் வாசித்துப்பாடி கிராமம் ஒன்றினைப் பரிசாகப்பெற்றான். இதன் காரணமாக அக்கிராமம் யாழ்ப்பாணம் எனப்பெயர் பெற்றது. என வரலாறு கூறுகின்றது. நடனம் செவி, கண் ஆகிய இரு புலன்களுக்கும் விருந்து அளிக்கின்றது. இந் நடனம் முக பாவங்கள், அங்க அசைவுகள் ஆகியவை மூலமாக ஆடப்படுகின்றது. இதனூடாக மக்களிடையே நாட்டிய நாடகம் பிரபல்யம் பெற்றுள்ளது. நாம் ஓவியத்தை பார்த்து ரசிக்க முடிகின்றது. சிறந்த ஓவியத்திற்கு எடுத்துக்காட்டாக அஜந்தா ஓவியம் இந்தியாவில் சிறந்து விளங்குகின்றது. நவீனத்துவ ஓவியம் சிந்தனைக்கு விருந்தளிக்கின்றது. சிற்பம் ஆலயங்களில் கைவந்த கலையாக மிளிர்வதை நாம் காண்கின்றோம்.

நாடகம் என்ற சொல்லுக்கு நாடு+அகம் என்ற இருசொற்கள் உள்ளன. இதனை விரித்துக் கூறுவதாயின் ஒருநாட்டின் நிலையைப் பிரதிபலித்துக் காட்டுவதே நாடகம் ஆகும். நுண்கலைகளுள் நாடகக் கலைக்குத் தனியிடம் உண்டு. கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிப்பதுடன் சிந்தனையைத் தூண்டி கருத்துக்கு விருந்தளிப்பது நாடகக்கலையாகும். இக்கலை இசைக்கலையுடன நெருங்கிய தொடர்புடையது. நடிப்புக்கலையின் தோற்றத்திற்கு பலவகையான உதாரணங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய நடிப்புக்கலை மனிதன் தோன்றிய காலத்திலேயே ஆரம்பித்தது. படிப்படியாக வளர்ந்து நாட்டியமாகவும் கூத்தாகவும் நிலவி இறுதியில் நாடகம் என்ற உருவகம் பெற்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக எண்ணற்ற கோடி இதயங்களுக்கு எழுச்சியையும், மகிழ்ச்சியையும் வழங்கியது. இந்நாடகம் கலைக்கருவூலமாக கற்பனையூற்றாக பண்டுதொட்டு இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இசை, நடனம், நாடகம் போன்ற கலைகள் அனைத்தும் கோயில்களின் மடியிலேயே வளர்ந்தன. தமிழகத்திலே மட்டுமன்றி, உலக நாடுகள் அனைத்திலும் இவ்வுண்மையைக் காணலாம். பண்டைய நாடகங்கள் ஆடலும் பாடலும் இணைந்த அரங்கமாகவே பெரிதும் இணைந்து காணப்பட்டன. கதை தழுவிய கூத்துக்கள் யாவும் நாடகக்கதையைப் பாடல் ஊடாகவும் ஆடல் ஊடாகவும் நடிகர் நடித்துச்சென்றனர். ஆகவேதான் நடன நாடகங்கள் யாவும் நாடகக்கலைகளுள் ஆராயப்பட்டன.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்றால் அக்கலைகளுள் மொத்த வடிவமாக நிலை பெற்றுத்திகழ்வதால் தான் கலைகளுக்கெல்லாம் தலையாய கலை நாடகக்கலை என அறிஞர்கள் கூறுகின்றனர். நாடகக்கலையின் தோற்றுவாய், நாடக உத்தி, நடிப்பு வளர்ச்சி எப்போது தோன்றியிருக்கக்கூடும் என்பதைப்பற்றி சற்று ஆழமாக சிந்திப்போம். மனிதர்கள் எப்போது இவ் உலகில் தோன்றினார்களோ அப்போதே இந்நடிப்புக்கலையும் தோன்றியிருக்கலாம் என்பதனை நாம் அனுமானித்துக் கொள்ளலாம்.

நாடகம்,நாட்டிற்குஅணிகலம்,நாகரீகத்தின்அளவு கோல், நாட்டினுடைய பிரதிபலிப்பு, பாமரர்களின் பல்கலைக்கழகம், சமுதாயச் சீர்கேடுகளைத்தகர்க்கும் வாள்வீச்சு, காலத்தின் கண்ணாடி, வாழ்க்கையின் விளக்கம், கற்பனைக் கருவூலங்களை விளக்கும் அற்புத விளக்கு என எத்தனையோ கற்பனை வடிவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அத்தனை சிறப்புக்களுக்கும் உரிய ஆற்றல்கள் அனைத்தும் பெற்ற அரிய கலைதான் நாடகக்கலை ஆகும்.

ஒரு ஊமையனும், ஒரு பேசும் திறனும் பெற்ற ஒருவனதும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் போது இங்கு சைகை மொழியே பரிமாற்றப்படுகின்றது. இங்கே நடிப்புக்கலையே பரிணமிக்கின்றது.பேசும் திறன் பெற்றவரும் மற்றவருக்காக சைகைமொழியே பயன்படுத்துகின்றார்.

சில குழந்தைகள் சேர்ந்து ஏகாந்தமாக விளையாடும் போது நாம் கவனிக்க வேண்டும். அப்போது அங்கே மணமகன்-

மணமகள்,கல்யாண ஊர்வலம், மேளதாளங்கள்,சந்தனம் தாம்பூலம் வழங்கல் போன்ற காட்சிகளைக் காணலாம். இன்னும் சில குழந்தைகள் அம்மா,அப்பா எனத் தம்மைப் பாவனை செய்து மண்சோறு, கறி சமைப்பதையும் காணலாம். வேறு சில குழந்தைகள் சமகால நிகழ்வான இராணுவத்தினர், பொடியங்கள் எனவும் விளையாடுவர். சில குழந்தைகள் கள்ளன், பொலீஸ்காரன் விளையாடுவதையும் நாம் பார்க்கலாம். இதன் மூலம் குழந்தைகள் குற்றமிழைத்ததவருக்குத் தண்டனை வழங்குவர். இதனால் அவர்கள் குற்றமிழைத்தவர் தண்டனை பெற வேண்டுமென்ற உண்மையை அறிகின்றனர்.

நமது மாணவர்களிற் சிலர் தங்கள் வகுப்பாசிரியர் வெற்றிலை போடுவதிலருந்து மூக்குக்கண்ணாடி போடுவது வரை நடித்துக் காட்டுவர்.வேறு சில மாணவர் தங்களை வெறுத்து அலட்சியம் செய்யும் மாணவர்களின் அலங்கார வர்ணனைகளையும் அழுமூஞ்சியையும் பாவனை செய்து காட்டுவர். அத்துடன் அந்த அழகு நங்கையைக் கண்டு மயங்குவதைப்போலவும், மற்ற மாணவர்கள் பல்லிளித்துக் காட்டுவதையும் காணலாம்.

சமுதாயத்தில் நடைபெறும் சீர்கேடுகளை எடுத்துக்காட்டுவதே நாடகத்தின் சிறந்த அம்சமாகும். அத்துடன் கால ஓட்டத்திற்கேற்ப குறைந்த நேரத்தில் கூடிய பயனை மக்கள் நாடக மூலம் பெறுவது அவசியம். இன்று எமது சமுதாயத்தினரிடையே குறியீட்டு நாடகம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நாடக மூலம் சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்

ஆங்கில நாடகவியல் அறிஞர் வில்லியம் சேக்ஸ்பியரின் கொள்கை "இவ்வுலகமே ஒரு நாடக மேடை அதில் மனிதர்களாகிய நாம் எல்லோரும் நடிகரே"எனக்கூறியுள்ளார்.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்** என்ற பழமொழியின் பொருளை விளக்கும் வகையில் வாசகரின் உள்ளத்தை ஈர்க்கும் ஒரு கற்பனைச் சிறுகதை (க.பொ.த. சாதாரணம் 2001-மார்கழி தமிழ்)

வடமராட்சியிலுள்ள தும்பளை கிராமத்தைச் சேர்ந்தவர் தான் கணபதி. அவருடைய தந்தை ஒரு ஆசிரியர் கணபதி குடும்பத்தின் மூத்தபிள்ளை. அவரோடு சேர்ந்து குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் வாழ்ந்தனர். கணபதி கோப்பாய் பயிற்சி கலாசாலைக்கு ஒரு ஆசிரியராகிப் பயிற்சிக்காக பல இடர்களுக்கு மத்தியில் தெரிவானார். அங்கு கணபதி பல அடக்குமுறைகளுக்கு ஆளானார். இவ்வாறான பல இன்னல்களை அனுபவித்துத் தன் ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்டார் கணபதி.

அவர் தும்பளையிலுள்ள பாடசாலையிலேயே திரும்பவும் ஒரு ஆசிரியராகப்பணிபுரிந்தார். கணபதி ஆசிரியர் புவியியல் பாடத்தை மிகத் தெளிவாகக் கற்பித்தார். அவர் உலகப்படம் இலங்கைப்படம் ஆகியவற்றை மிக நேர்த்தியாக கரும்பலகையில் வெண்கட்டியினால் கீறுவார். இப்படங்களைக் கீறும்போது வெண்கட்டியை வைத்த இடத்திலிருந்து முடியும் வரை கையை எடுக்காமல் கீறக்கூடிய ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. கணபதி ஆசிரியர் முல்லைத்தீவில் ஒரு பலசரக்கு கடையை தனது உறவினர்களின் துணையோடு நடாத்தி வந்தார்.

இதனால் அவருக்கு சமூகத்தில் நல்ல செல்வாக்குக் காணப்பட்டது. அவர் ஆசிரியராகப் பணியாற்றிய பாடசாலைத் தலைமை ஆசிரியர் பரமசாமி கல்விப்பணிப்பாளரின் நிர்ப்பந்தத்தின் பேரில் வேறு பாடசாலைக்கு அதே பதவியை வகிக்க வேண்டும். ஆனால் தலைமை ஆசிரியர் பரமசாமிக்குப் பொருத்தமான பாடசாலை அச்சமூகத்தில் அமையவில்லை. கணபதி ஆசிரியருக்கு பருத்தித்துறையில் சொந்தமாக ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டை விற்றுக் கிடைத்த பணத்தைக்கொண்டு அக்கிராம மக்களின் உதவியோடு பல்கஷ்டங்களுக்கு மத்தியில் ஒரு பாடசாலையை உருவாக்கினார். அதற்காக அவர்பட்ட துன்ப துயரங்கள் சொல்லில் அடங்காது. அப்பாடசாலையில் பரமசாமியைத் தலைமை ஆசிரியர் ஆக்கினார். கணபதி சிறிது காலம் அப்பாடசாலையில் உதவியாசிரியராக கடமையாற்றினார்.

பின் வல்வெட்டியிலுள்ள கிராம மக்கள் ஒரு பாடசாலையை ஸ்தாபித்தனர். அங்கு கணபதி அதிபரானார். வல்வெட்டியிலேயே ஒரு காணியை அதிபர் கணபதி வாங்கி அங்கு ஒரு சிறிய வீட்டை அமைத்துக்கொண்டார். அவரது வீடு அன்னசத்திரமாக மாறியது. அங்கு கல்வி கற்ற மாணவர்கள் கூடுதலாக ஏழைகளாகவே காணப்பட்டனர். அம்மாணவர்களுக்கு அதிபர் கணபதி தன் வீட்டில் உணவு, உடை அளித்து அக்கிராம மக்களுக்கு கல்வி என்னும் ஒளி விளக்கை திறந்து வைத்தார் தனது உற்றார் உறவினர்களுக்குப் பணஉதவி செய்தார். அவர்களுக்கு வேண்டிய போது உணவையும் கொடுத்து வந்தார். தன் வீட்டைக் கவனிக்காமல் தன் உறவினர்களையும், ஏனைய கிராம மக்களையும் நன்கு நேசித்தார். தீபாவளிப்பண்டிகைத் தினத்தன்று தன் உற்றார் உறவினர்களுக்கு உடுப்புக்களை வழங்கித் தான் மகிழ்ச்சியடைந்தார்.

சிறிது காலம் சென்ற பின் சமூகத்தில் மேலும் செலவாக்கு ஏற்பட்டது. வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் முதலில் தோல்வி அடைந்து அடுத்த முறை நகரசபை உறுப்பினராக கணபதி தெரிவு செய்யப்பட்டார். இப்பதவி மூலம் தன் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் ஏனையோருக்கும் பலவிதமான உதவிகளைக் கணபதி செய்தார். கணபதி தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்ந்தார். இன்று வல்வெட்டியிலேயே ஒரு பெரிய வீட்டைக் கணபதியின் ஜேர்மனியிலுள்ள இரு பிள்ளைகள் அமைத்துள்ளார்கள். இன்றும் கணபதி ஓய்வூதியம் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**'இறக்குமதி கட்டுப்பாடு இந்நாட்டு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்குவிக்கவல்லது** இது பற்றிய உமது விமர்சனம் (கட்டுரை 300 சொற்களில் அமையவேண்டும் ) (க.பொ.த. சாதாரணம் 1999 மார்கழி தமிழ் 11)

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சி ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய வர்த்தகத் துறையிலேயே தங்கியுள்ளது. இக்கருத்து எமது நாட்டிற்கும் பொருத்தமானதாகும். ஏற்றுமதி மூலம் எமது நாட்டிற்குத் தேவையான அந்நியச்செலவாணி பெறப்படுகின்றது. அரசு தனது நாட்டிற்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்கின்றது. அவற்றில் அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் உப உணவுப்பொருட்கள் ஆடம்பரப்பொருட்கள் கைத்தொழில் பொருட்கள் இயந்திரங்கள் தொடர்புச் சாதனங்கள் விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

1973ம் ஆண்டில் அரசு இறக்குமதித் துறையில் பல பொருட்களைக் கட்டுப்படுத்தியது. உணவுப்பொருட்கள் உப உணவுப்பொருட்கள் கைத்தொழில்ப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி முக்கியமாக கட்டுப்படுத்தப்பட்டன. இதனால் ஆரம்பத்தில் மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர். அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்டில்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் உப உணவுப்பொருட்களான வெங்காயம் மிளகாய் மூலம் கூடிய வருமானத்தைச் சந்தைப்படுத்தல் மூலம் பெற்றனர். அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

அப்போதைய அரசினால் பீக்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது வெளிநாட்டு அந்நியச்செலாவணி உரிமைச்சான்றுப் பத்திரம் அறிமுகமாகியது இறக்குமதி செய்பவர்கள் அரசிற்குத் தாம் இறக்குமதி செய்யும் தொகைக்கேற்ப 60% வரியினைச் செலுத்த வேண்டுமென நிபந்தனை விதித்தது. இதனால் இறக்குமதி செய்வோர் முக்கிய பொருட்களையே இறக்குமதி செய்தனர்.

அரசு ஒரு அங்குல நிலத்தைக் கூட தரிசு நிலமாக இல்லாமல் விவசாயத்தில் மக்கள் ஈடுபடவேண்டும் எனப் பிரகடனப்படுத்தியது. இதனால் நாட்டில் விவசாயிகள் தமது விவசாயப் பயிர்ச்செய்கையில் முழு ஆர்வத்தையும் காட்டினர். காடுகள் அழிக்கப்பட்டு உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதில் மக்கள் போதியளவு ஆர்வம் காட்டினர்.

விவசாயத்துறை மட்டுமல்ல கைத்தொழில்துறையிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது.

1977ல் பதவிக்கு வந்த அரசு திறந்த பொருளாதார கொள்கையைக் கடைப்பிடித்தது. இதனால் வர்த்தகர்கள் கூடுதலான பொருட்களை இறக்குமதி செய்தனர். வெளிநாட்டுப்பொருட்கள் இங்கு குவிந்தன. மக்கள் உள்ளூர் உற்பத்தியில் நாட்டம் கொண்டவர்களாக காணப்படவில்லை. உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் வெளிநாட்டுப் பொருட்களை விடத் தரமானதாக காணப்பட்டாலும் அவர்கள் வெளிநாட்டுப்பொருட்களையே விரும்புகின்றனர். இதற்கு அரசு வெளிநாட்டுப்பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தினால் மக்கள் உள்ளூர் உற்பத்திப்பொருட்களை வாங்குவதில் விருப்பங்காட்டுவர்.

உள்ளூர் விவசாயிகள் தமது பயிர்களை அறுவடை செய்யும் காலங்களில் அரசு அப்பொருட்களை இறக்குமதி செய்தது. உதாரணமாக யாழ்குடாநாட்டு விவசாயிகள் வெங்காயத்தை அறுவடை செய்கின்ற போது அரசு பம்பாய் வெங்காயத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தது. இதனால் அவ் விவசாயிகள் தமது உற்பத்திப்பொருட்களை சந்தைப் படுத்தமுடியாமல் கஷ்டப்பட்டனர். அந்த விவசாயிகள் உள்ளூர் உற்பத்தியைப்பெருக்க ஆர்வம் காட்டவில்லை.

இறக்குமதிக்கட்டுப்பாட்டின் போது இறக்குமதிச் செலவீனம் குறைவாகவும், ஏற்றுமதி வருமானம் கூடுதலாகவும் காணப்படும். இச்சந்தர்ப்பம் அந்நிய செலவாணியில் சாதக நிலையை ஏற்படுத்தும் திறந்த பொருளாதாரக் கொள்கையை அரசு கடைப்பிடிக்கும் போது இறக்குமதிச் செலவினம் கூடுதலாகக் காணப்படும். இந்நிலை அந்நிய செலவாணியில் பாதக நிலையை ஏற்படுத்தும் இங்கு உற்பத்தி குறைய நாட்டில் பணவீக்கம் ஏற்படுகின்றது.

எனவே நாட்டில் இறக்குமதி கட்டுப்படுத்தும் போது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது. அத்துடன் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்குவிக்கவல்லது. நாட்டில் தாராள இறக்குமதிக் கொள்கையினால் பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது. இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் நாட்டின் பொருளாதாரம் சுபீட்சம் அடையும். மக்கள் தமது வாழ்க்கையைச் செழிப்பாக வாழ்வதற்கு வழி சமைக்கின்றது.

## புதிய உலகத் தகவல் புரட்சியில் இன்ரர்நெற்

உலகில் இரு தனிநபர்களுக்கிடையில் பல்வேறு வடிவங்களில் தகவல் தொடர்பு நடைபெற்று வருகின்றது. அவற்றுள் தற்போதைய நவீன உலகத் தொழில்நுட்பத் துறையில் அதிசயிக்கும் ஒரு சாதனமாக இன்ரநெற் விளங்குகின்றது.

இன்ரநெற்றின் வருகை கணணியின் இலக்கணத்தையே மாற்றி விட்டது எனலாம். மனித வாழ்க்கைக்கு உதவிடும் சாதனமாக விளங்கிய நிலையை மாற்றி மனித வாழ்க்கையையே மாற்றியமைக்கும் ஒரு வரலாற்று நிகழ்வாக கணினி மாறிவிட்டது. இதன் ஊடுருவல் அறிவியல், கல்வி, ஆராய்ச்சித்துறை மற்றும் பொழுதுபோக்கு எனப் பரந்து செல்கிறது. எந்தத்துறையை இன்று எடுத்தாலும் உங்களுக்குச் சளைக்காமல் தகவல்களைத் தந்துகொண்டே இருக்கும்.

இன்டர்நெட் ஊடாகத் தொடர்பு கொண்டு காலநிலை, பங்குச்சந்தை, நாணயமாற்று விகிதங்கள், விமான சேவை, பத்திரிகை, சஞ்சிகைகள் என்பனவற்றிலிருந்து உலக அதிசயங்கள், எண்ணில் அடங்கமுடியாத சகலவிதமான தகவல்களையும் பெறலாம். இலங்கையில் ஆடைத்தயாரிப்பு நிறுவனங்கள் இன்டநெட் மூலமாகத் தமது விளம்பரநடவடிக்கைகளை மேற்கொள்ள இன்டர்நெட்டில் பிரவேசித்துள்ளன. இன்டர்நெற் என்பது தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பேயாகும். வலைப்பின்னல் என்பது கணிணிகளை இணைத்துச் செயற்படுவதை குறிக்கும். ஒரு நோக்கப்பணிக்காக பல்வேறுகணிணிகளை இணைத்துத் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் அமைப்பு கம்யூட்டர் நெட்வேக் எனப்படுகிறது.

பல்வேறுபட்ட கம்யூட்டர் நெட்வேக் அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு தகவல்ப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவுகிற அமைப்பு இன்டநெட்வேக் எனப்படுகிறது. இன்று சுருக்கமாக இன்ரநெட் நெற் எனப்படுகின்றது. தமிழில் இணையம், வலையம் எனவும் அழைக்கப்படுகிறது.

உலகில் இன்று பல்வேறு நாடுகளில் இன்டா்நெட் சேவையை வழங்குவதற்கென அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் லங்கா இன்டநெட் என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படுவதுடன், சீ கொம் ,விஸுவல் இன்டா்நெட் ஆகிய புதிய அமைப்புக்களும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்டர்நெட் அமைப்பானது 2ம் உலகப்போரின் பல்வேறு பிரயோகங்கள் மூலம் தான் பிறந்தது. 1973ம் ஆண்டில் தான் ''இன்டர்நெட்'' என்ற பெயரை அப்ரா விஞ்ஞானிகள் இந்த வலைப்பின்னலுக்குச் சூட்டினார்கள் ஆரம்பத்தில் அமெரிக்காவில் உருவாகிய இன்டர்நெட்டுடன் செய்மதிகள் மூலம் ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள் கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன. 1976லிருந்து இதன் முன்னேற்றத்தைப் பல நிறுவனங்கள் மேற்கொண்டு வந்தன. 1992ல் வேல்வைட்வெப் உலகளாவியத் தொடர்பு உருவாகியது. இத் தொடர்பின் மூலம் இன்டர் நெட்டில் பரிமாற்றப்படும் எந்தத் தகவல்களையும் உலகின் எந்த மூலையிலிருந்தும் பெறும் வாய்ப்பு உருவானது. ஒருவர் தன்னிடமுள்ள கம்பியூட்டரில் இருந்து தொலைபேசி இணணப்பு மூலமாக சுப்பர்நெட் வேர்க்குடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அனைத்துக் கம்பியூட்டர்களிலிருந்தும் தனக்குத் தேவையான விபரங்களைத் தேடிப்பெற முடிகின்றது.

உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ள கம்பியூட்ட நெட்வேக்குக்கள் தங்களுக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மேற்படி தகவல் பரிமமாற்றம் இடம் பெறுகிறது. இச் செயற்பாட்டுக்கு என பல்வேறு நூலகங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள், வணிக நிறுவனங்கள், கம்பியூட்டர் மையங்கள் மற்றும் அரசாங்கத் துறையினர் மிகவும் சக்கி வாய்ந்த கம்பியூட்டர்களின் ஏராளமான தகவல்களைச் சேமித்து வைக்கின்றனர். இவை வெப்சேர்வர்கள் என்றும் வெப்தளங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. சிலந்தி வலைப்பின்னலை வெப் என்கின்றோம்.

கம்பியூட்டர், தொலைபேசி, மோடம் என்பன இன்டர் தொடர்புடைய தொலைபேசி இன்டர் நெட் சேவை மையத்துடன் தொடர்பு கொள்வதற்கு அவசியமானது. கம்பியூட்டரை வெளி உலகுடன்

இணைக்க உதவும் கருவியே மோடம் எனப்படுகிறது.

"உலகளாவிய வலையம்" என அழைக்கப்படும் வேல் வைட் வெப்பில் தற்போது தமிழ் மொழியிலான தகவல்கள் காணப்படுகின்றன. இன்டர் நெட்டில் நுழைந்த மொழிகளில் தமிழிலும் தற்போது பல அரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வகையில் இன்டர் நெட் உலகை ஒருங்கிணைக்கும் உன்னத பணியைச் செய்கிறது. 21ம் நூற்றாண்டின் தகவல் புரட்சிக்கு இன்டர் நெட் வித்திட்டுள்ளது.

## மருத்துவத்துறை கண்ட மகத்தான சாதனைகள்

என்னும் தலைப்பில் உமது கருத்து வெளிப்பாடு (300 சொற்களில் கட்டுரை அமைதல் வேண்டும்) **க.பொ.த சாதாரணதரம் 1999 மார்கழி தமிழ் 11**

மருத்துவத்துறை ஏனைய துறைகளை விட வளர்ச்சி யடைந்ததாகவே காணப்படுகின்றது. வைத்தியர்கள் தொடர்ந்து தமது அறிவியல் துறையை விருத்தி செய்து கொண்டே இருக்க வேண்டும் ஏனெனில் அப்போது தான் வைத்தியர்கள் புதிய விடயங்கள், புதியகண்டுபிடிப்புக்கள் ஆகியவற்றை அறிபவர் களாகக் காணப்படுகின்றார்கள். மருத்துவமனையில் தொழில் புரியும் வைத்தியர்களுக்கு உயிர் ஆயுதமாக விளங்குபவர்கள் தாதியர்களே ஆவார். இச் சேவைக்கு முன்னுதாரணமாக விளங்கியவர் "விளக்கேந்திய சீமாட்டி" என வர்ணிக்கப்படும் புளோரன்ஸ் நைற்றிங்கேல் என்பவராவார். இவர்தான் உலகிலேயே முதன்முதல் தாதிச்சேவையைப் புரிந்தவராவார். இவர் மருத்துவமனைக்கு இரவு நேரங்களில் ஒரு விளக்குடன் சென்று நோயாளிக்கு தேவையான விடயங்களை அறிந்து அதற்கேற்ப சிகிச்சைகளை செய்வார்.

மருத்துவத்துறையிலே, நவீன சத்திர சிகிச்சை முறைகள், லேஸர் சிகிச்சை முறைகள், குளோனிங் முறை, இனப்பெருக்க முறைகள், பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் நவீன நோய்த்தடுப்பு முறைகள் நவீன நோய்த் தடுப்புஊசிகள் என்பன புதிது புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இன்று எயிட்ஸ் என்னும் தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவுகின்றது. இந்நோய் எச்.ஐ.வி என்ற் வைரசினால் உண்டாகின்றது. எச்.ஐ.வி என்பதனை தமிழில் நீர்ப்பீடன குறைபாட்டு வைரஸ் எனக் கூறுவர். எயிட்ஸ் என்பது ஒரு பாலியல் நோயாகும். இந்நோய் தகாத உடல் உறவின் போது

ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தொற்றுகின்றது. எயிட்ஸ் நோய் தொற்றுவதைத் தடுப்பதற்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்வான கோட்பாட்டை ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டும். கிருமி நீக்கம் செய்யப்பட்ட வைத்தியசாலையை நாடவேண்டும். இரத்தம் ஏற்றும் போது நம்பிக்கையானவர்களின் இரத்தத்தைப் பெறவேண்டும். இவ்வாறு கட்டுப்பாடாக மனிதன் வாழ்ந்தால் இந்நோய் தொற்றுவதைத் தடைசெய்யலாம். இன்று எமது மக்களை அச்சுறுத்தும் எச்.ஐ.வி போன்ற ஆட்கொல்லி நோய்களுக்கு தடுப்பு முறைகளைக் கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதன் வெற்றியை 21ம் நூற்றாண்டில் சந்திக்கும் போது மனிதனின் ஆயுட்காலம் இன்னும் கூடும். ஆரம்பத்தில் அறுவைச் சிகிச்சையை வைத்தியர்கள் மேற்கொள்ளும் போது நோயாளர் பயப்பட்டனர். காரணம் ஆயுதங்களினால் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதேயாகும். மயிரிழை போன்ற ஊசிகள் மனித உடலில் குறிப்பிட்ட சில இடங்களில் நரம்புகளில் குத்துவதன் மூலம் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் பாரம்பரிய சீன மருத்துவ முறை அக்குபங்சர் என்பதாகும். கத்தியின்றி இரத்தக்கசிவின்றி அறுவைச்சிகிச்சை செய்வதற்கு மருத்துவத்துறையில் லேஸர் கதிர் சிகிச்சை என்ற தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது நவீன அறுவைச்சிகிச்சை இலகுவாக்கப்பட்டதோடு நோயாளர்களின் பயத்தைப் போக்கவல்லதாகவும் காணப்படுகின்றது.

நீண்டகாலம் குழந்தையில்லாதவர்களின் கவலையை சோதனைக்குழாய் குழந்தை தீர்த்து வைக்கின்றது. உலகின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தை 1978ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தது. இவ்வாறு பிறந்த பெண் குழந்தையின் பெயர் லூஸி-பிறவுண். குளோனிங் முறைப்படி ஆண்டுகளுக்கு 500 மனிதர்களை உற்பத்தி செய்யவுள்ளதாக "றிச்சார்ட் ஏடு" என்ற அமெரிக்க விஞ்ஞானி கூறியுள்ளார்.

குளோனிங் முறையில் ஒரு கருமுட்டையிலுள்ள

நியூக்கிளியர் நீக்கப்பட்டு மற்றொரு செல்லில் உள்ள நியூக்கிளியர் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு முட்டையுடன் இணைக்கப் படுகின்றது. பின்னர் இக்கருமுட்டை இன்னொருதாயின் கருப்பையில் வைக்கப்பட்டு கரு வளர்ந்து பிறப்பை எடுக்கின்றது. டொலி என்ற வயது வந்த விலங்கு ஒன்றிலிருந்து பெற்ற ஒரு கலத்திலிருந்து குளோனாக்கப்பட்ட முதலாவது விலங்காகும்.

நோயாளிகள் பல்வேறு நோய்களினால் பீடிக்கப்பட்டுப் பலவிதமான துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவர்கள் நோய்களைத் தாங்கமுடியாமல் இன்னல்படுகின்றனர். எனவே வைத்தியர்கள், தாதிகள் ஆகியோர் தமது சுயவிருப்பு வெறுப்புக்களுக்காக நோயாளிகள் மீது சீற்றங் கொள்ளக்கூடாது. அந்நோயாளிகள் மீது இரக்கங்காட்டி அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தமது தொழிலின் தன்மையைப் பேணி சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றுவது அவசியமானதாகும்.

இந்நவீன மருத்துவ நுட்பங்களினால் மக்கள் மனதில் பலவிதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மறந்து நீண்டகாலம் இப்பூவுலகில் வாழ்வார்கள் என்பது விஞ்ஞானிகளின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

## உழைப்பும் உயர்வும்

ஆண்டவன் நம்மை அறிவுடன் படைத்து இப்பூமிக்கு இருப்பதற்கு காரணமே நாம் உழைத்து வாழவேண்டும் என்பதற்காகவே ஆகும். அதன் மூலம் உயர்வு பெற்று உன்னதமானவர்களாக உலா வர வேண்டும் என்ற நோக்கத்தினால் தான் மனிதனாக உருவாக்கி இருக்கிறார். உலகிலேயே மனிதர்கள்தான் மிக உயர்ந்தவர்கள். இந்த உலகில் அனைவரும் உழைத்துத் தான் உயர்வு பெற்றார்கள். வரலாற்றில் உண்மையான இடத்தைப் பிடித்து இருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்பதற்கிணங்க நாம் இந்த உலகில் வாழ வேண்டும். உண்மையில் நாம் உழைப்பினால் பெறும் உச்சப்பயனை அநுபவிக்கும் போது தான் மகிழ்ச்சி அடைகின்றோம். இதற்கு உதாரணமாக வீட்டுத் தோட்டத்தில் பயிர்களைப் பயிரிட்டு அதன் மூலம் பெறப்படும் பயனானது எம்மனதில் தோன்றும் ஒருபுத்துணர்வாகும். இதற்குக்காரணம் இதன் மூலம் சுய உற்பத்தியின் இன்பம், புதிய உற்பத்தியின்தரம், நேரச்சிக்கனம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்கிறோம். ஏனெனில் சந்தையில் நாம் வாங்கும் மரக்கறிகளை விட சத்துமிக்கதும், மனதைச்சந்தோசமடையச் செய்வதும் இச் சுயதேவைப் பொருட்களேயாகும். இவை உழைப்புக்குக் கிடைத்த பெறுமதிமிக்க வெகுமதியாகும்.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கேற்ப, நாம் செய்யும் தொழிலை மேன்மையாக மதிக்க வேண்டும். நாம் சிறு தொழிலைச் செய்தாலும், பெருந்தொழிலைச் செய்தாலும், நாட்டிற்குப் பெருமைதானே எனக் கூறினார் பாரதி. நாம் செய்யும் தொழிலில் ஒரு பற்று ஏற்பட வேண்டும். இப்பற்று எம்மிடம் ஏற்படுவதற்கு ஆர்வம், அக்கறை இரண்டும் தேவை நமக்கு ஆர்வமும், அக்கறையும் இருந்தால் செய்யும் தொழில் வெற்றியாகவும் திறமையாகவும் நடத்த வழிபிறக்கும் நமது ஊதியத்திற்கு மேல் அதிகமாகவும் திறமையாகவும் அத்தொழிலைச் செய்தால் அதனால் கூடுதலான பலன் கிடைக்கும்.

இந்த உலகில் உழைப்பினால் உயர்ந்தோர் பலர். அவர்களுள் கிரேக்க தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் ஒரு சமயம் எழுதிக்கொண்டிருந்தார். அப்போது அலெக்சாண்டர் அவருக்கு அருகில் நின்றார்.அரிஸ்ரோட்டில் இரண்டு மணித்தியாலங்கள் எடுதிய பின்னரே அலெக்ஸாண்டர் வந்திருப்பதைக் கண்டார். அரிஸ்ரோட்டில் தன் உழைப்பில் மனதைப் பறிகொடுத்து ஊறித்திழைத்தார்.

ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான கதைகளையும் நாவல்களையும் எழுதிக்குவித்தார் அலெக்சாண்டர் டூமாஸ். இதன் மூலம் 10 லட்சம் பவுண்களுக்கு மேல் உழைத்த அவர் இளமைக் காலத்தில் பல துன்பங்களை அனுபவித்தார். ஒரு நாடகத்தை போய்ப்பார்ப்பதற்கு அவரிடம் உடுப்புக்கள் இல்லை. தாயும் நோயினால் படுத்திருந்தார். இந்த நிலையிலும், தாயாரின் உடல் நிலை எப்படி என்பதைக் கவனிப்பதும், பின் நாடகம் பார்க்க செல்வதுமாக இருந்தார். அவருடைய நாடகத்தை பரிஸ் நகரமே புகழ்ந்தது. ஆரம்பத்தில் அவருடைய நாடகத்திற்கு நல்ல வரவேற்பு இருந்த போதிலும் பின் அவருடைய நாடகங்களுக்கு மதிப்புக் குறைந்து கொண்டு போனது இதனால் அவர் மனந்தளரவும் இல்லை தன்னுடைய உழைப்பைக் கைவிடவும் இல்லை.

பின் டூமாஸ் கதைகளையும், நாவல்களையும் எழுதினார். அவர் ஐரோப்பாவையும் சுற்றிக்கொண்டு, ஒரே நேரத்தில் 5 பத்திரிகை களுக்கு 5 தொடர் நாவல்களை எழுதினார். அத்துடன் "கேவலியாடீசைமன் ரோக்" மூவாயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து வரிகள் கொண்ட நாவலை மூன்று நாட்களுக்குள் எழுதி முடித்தார். இவ்வாறான ஒரு சாதனையைப் புரிந்தமைக்கு முக்கிய காரணம் உழைப்பேயாகும். இதனால் இலககியத்துறையில் தனக்கென ஒரு இடம் பிடித்துள்ளார்.

மற்றொருவர் காலுறைகளும் தேனும் தேங்காய் நாறும் பாலிஷூம் விற்றுப்பணம் உழைக்கலாமென எண்ணினார். எந்த வியாபாரமும் வெற்றி தரவில்லை. அதனால் அவர் மனந்தளரவில்லை. ஒரு மரப்பெட்டி தகரடப்பா செப்புக்கம்பி கண்ணாடி வில்லை ஆகியவற்றைக் கொண்டு ஒரு தொலைக்காட்சியை அமைத்தார். அதனைப் பார்த்த மக்கள் எள்ளி நகையாடினர். அவர் எவருடைய

பேச்சையும் கேட்காமல் தன்னுடைய முயற்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவர் நாட்கணக்கில் லண்டன் நகரில் பட்டினியாகவும் அலங்கோலமாகவும் காட்சி தந்தார். அவர் எவ்வளவு துன்பம் வந்நத போதும் தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை. இதனால் அவர் நான்கு ஆண்டுகளாகப் படாத பல இன்னல்களை அனுபவித்தார்.

அவர் ஒவ்வொரு நாட்களும் ஆராய்ந்து கொண்டே இருந்தார். ஆயிரத்து நானூறு நாட்களாக ஆராய்ச்சி செய்ததன் பலன் ஒரு பெட்டியில் படம் ஓடும். அதனை எல்லோரும் உட்கார்ந்து, பார்க்க முடியும் என்பதை நிருபித்துக் காட்டினார

இவர்தான் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த ஜோன் பயர்டு கடுமையான முயற்சியினால் தான் சாதனை புரிந்தார். இவருடைய உழைப்பினால் தான் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள், நடனங்கள், சிறுவர் நிகழ்ச்சிகள் ஒலிம்பிக்போட்டிகள் உலகக்கிண்ண உதைபந்தாட்ட துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள் போன்றவற்றை மிகவும் இலேசான முறையில் வீட்டிலிருந்தே நாம் பார்க்கக்கூடியதாய் உள்ளது. நம்முடைய முயற்சி தெளிவுடன் ஒரே நோக்கத்தில் இருந்தால் நாம் வெற்றி பெறுவது உறுதி. இதனைத் தான் ஒவ்வொரு அறிஞர்களும் விஞ்ஞானிகளும் தெளிவுபடுத்துகின்றனர். இதிலிருந்து உழைப்பின் மகிமை தெளிவாக விளங்குகின்றது.

உழைப்பினால் நாம் வெற்றிபெற வேண்டுமாயின் துன்பங்களையும் தடைகளையும் தாண்டி வரவேண்டும். இதற்கு பொறுமை, நிலை குலையாமை, கவனம், சுறுசுறுப்பு, மனஅமைதி என்பவை தேவை. நாம் உழைத்துக்கொண்டிருக்கும்போது தடைகளோ குறுக்கீடுகளோ ஏற்பட்டால் நாம் மனந்தளர விடக்கூடாது. ஆத்திரம் அடையக்கூடாது. அதற்கு எமக்கு பொறுமை அவசியம் தேவையாகும். உலகில் நடைபெற்ற எந்தச்செயல்தான் தடையில்லாமல் நடைபெற்றது. அதனை நாம் பெரிதுபடுத்தாமல் மனதிற்கு எடுத்துக்கொள்ளாமல் தொடர்ந்து எம்பணியினைச்செய்து வெற்றி பெறவேண்டும்.

நம்வாழ்க்கையில் புனித சட்டமாக உழைப்பு

விளங்குகின்றது. " நான் உழைப்பை விரும்புகின்றேன்" அது என்னை வசீகரிக்கின்றது. அதை நான் என்னுடன் வைத்து அன்பு செலுத்துகின்றேன்". என்று சொல்கிறார் ஜெரோம் . நாம் உபயோகிக்கும் பொருட்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவை யாவும் உழைப்பினால் உருவாக்கப்பட்டவை என்பதனை உணர்ந்து கொள்ளமுடியும். எங்களுடைய வீட்டிலுள்ள எல்லாப்பொருட்களுமே உழைப்பினால் கண்டுபிடிக்கப்பட்டவை. நாம் அணிந்து கொண்டிருக்கும் சட்டை கூட இப்படித்தான் அணிய வேண்டுமென ஒரு அறிஞர் கண்டுபிடித்துக் கூறியுள்ளார். மிதி வண்டி, மோட்டார் வண்டி , புகை வண்டி, சினிமா எல்லாமே உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்டவை. அதனால்தான் பொருளாதார விற்பன்னர் அடம்ஸிமித் "உழைப்பு என்பது எல்லாப்பொருட்களுக்கும் முதல்விலையாக இருக்கின்றது." என கூறினார். "தன்னுடைய தேவைகளை யாசிக்காமல் உழைத்துப் பெறுகின்றவருக்கு இறைவன் அருள் புரிகின்றான்." என நபிகள் கூறினார். "மனிதன் உழைக்கவே பிறந்தவன் , உழைக்கும் மனிதனின் உறக்கம் இனிமையானது"என பைபிள் கூறுகின்றது. "மனிதன் உழைக்கின்றான். கடவுள் வாழ்த்துகின்றார்"என அமெரிக்கப்பழமொழி கூறுகின்றது. இதிலிருந்து உழைப்பின் முக்கியத்துவம் எவ்வாறானது என்பது விளங்குகின்றது.

எனவே நாம் உழைப்பை வாழ்க்கையில் தொடர்ந்து கடைப்பிடித்தால் வாழ்வில் முன்னேற்றமடைவது உறுதியாகும்.

# நாட்டார் இலக்கியம்

நாட்டார் இலக்கியத்தில் முதன் முதல் தோன்றியது நாட்டார் பாடல்களேயாகும். இப்பாடல்களை கல்வியறிவு அற்ற பாமர மக்கள் பாடினார்கள். அவர்கள் பேச்சு மொழிகளை இப் பாடல்களில் புகுத்தியே பாடினர். அதனால் மக்களிடையே இப்பாடல்கள் பிரபல்யம் அடைந்தன. இந்த இலக்கியம் நாட்டிற்கு நாடு கிராமத்திற்கு கிராமம் வேறுபட்டதாகவே காணப்பட்டது. ஒரு கிராமத்தில் பாடப்படும் பாடல்கள் வேறொரு கிராமத்தில் வித்தியாசமாகவே பாடப்பட்டு வந்தன. மக்கள் தமது தொழில்களை இலகுபடுத்துவதற்காக வேலைகளின்போது இப் பாடல்களைப் பாடினர்.

மக்கள் தொழில்களைச் செய்யும் போது பள்ளுப்பாட்டு, கப்பல்பாட்டு, தெம்மாங்குப்பாட்டு ஆகியவற்றைப் பாடியே தமது தொழில்களைச் செய்தனர். களை பிடுங்கும் போது பள்ளுப் பாடல்களையும் கப்பல் செலுத்தும் போது ஏலேலோ என்றிசைக்கும் கப்பல்பாட்டையும் பாடினர். பாரவண்டியை இழுக்கும்போது தெம்மாங்கு பாடி இன்புறுவர்.

இவையன்றி காவடிச்சிந்து குறவன் குறத்திப் பாட்டு என்பனவும் நாட்டாரிலக்கியத்தைச் சேர்ந்ததாகும். இன்றும் எமது குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் காவடி கரகம் என்பன ஆடப்பட்டு வருகின்றன. அப்போது காவடிச் சிந்து உடுக்கு அடித்துப் பாடப்படுகின்றது.

"இசையால் வசமாகா இதயமேது " என்பது உண்மையான கூற்றே தான் இதனை உறுதிப் படுத்துவதாக அமையும் இவ்வகைப் பாடல்களின் இசைவேளைப் பொருளுக்கும் பெருமளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தாலாட்டுப் பாட்டைத் தாய் தன் குழந்தையைத் தாலாட்டும் போது பாடுகின்றார்.

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுதாய்
அடிச்சாரைச் சொல்லியழு

தாலாட்டுப் பாடல்கள் நீலாம்பரியிலும் ஒப்பாரிப்பாடல் முகாரியிலும் அமைந்து குறிப்பிட்ட உணர்வோடு இரண்டறக் கலப்பதைக் காணலாம். அதேவேளை கூறவரும் விடயத்தை சிலேடைக் கருத்தோடு கூறிவிடுவது நாட்டார் பாடல்களின் சிறப்புத் தன்மையாகும்.

களையெடுத்துக்கை கழுவ
கரை வழியாகப்போற புள்ள
பரிசம் கொடுத்த மாப்பிள்ளைக்குப்
பாற்குடம் கொண்டு போகிறியா
மாடுமோ செத்தல் மாடு
வண்டியோ ஓட்டை வண்டி
மாடிழுக்க மாட்டாம
மாய்கிறாண்டி உன்புருஷன்

என சக தோழியரைக் கிண்டல் செய்வதாக அமையும் வேளையில் அவர்களது உள்ளத்துணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதேபோலவே இருமனைவிமாருக்கும் ஆசைப்பட்ட ஒருவனைக் கிண்டல் செய்கின்றன கீழ்வரும் பாடலடிகள்

அரிசி வீக்கிற விலையிலே
அவல்கிடக்கிற கிடையிலே
இரண்டு பெண்டாட்டிக்கு ஆசை
இழுபடுகிறதே மீசை

இனி ஒரு ஒப்பாரிப்பாடலை நோக்குவோம். இங்கு தாய் தன் பிள்ளை மரணித்த நிலையில் பாடப்படும் பாடல்

பொன்னான மேனியிலே – ஒரு
பொல்லாத நோய் வந்ததென்ன
தங்கத்திருமேனியிலே – ஒரு
தகாத நோய் வந்ததென்ன

மனித வாழ்க்கையின் ஆரம்பத்திலே பாடப்படுவது தாலாட்டுப்பாடல் முடிவில் பாடப்படுவது ஒப்பாரிப்பாடலாகும். இப்பாடல்கள் மங்கையர் குலத்திற்கே உரியவையாகும் ஒப்பாரிப்பாடல்களை நாம் கேட்கும் போது கவலை உணர்வை

ஊட்டக்கூடியன. தாய் தந்தை பிள்ளைகள் உறவினர் மரணித்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வே ஒப்பாரிப்பாடல்களாகும்.

இப்பாடல்களில் கூறும் சொல்லும் பொருளும் தெரிந்து விளங்கிக் கொள்ளத்திறமை தேவையில்லை. நாட்டார் இலக்கியங்கள் கேட்கும் போது இன்பத்தைத் தந்து கேட்ட பின்னரும் உள்ளத்தை ஊக்கி உறுதிப்படுத்தவல்லது. எனவே நாட்டாரிலக்கியம் மக்களிடத்திலே இயல்பாகத் தோன்றி மக்களை இன்பமாக வாழ வைக்கும் எழில் மிகு இலக்கியமாகும்.

இவ்வகையான இலக்கியங்கள் மன்னர்களது அவைக் களத்தை அறியாமலும் கிராம மக்கள் மத்தியிலே தோன்றிப்பரம்பரை பரம்பரையாக அழியாது நிலைபெற்று வந்துள்ளன. இக்காலத்தில் சில நூல் வடிவம் பெற்றுள்ளன. இன்றும் சில நாட்டாரிலக்கியங்கள் நூல்வடிவில்லாது மக்கள் மத்தியில உலாவி வருகின்றன. யாழ்ப்பாணப்பிரதேசத்திலும் பார்க்க மட்டக்களப்பு பிரதேசத்தில் கூடுதலாக உள்ளன என்பர். செந்தமிழில் எழுதப்பட்ட கம்பராமாயணம், மகாபாரதம் என்பன கற்றவர்களை மட்டும் மகிழ்ச்சியூட்டுவனவாக இருந்தன. ஆனால் நாட்டாரிலக்கியங்கள் கற்றார் கல்லாதோர் ஆகிய எல்லோரையும் களிப்பூட்டவல்லனவாக திகழ்கின்றன.

# முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்

"முயற்சி உயர்வு தரும்" "முயற்சியின் பயன் வெற்றி தரும் " என்பவை முதுமொழிகள். முயற்சியை வாழ்க்கையில் கைக்கொண்டால் உயர்ச்சியின் எல்லையை அடையலாம். இதற்கு எடுத்துக்காட்டாக அறிஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் வாழ்ந்தமையினால் தான் நாம் இன்று தலை நிமிர்ந்து வாழ்கின்றோம். திருவள்ளுவரின் முயற்சியினால் தான் எமக்குத் திருக்குறள் கிடைத்தது. கம்பரின் முயற்சியினால் எமக்கு கம்பராமாயணம் கிடைத்தது. ஜார்ச்ஸ்டீபன்சனின் முயற்சியினால் தான் நமக்கு புகைவண்டி கிடைத்தது.

நமக்கு வாழ்வில் வெற்றிவாகை பெற்றுததருவது முயற்சி தான் முயற்சியில்லையேல் நாம் ஒரு போதும் முன்னேற முடியாது.

**முயற்சி திருவினையாக்கும் - முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்**

என்பது வள்ளுவரின் வாய்மொழி.

முயற்சி இருப்பின் எப்போதும் இகழ்ச்சி அடைய இயலாது. வள்ளுவரும் வளம்பெருக்கவும், வறுமையை விரட்டவும் கூறும் வழி முயற்சி செய் என்பதுதான். முயற்சி செல்வத்தைப் பெருக்கும். முயற்சி இல்லாதிருந்தால் வறுமையைப் புகுத்தும்.

ஆண்டவன் வாழ்க்கையை வளமுடன் வாழ அருமையான சந்தர்ப்பத்தைத் தந்துள்ளான். அதனை அன்புடனும், சீர்மையுடனும் வாழ வேண்டியது நமது கடமை. நம்முடைய துயரத்தைத் தவிர மற்றவர்களின் துன்பத்தை நாம் பார்ப்பதில்லை. தோல்வியே வெற்றியின் முதற்படி. தோல்வியின் உரத்தைப் போட்டுத்தான் வெற்றிப் பயிரை விளைவிக்க முடியும் .வெள்ளாட்டுடன் போராடி வெல்வதை விட வேங்கையுடன் போராடித் தோற்பதே மேல்.உலகம் பழிக்குமே என்று எண்ணிவிடக் கூடாது இன்று தூற்றும்வாய் நாளை துதிபாடவும் செய்யும்.

நாம் செயற்படவும், உழைக்கவும், இயங்கவும், குறிக்கோள் உருவாகவுமே மனிதனாகப் பிறக்கின்றோம். நம்முடைய பிறப்பு உயர்வுடன் இருப்பதானால் செயலும் மேன்மையடைந்தே ஆகவேண்டும். செயல் புரிவதற்கு அடிப்படையாக இருப்பது முயற்சி. நமக்கு அறிவு இருக்கிறது. ஆற்றல் அமைந்திருக்கிறது. எப்படி முன்னேறாமல் இருக்க முடியும்.

நீ வாழ்க்கையில் முன்னேற்றம் காண விரும்புகிறாயா? அப்படியானால் நீ சோம்பி உட்காராதே! உழைக்கப் பின்வாங்காதே! சந்தர்ப்பம் எதையும் நழுவ விடாதே! வேதனை தரும் நிகழ்ச்சியைக் கண்டு பின்வாங்காதே! இதுதான் உன்னுடைய முன்னேற்றத்திற்கு உண்மையான மந்திரம் என்று விபரிக்கிறார் ஜியார்ஜ் எலியாட் . வாழ்வின் அர்த்தம் இடைவிடாமல் முயற்சி செய்வது தான் என ஜேர்மன் பழமொழி கூறுகிறது. எந்த ஒரு முயற்சியினைத் தொடங்க நாம் தீர்மானித்தாலும் அந்த முயற்சியினை தொடங்குவதற்கு முன் சிந்திக்க வேண்டியது முக்கியம். ஒன்றை யோசித்து ஒரு தீர்மானத் திற்கு வந்து விட்டால் அடுத்துத் துணிச்சலாகச் செயலில் இறங்க வேண்டும்.

தாமஸ் அல்வா எடிசன் விஞ்ஞான உலகத்தின் தலைமகன். அவர் சிறுவனாக இருக்கும்போது வானத்தில் மின்னும் மின்னலைப் பார்த்தார். அவருடைய நண்பர்கள் மின்னலைப் பார்க்காதே என்றனர். ஆனால் எடிசன் இதைப்போல் ஒளியை உண்டாக்கப் போகிறேன் என்று உறுதியுடன் கூறினார்.

பசி,தூக்கம், உணவ என்பவற்றை முழுமையாக வெறுத்தார். அவர் தனியாக நடக்கும்போதே நான் கண்டுபிடிப்பேன், நான் கண்டுபிடிப்பேன் எனக் கூறிச்செல்வார். அவரைப் பார்ப்பவர்கள் பைத்தியக்காரர் எனக் கேலி செய்தனர். அதனையெல்லாம் பொருட்படுத்தாது தன்னுடைய உழைப்பிலேயே கவனஞ்செலுத்தினார். அவருடைய பல ஆண்டுகளின் உழைப்பு மின்னலையும் மிஞ்சுகின்ற மின் குமிழைக் கண்டுபிடித்தார்.

தோமஸ் லிப்டன் ஏழ்மையில் பிறந்தார். வளமான வாழ்வு பெற நல்ல வேலையில் சேர்ந்து கொள்ள அமெரிக்காவிற்குச் சென்று

பத்திரிகை விற்றார். இந்தத்தொழில் பசியைத் தணிக்க உதவியதே தவிர பணம் சேர்க்க உதவவில்லை. மீண்டும் ஊருக்கு வந்து நண்பர்களிடம் கடன் பட்டு கடையைத் தொடங்கி விளம்பரமூலம் வியாபாரத்தைப் பெருக்கினா். அடுத்த வீதியில் இன்னுமொரு கடையைத் திறந்தார். நன்றாக உழைத்ததனால் பல தொழிற்சாலைகளை உருவாக்கி இலங்கையில் தேயிலைத் தோட்டங்களை வாங்கினார். இன்று உலகம் முழுவதும் அவருடைய பெயரால் தேநீர் குடிக்கிறோம். குடிசையில் பிறந்த இவரைக் கோடீஸ்வரர் ஆக்கியது முயற்சிதான்.

நாம் முயற்சியினால் எளிதாகப் பெற்ற வெற்றியை விட கடின முயற்சியினால் பெற்ற வெற்றியே பெறுமதியானது . குப்பை வெளிச்சத்திலே படித்த ஆபிரகாம்லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகவில்லையா? சாதாரண ஆசிரியரான கலாநிதி ராதாகிருஷ்ணன் இந்திய நாட்டின் ஜனாதிபதி ஆகவில்லையா? எனவே மாணவர்களாகிய நாம் பெரியோர்களின் அடிச்சுவடைப் பின்பற்றி முயற்சியினால் முன்னேறுவோமாக.

## தொலைக் காட்சி பார்ப்பதனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளும்.

இன்று ஊடகத்துறையில் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைத்தந்தி, இணையம், மின்அஞ்சல்(ஈமெயில்) பத்திரிகை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். வானெலி என்பது ஒரு செவிப்புல சாதனமாகும். அதாவது இச் சாதன மூலம் நாம் நிகழ்ச்சிகளை காதுகளினாற் கேட்கலாமேயொழிய கண்களினால் பார்க்க முடியாது. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைக கண்களினாற் பார்பதன் மூலம் அது எமது மனதில் பதியக் கூடியதாய் உள்ளது. நாம் வாசிப்பதை விடக்கண்ணினாற் பார்ப்பதனால் அந்த விடயம் ஆழமாகப் பதிந்து விடுகிறது. இதன் மூலம் வேறு நாடுகளில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி மூலம் உடனுக்குடன் பார்க்க முடிகிறது. கேட்கவும் முடிகிறது.

தொலைக்காட்சியில் கறுப்பு, வெள்ளைத் தொலைக்காட்சி, வர்ணத் தொலைக்காட்சி என இரு பிரிவுகள் உண்டு. தொலைக்காட்சியில் கோல்ட்ஸ்ரார், சொனி, கிற்றாச்சி, நஷனல், நஷனல் பனசோனிக் எனப் பல இனங்கள் உண்டு.

நாம் தொலைக்காட்சி மூலம் பல்வேறு விதமான நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கக் கூடியதாய் உள்ளது. இதில் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், ஒலிம்பிக் விளையாட்டுக்கள், உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட, துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் ஆடல் பாடல்கள், நாடகங்கள் ஆகிய பல விடயங்கள் இச் சாதனத்தில் ஒளிபரப்பப்படுகிறது. இவற்றை நாம் நாள் தோறும் ரசிப்பதனால் உலக விவகாரங்களை அறியக் கூடியதாய் உள்ளது. அத்துடன் மாணவர் இச் சாதனத்தை அடிக்கடி பயன்படுத்துவதனால் தமது அறிவைப் பொது அறிவுப் போட்டி மூலம் விருத்தி செய்ய முடிகிறது. இந்திய தூரதர்ஷனில் "வயலும் வாழ்வும்" என்ற நிகழ்ச்சி ஒளிபரப்புச் செய்கிறார்கள். இதன் மூலம் விவசாயிகள் பயிர்களுக்கு ஏற்படும் நோய்களை அறிந்து கொள்வர். அதற்கேற்ப பயிர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பரிகாரங்களையும்

அறிந்து கொள்வர். இதனால் பயிர்கள் மூலம் கூடுதலான விளைச்சலைப் பெற்றுக் கொள்ளலாம். விவசாயிகளும் சிறந்த நன்மை பெற்று தமது நாடு முன்னேற வழிவகுக்கும் எனக் கூறுவார்.

சிறந்த அறிஞர்களின் நேர் காணலை இதன் மூலம் பார்க்கக் கூடியதாய் உள்ளது. நாடுகளில் சிறந்து விளங்கும் கல்விமான்களை மாணவர்களினால் அறியக் கூடியதாய் இருக்கிறது. இந்த அறிஞர்களின் சிறந்த கருத்துக்களை நாம் தெரிந்து கொள்வதன் மூலம் கல்விக்கு மேலதிகமான பல அம்சங்களை அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் மாணவர் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டுமில்லாது வரலாறுகளை அறிய உதவுகிறது. நாடக மூலம் சித்தரிக்கப்படும் சிறந்த படிப்பினைகளை வாழ்க்கையில் மக்கள் மேற்கொள்வதோடு ஏனையவர்களையும் வழி நடத்த முடியும்.

மாணவர்கள் தொலைக்காட்சியைப் பார்க்கும் போது தூரத்தில் இருந்து பார்க்க வேண்டும். இல்லாவிடில் அவர்களது கண் பழுதடைந்து விடும். அடிக்கடி இதனைப் பார்ப்பதனால் மாணர்களுடைய கல்வி வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சினிமாத்துறையின் வளர்ச்சியில் மாணவர் தமது மனதை அடிமையாக்கிக் கொள்வதாக அமைகிறது. அன்னம் பாலை மட்டும் குடித்து விட்டு நீரை விடுகிறது. அது போல நல்ல விடயங்களை மட்டும் தமது தேவைகளுக்கு எடுத்துக் கொண்டு தீய விடயங்களைக் கைவிட வேண்டும். இன்று சினிமாத் துறையின் காண்பிக்கப்படும் திரைப்படங்களில் கூடுதலாக ஆபாசமான அம்சங்களே நிறைந்துள்ளன. இப் பாடங்ளைப் பார்ப்பதற்கு மாணவர்களுக்குப் பெற்றோர் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

மாணவர்களுக்குத் தொலைக்காட்சி பார்ப்பதனால் தீமைகளை விட நன்மைகளே கூடுதலாகக் காணப்படுகிறது. இக் குறைவான தீமைகளில் மாணவர் தமது கவனத்தைச் செலுத்தாது நிறைவான வாழ்வைப் பெறுவதையே தமது நோக்கமாக் கொள்ள வேண்டும். மனதைக் கூடாத எண்ணங்களில் அலைய விடாது சிறந்த நோக்கத்தை அடைய வேண்டும். இதனால் மாணவர் அழிவுப்பாதையைத் தேடிச் செல்லாமல் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளில் தமது விருப்பத்தைச் செலுத்த வேண்டும்.

வீடியோ டெக் பிரதி மூலம் மாணவர் தாம் படிக்கும் நேரங்களில் கூட தாம் விரும்பிய சினிமாப் படங்களைத் தொலைக்காட்சி மூலம் பார்க்கிறார்கள். இந்த நிலையை மாணவர் மாற்றுவதன் மூலம் தமது பெற்றோரின் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும். பெற்றோர் மாணவர்களை எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் கற்கவைக்கின்றனர் என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

எனவே மாணவர் நல்லொழுக்கமுள்ளவர்களாகத் திகழ வேண்டும் ஆயின் தொலைக்காட்சி மூலம் கிடைக்கும் சிறந்த அம்சங்களைப் பார்க்க வேண்டும். அந்த நல்ல அம்சங்களைத் தமது சகபாடிகளுடன் கலந்துரையாட வேண்டும். இதனால் மாணவர் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ்வார்கள் என்பதோடு நாட்டில் முன்னேற்றம் உள்ளவர்களாகவும் வாழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## "பெற்றோரைப் பேணுவோம்"

"அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்பது ஒளவையின் பொன் மொழி. பத்து மாதம் சுமந்து பெற்றாள். பகலிராவய் விழித்திருந்தாள், வித்தகனாய் கல்விபெற செய்தாள் இவையெல்லாம் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த தாயின் கடமையாகும். அது மட்டுமா நாளெல்லாம் பட்டினியாய் இருந்திடுவாள். ஒரு நாளிகை நம் பசி பொறுக்கமாட்டாள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதிற்கிணங்கப் பெற்றோரே நம் தெய்வங்கள். நம் எதிர்காலசுபீட்சத்திற்காக அல்லும், பகலும் அல்லலுறும் ஜீவன்கள், தம்பிள்ளைகளின் எதிர்காலக் கனவை நனவாக்க வேண்டும் என ஆதங்கம் கொண்டவர்கள் தான் பெற்றோர் என்னும் உத்தம ஒளிவிளக்குகள்.

தாயினுடைய இடத்தைத் தாயினால் தான் நிரப்பமுடியும். ஒரு சிற்றன்னையிடம் அந்தத் தாயின் உணர்வலைகளையும், தியாக மனப்பான்மையையும் காணமுடியுமா? பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டே பிள்ளைகளைப் படிக்கவைக்கிறார்கள். எனவே நாம் கெட்ட பழக்க வழக்கங்களில் ஈடுபடாது சிறந்த பிரஜைகளாக சமுதாயத்தில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று மாணவர் பெற்றோரை மதிக்கும பண்பு அருகிக் கொண்டே வருவதை சமுதாயத்தில் காணலாம். எனவே நம் பெற்றோர் எமக்காகப் படும் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவது அவசியமானதாகும்.

தந்தை தன் பிள்ளைகளின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாக அமைகின்றான். அவர் தன் குடும்பதிற்காக உழைக்கின்றார். இந்த உழைப்பின் அறுவடையின் பயனை மாணவர் வீணாக்கக் கூடாது. தன் கல்வியை இரு கண்கள் என நினைத்துச் செயற்பட வேண்டும். "தந்தை தாய் பேண்" என்பதற்கிணங்க அவர்களை மதிக்க வேண்டும். அவர்களின் புத்திமதிகள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வின் அத்திவாரம் என்பதனை உணர வேண்டும். பிள்ளைகள் தமது பெற்றோருடன் அன்பாகவும், பண்பாகவும் கீழ்ப்படிவாகவும் உள்ளவர்களாகச் சமுதாயத்தில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

இப்பிறப்பில் தெய்வத்திற்கு அடுத்தபடியாக மதிக்கப்படக் கூடியவர்கள் பெற்றோரே. இச் சமுதாயத்தில் தாய்மாரே குடும்ப நிர்வாகத்தில் பொறுப்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். தன் பிள்ளைகள் தவறு செய்தாலும் அதனைப் பெரிதுபடுத்தாது மன்னிக்கும் மகோன்னத பண்புள்ளவர் இப் பெற்றோரே. எம்மிலும் மூத்தோரை நாம் மதித்தால்தான் ஏனையோர் எம்மை மதிப்பர்.

ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்ல முன் 5 வருடங்களாக வீட்டிலேயே சுற்றாடலை அவதானிப்பதன் மூலமே பல விடயங்களைக் கற்கிறது. இவ்வாறான சுற்றலுக்கு வழிகாட்டியாக அமைபவர்கள் பெற்றோர்களேயாவர் . கல்வி இன்று வகுப்பறையைத் தாண்டி, கல்வி நிறுவனங்களின் வளாகத்தைத் தாண்டி அலுவலகத்தில், தொழிற்சாலையில், வீட்டில் வெளி இடத்தில், வீட்டில் தாயின் கருவறையில் உருவாகும் செயலாக மாறியுள்ளது. குழந்தைக் கல்வியை எங்கே ஆரம்பிப்பது? அதை எவ்வாறு வளர்ப்பது? என்ற பல வினாக்களுக்கு விடை காண வேண்டியது அவசியமாகும். ஏனெனில் மனித வளர்ச்சி, சமுதாயவளர்ச்சி என்பது ஆரம்பக் கல்வியிலே தங்கியுள்ளது. ஆசிரியர், பெற்றோர் குழந்தையின் இடைவினையில் பிரதானமானவர்கள் இவர்களுக்கும் குழந்தையின் எதிர்கால வாழ்க்கைக்கும் இடையில் நிலையான நிர்ணயிக்கின்ற பங்களிப்பு உண்டு.

வயிற்றிலிருக்கின்ற சிசுவிற்கு இருக்கிற உள்ளார்ந்த ஆற்றலை ஒரு தாய் புரிந்து கொண்டு தாய் மொழியை இனிமையாகவும், திருத்தமாகவும் பேசுவது ஆரம்பக் கல்வியின் அறிவூட்டலில் முதற்படியாகும்.

சிசு தாய் பேசும்போது ஏற்படுகின்ற உணர்வலை கடத்துகை காரணமாக அப்பேச்சைக் கேட்பதற்குத் தயாராகின்றது. குழந்தை தனது முழுக்கவனத்தையும் அப்பேச்சிலேயே செலுத்துகின்றது. தாய் அடிக்கடி பேசும்போது அம்மொழியைத் தன் செவிகளுக்குப் பழக்கப்படுத்திக் கொள்ளும் சிசு திடீரென தாய் வேறொரு மொழியில் பேசமுற்படும்போது அம்மாற்றத்தையும் விளங்கிக் கொள்கின்றது என்ற உண்மையை ரொட்பெய்லி கூறுகின்றார்.

எனவே இக் கூற்றுக்களிலிருந்து குழந்தை வீட்டில் பாடசாலைக்குச் செல்ல முன் பெற்றோரிடமிருந்து அவதானிப்பின் மூலம் மொழியைக் கற்றுக் கொள்கின்றது. குழந்தைக் கல்வியின் அடித்தளமாக பெற்றோரின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

நாம் பெற்றோருக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டும். அவர்களுடன் மென்மையாகவும், புன்னகை பூத்த முகத்துடனும் பேச வேண்டும். பெற்றோர் செய்யும் வேலைகளுக்கு உதவி செய்தல் அவசியமானதாகும். எல்லா நேரங்களிலும் அவர்களுக்கு அமைதியையும், நிம்மதியையும் கொடுத்தல் முக்கியமானதாகும். எங்காவது செல்வதென்றால் அல்லது ஏதாவது வேலைகளைச் செய்வதென்றால் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களது ஏவலை உடனடியாகச் செய்ய முடிவதும் அவர்களது அழைப்புக்கு மகிழ்வுடனும், உற்சாகத்துடனனும் பதிலளிப்பது அவசியமாகும். பெற்றோருக்கு வயது செல்லும் காலத்தில் அவர்களைப் பராமரிக்க வேண்டியது பிள்ளைகளின் தலையாய கடமை ஆகும்.

எமது வாழ்க்கைக்காக சுமைதாங்கியாக வாழ்ந்தவர்கள். பிள்ளைகளுக்காக வாழ்வில்பட்ட இன்னல்களையும், தடைகளையும் பிள்ளைகள் நினைவில் கொள்வார்களாயின் நிச்சயம் பெற்றோரை வெறுத்து ஒதுக்கமாட்டார்கள். எமக்காக உழைத்து எம்மில் அக்கறை கொண்டு நல்வழிப்படுத்தியவர்கள். நாம் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காகச் சுமைதாங்கியாக மாறியவர்கள். அப்படிப்பட்ட பெற்றோரை நாம் வெறுப்போமாயின் எமது சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக வேண்டிவரும். உலகில் புனித படைப்பென்றால் அது பெற்றோருக்கு நிகரில்லை. எந்த ஒரு காரணத்ததைக் கொண்டும் நாம் பெற்றோரைப் பிரிய நினைக்கக் கூடாது.

“எமது பெற்றோரின் அன்பை நாம் குறித்துக்கொண்டால் நிச்சயம் இறைவன் நமது ஒளியைப் போக்கிடுவார்”

தாயைப் போல் பிள்ளை என்றுதான் சொல்வார்கள். தகப்பனைப் போல் சொல்லமாட்டார்கள். அங்கேயும் தாய்மைக்குத் தான் முக்கியத்துவம்கொடுக்கப்டுகின்றது. கருவின் பாரம் தாங்கிக் கண்ணாக எமைக்காக்கும் தாயுள்ளங்கள்தான் பொறுமையின் பொக்கிஷங்கள்.

குடும்பம் என்னும் போது அங்கே அன்பின் அமைவிடமே அம்மாவாகும். அப்பாவின் பொறுப்பு கூடுதலாக இருந்தாலும் குறைவாகவே கணிக்கப்படுகின்றது. பெண்ணின் பொறுப்புத் தான் அதிகமாக அரங்கேற்றமாகின்றது. பெண்கள் வீட்டின் கண்கள் என்கிறார்கள்.

அம்மா என்பது தமிழ் வார்த்தை.அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே பின் நல்லவராகவும்,தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" இங்கும் பிள்ளைகளின் பெற்றோரின் பங்கு எவ்வளவு சிறப்பம்சமுடையது என்பது புலனாகின்றது. தாயிற்சிறந்த ஒரு கோவிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. எனவே மாணவர்களாகிய நாம் பாசத்தின் உறைவிடமான பெற்றோரை மதித்து மரியாதை கொடுத்து உத்தமபுஷர்களாக வாழ்வோமாக.

# பேரறிஞர் சி.என். அண்ணாத்துரை

தேன் மொழியாம் செந்தமிழைத் தீஞ்சுவையுடன் அடுக்கு மொழித் தமிழினிலே ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைத்தார் அறிஞர் அண்ணா. இவர் காஞ்சி புரத்திலே நடராசன் தம்பதிகளுக்கு மகனாக 15.09.1909 ம் ஆண்டு அவதரித்தார். அவர் தமது ஆரம்பக்கல்வியை காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் கற்றார். பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமது எம். ஏ பட்டத்தை முடித்துக் கொண்டார்.அண்ணா பெரியாரின் திராவிடக் கழகத்திலே சேர்ந்தார். பின் அதிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தார். அண்ணா தன் தம்பிமாரை துணையாக்கி இரா நெடுஞ்செழியனை தனது கட்சியின் செயலாளர் ஆக்கினார். அவர் பேச்சு வன்மையால் மக்களை கவர்ந்தார். அண்ணாவின் பேச்சுத்துறையில் வெற்றியை அன்னாரது அடுக்குமொழித் தொடரும் அணியழகு மிகுந்த சொல்லாட்சியும் உறுதி செய்தது. அண்ணா, பல துறைகளைப்பற்றி அறிந்திருந்தமையாலும், அதைப்பற்றி சுயமாகச் சிந்தித்தமையாலும் சிறந்த கருத்துக்கள் அவரிடம் ஊறிக் கொண்டிருந்தன. அவர் ஒரு முறை கட்சிப் பிரச்சாரத்துக்காக சென்ற போது அவர் வரவை எதிர்பார்த்த மக்கள் நித்திரையாகி விட்டனர். உடனே அவர் மாதமோ சித்திரை நேரமோ பத்தரை உங்களுக்கோ நித்திரை என்றதும் நித்திரை கொண்ட மக்கள் விழித்து எழுந்து அவரது பேச்சைக் கேட்டனர். இதிலருந்து அண்ணாவின் பேச்சாற்றலுக்கு வேறு உதாரணம் வேண்டுமா?

பண்டிதத் தமிழை பாமர மக்களின் இலக்கியமாக மாற்றிய பெருமை அண்ணாவையே சாரும். புதிய சொற்களைத் தமிழில் தோற்றுவித்தார். உதாரணமாக அபேட்சகர் - வேட்பாளர், பஸ் - பேருந்து, காரியதரிசி - செயலாளர் என மாற்றினார். அரசியல் பேச்சுக்களில் இலக்கிய மேற்கோளைக் காட்டினார். இதனால் பாமர மக்களுக்கும் இலக்கியம் என்பது எட்டாக்கனியல்ல என்ற உணர்வு ஏற்பட்டது. உதாரணமாக அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாக (சிலப்பதிகாரம்) இரந்தும் உயிர் வாழ வேண்டின் (குறள்) போன்ற அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் மேற்கோள் காட்டப்பட்டன.

காமராஜர் தி.மு கழகத்தைப் பார்த்து செக்குமாடு என்றாராம். அதற்கு அண்ணா கூறிய பதிலாவது நாங்கள் செக்கு மாடுகள் தான், செக்கு மாடுகளுக்குத் தீனி போடத் தேவையில்லை, அவை பாதை மாறாமற் போகும். செக்கிலுள்ளது எண்ணையாகும் வரை சுற்றும். ஆனால் கோயில் மாடு இருக்கிறதே அது கண்ட இடத்திற்குப் போகும் கண்டதையும் தின்னும். தெருவில் போவோரை விரட்டும் பொருட்களை நாசப்படுத்தும் அதைப் போலத்தான் காங்கிரஸ் கட்சி என்றார். இவ்வாறாக அண்ணா எதிரிகளுக்கு தன் சொல்லம்புகளால் சாட்டையடி கொடுக்கக் கூடிய வல்லவர்.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அண்ணா உலகெங்கெணுமிருந்து வந்த புலமை சார் அறிஞர் மத்தியில் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவ்வுரையின் புலமைத் தொனியின் அற்புத ஆற்றலை பத்திரிகைத் துறையினர் பாராட்டியுள்ளனர்.

அண்ணாவின் எழுத்துப்பணி ஏட்டாசிரியர், கட்டுரை ஆசிரியர், கதாசிரியர், நாடகாசிரியர், கவிஞர் , பத்திரிகையாளர் எனப் பல்வேறு துறைப்பட்டன. அதில் தம்பிக்குக் கடிதங்கள், பணத்தோட்டம், கம்பரசம், பரந்தாமனுக்குப் பகிரங்கக் கடிதம், ஏ தாழ்ந்த தமிழகமே, தீ பரவெட்டும், பார்வதி பீ.ஏ, இரங்கூன் ராதா, காதல் ஜோதி என்பன அண்ணாவின் நூல்களாகும்.

அண்ணாவின் வேலைக்காரி திரைப்பட உலகில் மாபெரும் புரட்சியை உண்டு பண்ணிய மகத்தான காவியம். அவர் அணியழகு ஊட்டி, மறுமலர்ச்சித் தமிழ் கூட்டி, புதிய நடைகளில் அவருக்குப்பின் வந்த திரைப்படக் கர்த்தாக்களுக்கு ஓர் முன்னோடியாயிற்று. அண்ணாவின் திரைப்படப்பாணி திரைப்படத் துறையில் மட்டுமல்ல ஒரு புதிய எழுத்தாளர் பரம்பரையையே தோற்றுவித்தது. மு.கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், ஆசைத்தம்பி, மாறன் போன்ற தி.மு.க எழுத்தாளர் தோன்றினர்.

நாடகத்துறையிலே அண்ணாவின் ஈடுபாடு நாடக ஆசிரியர் மட்டுமல்ல சமத்துவச் சமுதாயம், கலப்புத் திருமணம், சீர்திருத்தத் திருமணம், போன்ற மறுமலர்ச்சியை தன் எழுத்தில் சுட்டிக் காட்டினார். லட்சோபலட்ச தானைத் தலைவன், கற்றோர் மன்றத்தில் கணிக்கப்

பெறுபவர், அன்று கூத்தாடிகள் கேலிக்குரியவர்களாகக் கணிக்கப்பட்ட காலம், அண்ணா தன் சமூக அந்தஸ்தைப் பெரிதாகக் கொள்ளவில்லை. தானே ஒரு கூத்தாடியாக மாறினாரென்றால் அவர் பெருமை பற்றிப் பேசவேண்டுமா? சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ய நாடகத்தில் அரசகுருவாகவும், நீதி தேவன் மயக்கத்தில் இராவணனாகவும் அண்ணா காட்டிய தேர்ச்சி மக்களைத் திகைக்க வைத்தது.

அண்ணா பல பத்திரிகைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் தீட்டிய ஆசிரியர் தலையங்கங்கள் காத்திரமானவை. தனது அரசியல் கொள்கைகள், சீர்திருத்தக் கருத்துக்கள் ஆகியவற்றை பத்திரிகைகள் மூலம் முன்னெடுத்துச் சென்றார்.

தி.மு.க தலைவர்களால் நடாத்திவைக்கப்பட்ட கலப்புத் திருமணங்கள் அனைத்தும் சீர்திருத்தத் திருமணங்கள் ஆகும். சாதிக்கு அடிப்படை இந்துதர்மக் கருத்துச் சரியாகவோ, தவறாகவோ நிலவிய காரணத்தால் கலப்புத் திருமணங்கள் சமயச் சடங்குகள் இன்றியே நடைபெற்றன. இத் திருமணங்கள் சிக்கனமுடையதாகவும் வளத்திலும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட சமூகங்களில் அண்ணாவின் ஆசியுடன் எண்ணிறந்த சீர்திருத்த திருமணங்கள் நடைபெற்றன.

1957ம் ஆண்டு நடைபெற்ற காஞ்சிபுரம் சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று, சட்டமன்ற விவாதங்களிலே தமிழ் மழை பொழிந்தார். 1962ல் தோல்வி கண்டார். 1976ம் ஆண்டு தி.மு.க வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அண்ணாவுக்கு முதலமைச்சர் பதவி கிடைத்தது. சென்னை நகரில் அவரை வாழ்த்துவதற்கென வந்த லட்சோபலட்ச மக்கள் முன்னிலையில் பேசினார். என்னிடம் நம்பிக்கை வைத்து இப் பாரிய பொறுப்பைத் தந்துள்ளீர்களே! உங்கள் நம்பிக்கைக்கு நான் தகுதியுடையவனா? என மக்கள் வெள்ளத்தைப் பார்த்துக் கேட்டார்.

அண்ணாவின் எளிமையும், இனிய பண்பும், ஆடம்பரமோ, ஆர்ப்பாட்டமோ அற்ற தன்மையும் நாடறியும், இதனால் அவரை எளிதில் எவரும் அணுக முடியும். முதலமைச்சரான பின்னரும் புகையிரத நிலையத்தில் நின்று தன் சட்டையை மாற்றி அணிந்தவர் முதலமைச்சர் அண்ணாவே ஆகும்.

அண்ணா முதலமைச்சராகப் பணியாற்றிய காலமோ மிகக் குறுகியது. இரண்டாண்டு காலத்தில் பல்லாயிரம் மக்களின் மனதைக் கவர்ந்தார்.

1969 ம் ஆண்டு தன் இன்னுயிரை நீத்தார். அவரின் பிரிவை தாங்க முடியாமலும், இறுதிச் சடங்கில் சனநெரிசலில் அகப்பட்டும் தம் இன்னுயிரைப் போக்கினர் மக்கள். இறுதிச் சடங்கில் பங்குபற்ற முடியாது அவரின் சிலையருகே கண்ணீர் வடித்தனர் மக்கள். கலைஞர் கருணாநிதி தனது இரங்கலுரையில் ஒரு விரல் காட்டி நின்றாய் ஆணையிடுகிறாய் என்றிருந்தோம். ஓராண்டு காலத்தில் எம்மை விட்டுச் சென்றுவிட்டாயே! என்று பேசினார். இறுதி யாத்திரையில் $1\frac{1}{2}$ கோடி மக்கள் பங்குபற்றியமை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. மக்களது உரிமைக்காகவும், அவர்களது விருப்பங்களையும் நிறைவேற்றிய அறிஞர் அண்ணா தன் குடும்பத்திற்கு வறுமையையே சேர்த்து வைத்தார்.

# கந்த முருகேசனார்

அறிஞர்கள் உயிர் வாழும் போது நாம் அவர்களை தூற்றுகின்றோம். இந்நிலை அவர்கள் இறந்ததும் மாற்றம் அடைகின்றது.கல்லால் எறிந்த நிலை மாறி,கற்களைக் கொண்டு மணிமண்டபம் அமைக்கும் நிலையாகின்றது. இந்த நிலைமையை மாற்றி அமைத்தவர் தான் தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் எனக்கூறலாம். ஏனெனில் அவர் உயிரோடு வாழும் போதே மணிவிழாவைக்கண்டவர்.

இவரைப்பற்றி அறியாதவர்கள் நம் நாட்டிலே இருக்கமாட்டார்கள். அந்த அளவிற்கு அவரிடம் பாலர் முதல் பட்டதாரிகள் வரை கல்வி கற்றார்கள். அது மட்டுமல்ல பண்டிதர்கள் அவரிடம் கல்வி கற்றார்கள். அவரை அறியாதவர் பலர் அவரிடம் படித்தவர்களிடம் இருந்து பல்வேறு விடயங்களை அறிந்து கல்விமான்களாகியுள்ளனர்.

புலவர் ஒலி இடையறாது முழங்கிய புலோலியில் தென் திசையில் அமைந்த தென்புலோலியில் தோன்றிற் புகழோடு தோன்றுக என்ற பொய்யா மொழிப்புலவரின் கூற்றுக்கமைய 27.04.1902ல் தோன்றினார் கந்தமுருகேசனார். அவருடைய ஆரம்பக் கல்வி 4ம் வகுப்பாகும். ஆனால் அவர் கற்பிப்பது பண்டிதர்களுக்காகும். அவர் பள்ளிப்பருவத்திலே துள்ளித்திரிந்து நீண்ட நாட்கள் கற்கவுமில்லை.

தமிழ்த்தாத்தா யா/புற்றளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினார். பின் அவர் காலினால் நடக்க முடியாத காரணத்தினால் தன் வீட்டிலேயே திண்ணைப்பள்ளியை நடாத்தினார். தனது இல்லத்திற்கு தமிழகம் எனப்பெயர் இட்டார். தன்னிடம் அறிவுப்பசி தீர்க்க வரும் சிறுவர்கள் பெரியோருக்கு நல்ல ஆசானாக நின்று வழிநடாத்தினார். தன்னலமற்ற பொது நோக்கமும், இரக்கமும், செயலும் ஒருங்கே அமையப்பெற்றவர் மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்டவர். இவருடைய பொறுமையைச் சோதிக்கும் மாணவர்கள் பலர் உள்ர். தன்னுடைய மாணவர்களை பின்னடைவான மாணவர், மீத்திறன் மாணவர் எனப்பாகுபாடு காட்டியதில்லை. எல்லோரையும்

சமமாக மதிக்கும் சீரிய பண்பாளர். மாணவர் மத்தியிலே சிலேடைக்கருத்துக்களை கூறி அவர்களைக்கற்க வைப்பதில் ஆர்வத்தை ஊட்டினார். இதற்குச் சிறிய உதாரணமொன்றைக் கூறுதல் சாலப் பொருந்தும்.

குறை குடம் தளம்பும். நிறை குடம் தளம்பாது என அவரது மாணவர் ஒருவர் கூறினார். அப்போது கந்தமுருகேசனார் தம்பீ! நீ கூறுவதைப் பார்த்தால் உன்னை விடப்பெரிய அறிவாளி ஒருவன் இருக்கின்றான். அந்த மாணவனின் நண்பன் அவரை நோக்கி யார் அந்த அறிவாளி என்றான். அப்போது தமிழ்த்தாத்தா மந்திகையில் ஒருவன் தேநீர்க்கடை வைத்திருக்கிறானே! அவன் தான். அப்போது அம் மாணவர்களுக்கு கோபம் வந்தாலும், அவருடைய உடன் நகைச்சுவைப் பதில் தங்களைத்திகைக்க வைத்தது என்று கூறுகின்றனர். காரணம் அக் கடைக்காரன் வாய் பேசமுடியாத ஊமை.

அவர் தமிழில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றவர் அல்லர். ஆங்கில மொழி, ஆரியமொழி, ஆகியவற்றைத் துறைபோகக்கற்றவர். அவர் இலக்கியம், இலக்கணம், சமயம், கணிதம் தத்துவம், புவியியல் ஆகிய பாடங்களைக் கசடறக் கற்றவர். சைவம் வைணவம், கிறீஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்களில் நிறையத் தெளிவு பெற்றார். அவரது மாணவர் சிலர் மதங்களில் சமயத்தைப்பற்றி அபிப்பிராயம் கேட்பார்கள். அதற்கு அவர் இருக்கிறார், இல்லை என்ற கருத்துவேறு, நான் இராமலிங்கம் அடிகளைப்போல் ''மதம் என்னும் பேய்பிடித்திருக்க வேண்டும்'' என்ற எண்ணக்கருத்துடையவன் எனப்பதிலளிப்பார். அவர் வெண்தாடி வேந்தர் ஈ.வே.ரா பெரியாரின் திராவிட கழகக் கொள்கையுடையவராகக் காணப்பட்டார்.

தமிழ்த்தாத்தாவினுடைய குரு முருகேசபிள்ளை. அவரிடம் கந்தபுராணம், நன்னூல் காண்டிகையுரையில் பதவியல் வரையுமே படித்தவர். இவரிடம் அளப்பரிய விவேகம் உண்டு என்றால் அதற்கு காரணம் உண்டு. அவர் நன்னூல், யாப்பருங் காலக் காரிகை, தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களை எவருடைய உதவியுமின்றிக் கற்றார்.

ஊருக்கு ஊருணி நீா் பொதுவானது. உலகிற்கு குரு சொந்தம் .பொதுமக்கள் சொத்தாக விளங்கும் தமிழ்த்தாத்தா "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உன்னத பண்பைக் கொண்டவர். சாதி, சமயம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு தந்தையிடம் இல்லை. இறைவன் படைப்பில் தோன்றிய எல்லோரும் சமமானவர்கள் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதே இவருடைய குறிக்கோள். எல்லோரும் வாழவேண்டும் என்ற நோக்கத்திற்கு இடையூறு செய்யும் தீய நோக்கங்களைக் களைந்து உலகைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற பெருநோக்கைக் கொண்டவர். அத்தகைய நல்ல செயல்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் அதற்காகப் போராடும் இயல்புடையவர்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளிலும் தள்ளாமை நீர்த்து.

ஒருமுறை ஒரு பட்டதாரி ஒருவர் யேசுநாதர் கூறியது போல நாம் நடவாது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் நாமும் திருப்பி அறையவேண்டுமென்றானாம். அதற்கு அவர், அது தவறுதம்பி, தீமை செய்தவனுக்கு நாம் தேடிநன்மை செய்ய வேண்டும். அப்பொழுது தான் அவன் உணருவான். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்" என்ற குறளிலும் பார்க்க "இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்ற குறளையே யான் பெரிதும் விரும்புவதாகக் கூறுவார். இன்னா செய்தாரை ஒறுத்தல் என்பது மற்றவர்களைப்பழிவாங்குவது ஆகும். அந்த ஒறுத்தல் என்ற சொல்லிலும் பார்க்க ஒறுத்தல் என்ற சொல் வராத மற்றைய குறளையே விரும்புகின்றேன். எனவே இதிலிருந்து , அவரிடம் விளங்கும் அன்பு,இரக்கம், கருணை, ஆகிய சிறந்த பண்புகளை நாம் காண முடிகின்றது. அத்துடன் அவர் இளமையுணர்ச்சியும், இரும்பு உள்ளமும் கொண்டவராகக் காணப்பட்டார்.

இன்று இவரிடம் கற்ற மாணவர்கள் அறிஞர்களாகக் கவிஞர்களாக கல்விமான்களாக உருவாகியுள்ளனர். அவர்களிடம்

உள்ள சிறந்த அறிவினால் இன்று சிறந்த உயர்ந்த பதவி வகிக்கின்றனர். இதற்கு உதாரணமாக ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் தோன்றி அதன் ஒளி உலகம் முழுவதும் பிரகாசிக்க முடியுமல்லவா?

அறிஞர் வறுமையில் வாடுகின்றனர் என்பதற்கு எமது தமிழ்தாத்தா ஒரு எடுத்ததுக்காட்டாகும். இவர் 1930ம் ஆண்டில் இயற்றிய ''நல்லைநாவலன் கோவை'' என்ற நுலை கையெழுத்துப்பிரதியாகவே (69 ஆண்டுகள்) நீண்டகாலமாகக் காணப்பட்டது. இதனைக்கவனத்தில் கொண்டு இவரிடம் கற்ற பண்டிதர் பரந்தாமனும், அவரோடு வேறுபல அறிஞர்களும் சேர்ந்து இந்நூலை 1999ம் ஆண்டு அழகுற அச்சேற்றி சிறந்த நூலாக வெளியிட்டனர். அவரது கவிதைகளுக்கு நல்ல உரைகளோடு நூல் வெளிவந்தது. உரையாசிரியர்களாக இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா பிள்ளைக்கவி வ.சிவராஜாலிங்கம் பிஏ ஆனஸ்ட் ஆகியோர் விளங்குகின்றனர்.

கந்த முருகேசனார் அந்நூலில், தான் சமயப்பற்றில்லாதவனாக இருந்தாலும் நாவலரின் ஆற்றலுக்கு மதிப்புக் கொடுத்து இதனை எழுதினேன் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர் பத்திரிகையில் பல கட்டுரைகளையும், கண்டனங்களையும் எழுதிப் புகழ் பெற்றார். அவர் திருமணம் செய்யாமல் பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர். 14.06.1965ல் புகழுடம்பு எய்தினார்.

# மகாத்மா காந்தி

20ம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை பாரத தேசம் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்தது, அந்நியர் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிப்பதற்கான மத்திய வகுப்பினைச் சார்ந்த காங்கிரஸ் இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்திற்காகக் கடுமையாக உழைத்தவர் தான் காந்தியடிகள். அதனால் அவர் இந்தியாவின் வீரபுருஷராக கணிக்கப்பட்டார்.

காந்தி அடிகள் கி.பி.1986ம் ஆண்டில் கத்தியவார் பிரதேசத்தில் போர்பந்தர் என்னுமிடத்தில் காபாகாந்திக்கு மகனாக அவதரித்தார். அவருக்கு மோகன்தாஸ் கரம் சான்ட் காந்தி எனப் பெற்றோர் பெயர் சூட்டினர். பிற்காலத்தில் அவர் காந்திஜீ, பாபுஜீ என அழைக்கப்பட்டார். இவரது தந்தை ராஜஸ்தானி நீதிமன்றத்தில அங்கத்துவராக இருந்தததோடு ராஜகோட் அரசில் அமைச்சராகவும் சேவை புரிந்தார்.

காந்தி அடிகள் தன் பாடசாலைக் கல்வியை இந்தியாவில் முடித்துக் கொண்டு உயர் கல்வியைத் தொடர்வதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அவர் ஆங்கிலப் பிரயாணி ஒருவரோடு உரையாடிய போது , இங்கிலாந்து குளிர்மையான பிரதேசம்.அங்கு மாமிசம் உண்ணாமல் உயிர்வாழமுடியாது எனக் கூறினார். அப்போது காந்தியடிகள் பிஸ்கே குடாவில் மாமிசஉணவு உண்ணாமல் உயிர் வாழ முடியும் எனக் கூறினார்.

எனது நண்பர் ஒருவர் என் மீது கொண்ட அன்பு காரணமாக புலால் உண்ணாவிடில் உடல் வளம் குன்றிவிடும் எனக் கூறினார்.புலால் உண்ணாவிடில் ஆங்கிலச் சமூகத்துடன் கூச்சமின்றிப் பழக முடியாது என்பது அவர் கருத்தாகும். ஒரு நாள் காந்தி தன் நண்பரொருவருடன பிரமாண்டமான உணவகத்திற்குச் சென்றார். அங்கு சென்ற போது பலர் நடுவில் காந்தியும் இருந்தார். அவர் நண்பருக்குப் பயந்து பணியாளை அழைத்தபோது நண்பருக்குப் கோபம் ஏற்பட்டது. நாகரீக ஜனங்களின் சகவாசத்திற்குத் தகுதியற்றவன். சரியாக நடந்து கொள்ளத் தெரியாவிடின் வேறொரு உணவகத்திற்குச் சென்று சாப்பிடும் என நண்பர் கூறினார். சைவ உணவகம் அன்று முடி

இருந்தமையால் அன்றைய தினம் பட்டினி கிடந்தார் காந்தி. அவர் பல சந்தர்ப்பங்களில் பட்டினி கிடந்ததுண்டு. காந்தி இங்கிலாந்திற்குப் புறப்பட முன்னர் புலால் உண்ணாமை, மது அருந்தாமை ஆகிய இரு கொள்கைகளையும் கடைப்பிடிப்பேன் எனச் சத்திய வாக்கைத் தன் தாயாருக்கு அளித்தவரல்லவா? தான் கொண்ட கொள்கையில் அணுவளவேனும் பிசகு ஏற்படக் கூடாதெனக் கருதி பல சோதனைகளுக்கு மத்தியிலும் நிதானமாக வாழ்ந்தார் காந்தி.

இங்கிலாந்தில் சட்டத்துறையில் காந்தி பரிஸ்ரர் பட்டம் பெற்றார். அதன் பின் அவர் இந்தியாவிற்கு வந்து சட்டத்தரணித் தொழிலை மேற்கொண்டார். அவர் தென்னாபிரிக்காவிற்கு மேற்கொண்ட பயணம் அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அக் காலத்தில் வெள்ளையருக்கு எதிராக மக்களுக்காக நீதிகோரி சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றார்.அதன் பின் அவர் 1914ம் ஆண்டு இந்தியாவிற்குத் திரும்பினார்.

அவர் தொழில்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது என்ற சமத்துவக் கொள்கையைக் கடைப்பிடித்தார். இவர் "இந்திய சுயராஜ்யம்" என்ற நூலில் இந்திய மக்களைப் பீடித்த வறுமை நோய்க்கு இராட்டினம் ஒன்றே மருந்து என எழுதினார். அவர் தனது கையால் துணி நெய்ய வேண்டுமென்பதே அவரது இலட்சியமாகும். ஆகையினால் ஆலை நெசவுத்தொழிலை விட்டுவிட்டு இந்தியாவில் உற்பத்தியாகும் நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்த துணிகளையே உடுத்துவதென விரதங்கொண்டார். இக் காலத்தில் கதர் மட்டுமே அணிய வேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாகியது. இதுவரை சுதேசி ஆலைத் துணியையே காந்தி அரை வேட்டியாக உடுத்தியிருப்பார்.

காந்தியடிகள் வாழ்க்கையில் சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப்பிடித்தார். "யாதொரு தெய்வங் கொண்டீர், அத் தெய்வம் ஆகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்ற பரந்த கொள்கையுடைய சைவமக்கள் அவரைச் சமயப் பெரியாராகக் கொள்வர். இந்து மதம் கூறும் ஒழுக்கநெறிக்கு ஏற்பக் காந்தியும் சத்திய நெறி, சத்திய போதனைகளைப் பின்பற்றினார். இவர் கூறும் ஒழுக்கநெறி அகிம்சை போன்றவற்றினாலேயே இந்து மதமும் ஆன்ம ஈடேற்றத்திற்குச் சுட்டி நிற்கின்றது. பத்துக் குணங்களை சத்தியம்,

அகிம்சை என்னும் இரண்டினுள் அடக்கலாம். இவ்விரு குணங்களும் காந்தியடிகளின் வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது.

கடவுள் நம்பிக்கை அவசியம். உயிர்களிடத்தில் அன்பாகப் பழகுதல் வேண்டும். மக்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டும். மன்த்திலே தூய சிந்தனை வளர வேண்டும் என்பன இந்து மதம் பன்நெடுங்காலமாகப் போற்றி வருகின்ற பண்புகளாகும். இப் பண்புகளுக்கு உறைவிடமான பெரியார் மகாத்மா காந்தி ஆவார். இவர் கூறும் ஒழுக்க நெறி, அகிம்சை போன்றவற்றினாலேயே இந்து மதமும் ஆன்மீக ஈடேற்றத்திற்குச் சுட்டி நிற்கின்றது. தியாக உணர்வுடன் சத்தியாக் கிரகத்தைப் பின்பற்றியே நாட்டைச் சுதந்திரம் அடையச் செய்தார்.

காந்தியடிகள் 1948ம் ஆண்டு தான் அமரத்துவம் அடையும் வரையில் சத்தியம், அன்பு, அகிம்சை என்பவற்றைத் தம் அன்றாட வாழ்விற் போற்றி வந்தார். அவற்றுள் சத்தியத்தின் பெரும் ஈடுபாடு இருந்தது. சமூகத்தில் இருந்து கொண்டு அதற்குச் சேவை செய்வதை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டார். படைப்பலத்தையோ, போர்ப்பலத்தையோ நம்பியிருக்காது ஆன்மீகப் பலத்தினால் இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். மக்கள் வையத்தில் வாழ்வாங்குவாழ வழிகாட்டினார். காந்தியை ஒரு புதிய மனிதராக உருவாக்கியது அவரது தெய்வீகப் பத்தி. கடவுள் என்னும் தெய்வீக சக்தி தமக்கு என்றும் உறுதுணையாக இருப்பதை உணர்ந்தார். வாழ்க்கையில் துன்பங்கள் குறுக்கிடும் போது ஆண்டவா வழிகாட்டு என வேண்டுவார். உள்ளத்தில் குடிகொண்ட இறைவனிடம் சரணபுகுவார் அவருக்கு மனத் தெளிவும் சாந்தியும் உண்டானது.

தியாக உணர்வுடன் சத்தியாக் கிரகத்தைப் பின் பற்றியே நாட்டைச் சுதந்திரமடையச் செய்தார். "சத்தியமே வெல்லும்" வாய்மையைச் சத்தியம் என்னும் பெயரால் போற்றி வாழ்ந்தார். சிந்தனையிலும், பேச்சிலும், செயலிலும் உண்மையைக் கடைப்பிடிப்பதே சத்தியம். சிறு வயதில் அரிச்சந்திரன் நாடகத்தில் தன் மனதைப் பறிகொடுத்தார். வாழ்க்கையோ இடையூறுகள் வரினும், அரிச்சந்திரனைப் போல் தாமும் வாய்மையில் தவறாது நடக்க வேண்டுமென அவர் ஆசை கொண்டார்.

சத்தியத்தை நாடுவதே காந்தியின் வாழ்வின் இலட்சியம். தமது வாழ்க்கைச் சரித நூலுக்கு "சத்திய சோதனை" என்ற பெயரை வைத்தார். சத்தியத்தை உணர்வதற்கு உதவக் கூடிய கருவி அன்பு அல்லது அகிம்சை எனக் கண்டார். சிறு வயதில் அவர் கற்ற அன்பும், அகிம்சையும் பின்னர் சமூகம் முழுவதும் பரந்தன. நமக்குள் இருக்கும் இறைவன் ஒவ்வோர் உயிரக்குள்ளும் இருக்கின்றன எனக் காந்தியடிகள் கூறினார்.

சத்தியத்தையன்றி வேறு கடவுள் இல்லையென்றும் கொள்கைக்கு அனுபவமெல்லாம் ஒரு முகமாக உறுதியளித்துள்ளன. சத்திய தரிசனத்திற்குரிய மார்க்கம் அகிம்சை ஒன்றே என்பதை உறுதியாக நம்பினார். நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனின் பிரகாசத்தை விடக் கோடி மடங்கு பிரகாசமுடையது சத்தியம்.

அமெரிக்கர் ஒருவர் தாம் சாப்பிட்ட பாத்திரத்தை இன்னொருவர் அதில் சாப்பிடுவதில்லை எனக் கூறினாராம். அதற்கு காந்தி அடிகள் நாம் சாப்பிட்ட பொருளையே வெளியே எறிந்து விடுவோம் எனக் கூறினாராம். இதிலிருந்து காந்தியின் நாட்டுப் பற்றுத் தெளிவாக விளங்குகிறது. இந்தியா சுதந்திரமடைந்த சிறிது காலத்துள் 1948ம் ஆண்டில் கோட்சே என்ற இனவாதியின் துப்பாக்கிச் சூட்டினால் காந்தி உயிரிழந்தார். அவர் உயிர் நீங்குவதற்குச் சற்று நேரத்திற்கு முன், தன்னைச் சுட்ட கோட்சேயை மன்னித்து விடுமாறு வேண்டுகோள் விட்டார். அவர் ராமநாமத்தைக் கூறியபடி உயிர் பிரிந்தமையும் அவரது பண்பாட்டைக் வெளிக் காட்டும் உணர்வைத் தூண்டும் நிகழ்வாகும்.

# ஜவகர்லால் நேரு

உழைப்பைப் போற்றுபவர் நேருஜீ. தினம் பதினாறு அல்லது பதினேழுமணி நேரம உழைப்பார். தான் இரவுநேரங்களில் விழித்துக் காரியமாற்றுவார். ஆனால் காரியதரிசிமார் அதிகநேரம் உழைத்துச் சம்மதிக்க மாட்டார். செயலாளருக்குத் தன்னால் ஏதாவது சிரமம் ஏற்பட்டால் அதற்குமன்னிப்பு கோருவார். மனித குலத்தின் மாணிக்கமாகத் திகழ்ந்தவர். செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பத்தில் அவர் அவதரித்தார். நேருஜீ 14-04-1889ம் ஆண்டு மோதிலால் நேருவிற்கும், சொருபராணிக்கும் மகனாகப்பிறந்தார்.

அவருக்குப் பெற்றோர் ஜவகர் எனப்பெயரிட்டனர். ஜவகர் என்றால் இரத்தினம் என்று பொருள்படும். ஜவகர் என்றபெயர் அழகிற்கும், பிற்காலத்தில் இரத்தினம் போல் ஒளிவீசுவார் என்பதற்கும் சான்று பகிர்கின்றன. இளமையில் கணவனை இழந்த பீ.பீ அம்மையார் மோதிலால் குடும்பத்தோடு வசித்து வந்தார். மிகுந்த அறிவாளியான அம்மையார் குழந்தையை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். குழந்தைக்கு அம்மையார் உணவுடன் சேர்த்து மகாபாரதக் கதைகளையும், இராமாயணத்தையும் சேர்த்து ஊட்டினார். ஜவகரும் கதைகளில் வரும் வீரர்போலத் தானும் வரவேண்டும் என மனதில் ஆதங்கம் கொண்டார். பெரியோர்களுடன் மிகமரியாதையுடன் நடக்கலானார். இளமைக்காலத்தில் அவர் கற்ற நல்லொழுக்கமே பிற்காலத்தில் மிகவும் மேலான மனிதர்களாக்கின என்பதில் ஐயமில்லை.

குதிரை மீது சவாரிசெய்யவேண்டுமென ஜவாகர் ஏங்குவதுண்டு. மோதிலால் நேருவும் அவருக்கு குதிரை ஒன்றை வாங்கிக்கொடுத்தார். குதிரைப்படையை சேர்ந்த ஒருவர் ஜவகருக்குக் குதிரைஏற்றம் கற்றுக் கொடுத்தார். எட்டுவயது நிரம்பிய ஜவகர் குதிரைஏற்றத்தை கற்றார். தினம் குதிரைமீதேறி நீண்டதுாரம் உலாவச்செல்வார்.

மோதிலால் வழக்கறிஞர் தொழில் மூலம் பெருஞ்செல்வம் ஈட்டினார். மோதிலால் தான்கட்டிய அழகியமாளிகைக்கு ஆனந்தபவனம் எனப்பெயரிட்டார். ஜவகர் தமது பத்தாவது வயதில் ஆனந்தபவனத்தில் குடிபுகுந்தார். குதிரைமீது ஏறி மாளிகைத்

தோட்டத்தை சுற்றிவருவார். ஜவர்கர்லால் மேல்நாட்டு நாய்கள் இரண்டை வளர்த்து வந்தார். இந்நாய்கள் துரத்திப் பிடிக்கப் குதிரைச்சவாரி செய்வதுஇன்பமாக இருக்கும். அகலபாத்தில் மின்சார விளக்குகள் கிடையாது. ஆனந்தபவனம் அக்குறையைத் தீர்த்து வைத்தது. பளீரென மின்னும் விளக்குகளைப் பார்த்துக் கொண்டிருப்பதில் இன்பம் பெறுவார்.

முக்கியமான வழக்குக்காக மோதிலால் இங்கிலாந்திற்குச் சென்றார். இரண்டு மாதங்கள் கழிந்தன. மோதிலால் இங்கிலாந்தில் இருந்தபோது சொரூப ராணிக்கு பெண்குழந்தை பிறந்தது. ஜவகருக்கு விளையாடக் குழந்தை கிடைத்துவிட்டது. மோதிலாலுக்கு அதனால் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளளவில்லை.

ஜவகருக்கு 10வயது இருக்கும். பெண்போதகருக்கு பதிலாக புருக்ஸ் என்ற ஐரோபியர் அமர்ந்துவிட்டார். இவர்தான் ஜவகருக்கு படிக்கும் ஆசையை தூண்டியவர். அந்த ஆசை டிக்கன்ஸ், ஸ்காட்ஸ் போன்றோர் எழுதிய நூல்களைப் படித்துமுடிக்கும் வரை விடவில்லை. இளம் வயதிலேயே ஏராளமான நூல்களை படித்தார். புருக்ஸ் இலக்கியப் படிப்போடு நில்லாது விஞ்ஞான பாடங்களையும் படிப்பித்தார். இதனால் மோதிலால் ஆனந்த பவனத்திலேயே ஒரு விஞ்ஞான கூடத்தை அமைத்துக் கொடுத்தார். ஜவகருக்கு நேரம் போவதே தெரியாமல் சோதனைகளில் மூழ்கிவிடுவார்.

அன்னிப்பெசன்ட் அம்மையார் பிரம்மஞானசங்கம் நிறுவியிருந்தார். அவரின் பேருரைகளை நேரிலும், பத்திரிகைகள. மூலமும் அறிந்திருந்தார் ஜவகர். அம்மையார் காசிக்கு விஜயம் செய்ததை அறிந்த ஜவகரும், புருக்சும் சந்தித்தனர் அம்மையார் ஜவகருக்குத் தாமே உபதேசஞ் செய்து பிரம்மஞானியாக்கினார்.

ஒருசமயம் மோதிலால் இங்கிலாந்திற்குத் தனது குடும்பத்துடன் சென்றார். பல கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை. கடைசியில் உறாரோ கல்லூரியில் ஜவகரைச் சேர்த்தார் மோதிலால். பெரும் செல்வந்தர் கல்வி கற்கும் கல்லூரியாகும். மோதிலால் எதற்கும் அஞ்சாமல் அங்குபடிக்கவிட்டுத் தாய் நாட்டிற்குத் திரும்பினார்.

வின்ஸ்ட் சர்ச்சில் மிகப்புகழ்பெற்ற அந்தக்கல்லூரியில் தான் கல்விகற்றார். அங்கு கல்விகற்கும் ஆங்கிலமாணவர்கள் இந்திய மாணவர்களுடன் பலர் அரசகுமாரர்களாக இருந்தனர். அப்படியிருந்தும் அவர்களுடன் ஜவகர் நெருங்கிப்பழகுவதில்லை. மோதிலால், ஜவகருக்கு ஒருகுறையும் இல்லாமல் வசதிகள் செய்துகொடுத்தார். அவைகளையும் மீறிச் சிலசமயம் வீட்டுஞாபகம் வந்துவிடும். அவர்மிகவும் தைரியகுணமுடையவர். அவர் கடல்கடந்து படிப்பதை எண்ணிப்பெருமூச்சு விடுவார்.

நாட்கள் செல்லச்செல்ல மனம்தெளிந்தார் ஜவகர். சகமாணவர்களுடன் பழகியதால் துயரம் மறைந்தது. ஜவகர் மற்ற மாணவர்களைவிடச் சிறந்து விளங்கினார்.

ஜவகர் தினமும் பத்திரிகை படிப்பதனால் பலவிடயங்களை அறிய முடிந்தது. அதனால் வகுப்பாசிரியர் கேட்கும் பொதுஅறிவு வினாக்களுக்கு உடனடியாக ஜவகர் பதிலளித்தார். ஜவகரிடம் பல மாணவர்கள் சந்தேகங்களை கேட்டுத்தெரிந்து கொண்டனர்.

ஜவகருக்கு அவ்வப்போது சில புத்தகங்கள் பரிசாகக் கிடைத்தன. இத்தாலிய நாட்டு விடுதலைக்காகப் போராடிய கரிபால்டியின் வாழ்கைவரலாறு என்ற புத்தகமும் ஒன்றாகும். அவர் அதனை கவனத்துடன் படித்தார்.அதிலிருந்து அவர்போல் போராடி பாரதநாட்டை அடிமைத்தளையிலிருந்து மீட்க வேண்டுமென எண்ணியதுண்டு.

1910இல் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பீ.ஏ.ஒணர்ஸ் பட்டம் பெற்றார். "இன்ஷெக்டெம்பிள்" என்னும் சட்டக்கல்லூரியில் சேர்ந்து விட்டார். 1912ல் பரீஸ்ரர் பட்டம்பெற்ற ஜவகர் தனது படிப்பை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பினார்.

1913ல் ஜவகரும் காங்கிரஸில் சேர்ந்துகொண்டார். அதன்கூட்டங்களுக்கு ஒழுங்காகச்சென்றார்.

1916ல் காந்திஜீயை சந்தித்தார். அந்தஆண்டு ஜவகருக்கு திருமணம் நடக்க சகலஏற்பாடுகளும நடந்தன. அப்போது அவருக்கு

வயது 27. தனது மகனுக்கேற்ற அழகும்,அன்பும், பண்பும், குணமும் ஒருங்கே அமையப்பெற்ற கமலாவைத் தேர்ந்தெடுத்தார் மோதிலால். செல்வம் படைத்த குடும்பத்தினர் டில்லியில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

காந்திஜீ சத்தியாக்கிரக் - சபையை ஆரம்பித்தார். அதில் மக்களை சேரும்படி அழைத்தார். ஜவகர் காந்திஜியின் அறிக்கையைப் படித்தார். காந்தியின் திட்டங்கள் ஜவகரை கவர்ந்தது. இச்சபையில் சேர அவர் விரும்பினார்.

06-04-1919ல் சத்தியாக்கிரக இயக்கம் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் தங்கள்எதிர்ப்பை தெரிவிக்க கடையடைப்பு செய்தனர். அரசிற்கு அளவிலாக் கோபம் ஏற்பட்டது. ஜேனரல் டயர் பீரங்கிப்படையுடன் சேர்ந்து சுட்டான். மக்கள் பலர்மடிந்தனர். காயமுற்றதொகை கண்கிலடங்காது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு மக்கள் கொதித்தெழுந்தனர். ஜவகர் மனம் வெகுண்டு பஞ்சாப்சென்று அடக்குமுறைக்கூட்டத்தை எதிர்க்கப் புறப்பட்டார்.

நேருஜி 18 ஆண்டுகளாக பிரதமர் பதவியை வகித்தார். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்த தலைவர் ஜவகர்லால் நேரு. ஏழைகளின் நலன் அவரது மூச்சோடு சேர்ந்த விடயம். மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் பண்பு அவரிடம் காணப்பட்டது. அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்க வேண்டிய பல விடயங்கள் உண்டு. எவரிடத்திலும் பண்புடன் பழகுகின்ற பாங்கு, இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுகின்ற மனிதாபிமானம் ஆகியவை அவருடைய வாழ்க்கையிலிருந்து உணர வேண்டிய முக்கிய பாடங்களாகும்.

## நான் கண்ட அதிபர்

தேவரையாளிச்சமூகம் பலவாழ்விலும் வளர்ச்சி குன்றி நலிவடைந்தது. அந்த மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்தனர். அக்கால கட்டத்தில் மக்கள் பொருளாதாரத்துறையிலும், கல்வித்துறையிலும் ஏனைய சமூகத்தினரால் நசுக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். பல நூற்றாண்டுகளாக இருளில் சூழ்ந்துள்ள ஒரு சமூகத்தின் விடுதலைக்குப் பாடுபாடுவதற்கு வேண்டிய சிந்தனை, ஆற்றல், துணிவு விடுதலை உணர்வு ஆகிய பண்புகள் ஒருவரிடம் காணப்பட்டது.

அவர்தான் திரு க.மூ.சி.சீனித்தம்பி அவர்கள் இவருக்கு முன் தேவரையாளிச் சைவ வித்தியாசாலைத் தலைமையாசிரியராக பணியாற்றியவர் கவிஞர் மு. செல்லையா அவர்களாகும். அப்போது இப்பாடசாலையில் ஸ்தாபர்களுள் ஒருவராக திரு கா.சூரன் விளங்கினார். திரு க.மூ.சி.சீனித்தம்பி அவர்கள் வதிரிக் கிராமத்தில் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பத்தில் திரு.க.மூ.சின்னத்தம்பி சிதம்பரம் தம்பதிகளுக்குப் புதல்வனாக 18.02.1920ல் அவதரித்தார். அவருடைய தந்தை இப்பாடசாலையில் முகாமையாளராக 18 வருடங்கள் கடமையாற்றியமை இவர் பெற்ற பெரும்பேறாகும். அவர் காலியில் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் உரிமையாளராக விளங்கினார்.

அதிபர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியைத் தேவரையாளிச்சைவ வித்தியாசாலையில் கற்றார். உயர்கல்வியை காலி சென். அலோசியஸ் கல்லூரியில் கற்றார். தனது கலைப்பட்டப்படிப்பைச் சென்னை பிரசிடிடன்ஸிக் கல்லூரியில் கற்றார். சைவசமயச் சிறுபான்மைத் தமிழருள் முதன் முதல் பட்டதாரியாக மிளிர்ந்தவர். அத்துடன் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் முதன்முதலாக அதிபர் பதவியை வகித்தவரும் அவரேயாவார்.

அதிபர் மூ.சி.சீனித்தம்பி அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்ற 3 ஆண்டுகளின் பின்னர் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டது. இப்பாடசாலை 07.0051957ல் ஒரு ஆங்கிலக்

கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டது. இதற்கு அவருடைய இடையறா முயற்சியே காரணமெனக்கூறலாம். இதற்கு அப்போதைய கல்வி அமைச்சர் டபிள்யூ. தகநாயக்க, முன்னை நாள் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா ஆகியோர் அதிபர் முயற்சிக்கு ஊக்கம் கொடுத்தனர்.

"சொல்வது வாய்ச்சொல் செய்வது தலைச்சுமை" என்பதற்கேற்ப மாணவன் தனது காரியத்தில் கண்ணாய் இருக்க வேண்டும். அவன் படிப்பில் மட்டுமல்லாது சகல துறைகளிலும் சிறந்தவனாக ஒளிவீசுபவனாகக் காணப்படவேண்டும் என்பதைப் பாடசாலைக் காலைக் கூட்டங்களில் எடுத்துரைப்பார். மாணவனுக்கு ஊக்குவிப்பு அளிப்பதன் மூலம் அவனது கற்றலை முன்னெடுத்துச் செல்ல உதவலாம். அவனுக்குப் பரிசளிப்பதன் மூலம் கற்றலுக்குத் தூண்டப்படுகின்றான். மாணவர்களுடைய ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டும் என்ற அடிப்படையில் முதன்முதலாக 1955ம் ஆண்டு பரிசளிப்பு விழாவை ஆரம்பித்தார். இவ்விழா யாழ்ப்பாணத்திலேயே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரியின் பெரு விழாவாகப் பெற்றோராலும் அபிமானிகளாலும் பழைய மாணவர்களாலும் கணிக்கப்பட்டது.

ஆண்டு தோறும் இக்கல்லூரியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கிராமத்தூடாக ஓடுதல் ஆகியன அதிபரினால் அறிமுகஞ் செய்யப்பட்டது. தேவரையாளி ஏனைய கல்லூரிகளை விடத் தனித்துவம் மிக்கதாகக் காணப்பட்டது. இன்றும் இப்பாடசாலை உதைபந்தாட்டத்தில் வடமராட்சி வலயத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்போது விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாசிரியராக பணிபுரிந்தவர் திரு த.இரத்தினசிங்கம் அவர்களேயாவார். இவருக்கு 2001ம் ஆண்டு இலங்கை உதைபந்தாட்டச்சங்கத்தினரால் சர்வதேச உதைபந்தாட்ட விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி ஆகியவற்றுக்கு பிரதம அதிதிகளாகப் பிரதேசத்திலுள்ள கல்விமான்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை முதன்மைப்படுத்துவர். இந்த பகுதிக்கு

வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவவொருவர் மூலமாகவும் அரசின் நன்கொடைகளையும் பெற்றோரின் அன்பளிப்புக்களையும் பெற்றுக் கட்டிடங்களைக் கட்டுவித்தார். விஞ்ஞான கூடம் ,அதிபர் காரியாலயம் ,திறந்த வெளியரங்கு ,நூலகம்,மைதானம் ஆகியவற்றின் தோற்றத்திற்கு வித்திட்டார். அக்கால கட்டத்தில் முகாமையாளராகக் கடமைபுரிந்த திரு க.மூ.சின்னத்தம்பி தென்னிலங்கைக்கு சென்று தனது மக்களிடம் பணம் சேகரித்து உதவி புரிந்தார். வறிய மாணவர்களுக்காக தீபாவளிப் பண்டிகைக்கு உடுப்புக்களை அன்பளிப்பு செய்த வள்ளல் தான் திரு க.மூ.சின்னத்தம்பி. அரசாங்கம்செய்கின்ற சேவையை தானே ஒருமனிதனாக நின்று சிறு பஙகையாவது செய்து மனிதர்களுள் மாணிக்கமாகத் திகழ்ந்துள்ளார்.

16.05.1979ம் ஆண்டு க.பொ.த (உயர்தர) வர்த்தக வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

21.07.1977ல் திரு த.இராசலிங்கம் நாடாளுமன்ற (உடுப்பிட்டித் தொகுதி) உறுப்பினராகத் தேரந்தெடுக்கப்பட்டார். பழைய மாணவனான இவர் தேவரையாளிச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை சமூகத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

திரு.க.மூ.சி.சீனித்தம்பி ஒரு சாதனை மனிதர். உலகளாவிய ரீதியில் கிடைத்த இந்த விருது எவருக்கும் கிடைக்கும் எளிய பேறல்ல. இவர் தேவரையாளி இந்துக்கல்லூரியை மையமாக முன்வைத்து மக்கள் வாழ்விற்காக ஆற்றிய சேவைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இவரின் சேவையின் பலாபலனாக வைத்தியர் பொறியியலாளர் விரிவுரையாளர் உதவி அரச அதிபர் அதிபர்கள் ஆசிரியர்கள் கிராம அலுவலர்கள் ஏனைய பல உத்தியோகங்களை வகித்துச்சுடர் விட்டுப் பிகாசிப்பவர்கள் தேவரையாளியின் மைந்தர்களேயாவார்.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியினர் அதிபரைச் செனட்சபை உறுப்பினராகத் தீர்மானித்தனர். அந்த பதவியை அவர்விரும்பவில்லை. இதனைப் போல பல் உயர்பதவிகளை உதறித்தள்ளி விட்டுச்

சமுதாய மேம்பாட்டிற்காக உழைத்தார்.

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த அதிபர்களாக மூவரைத்தெரிவு செய்து அவர்களைப் பேராசிரியர் க. சின்னத்தம்பி பேட்டி கண்டு வீரகேசரிப் பத்திரிகையில் வெளியிட்டார். அந்த வரிசையில் திரு. கே.பூரணம்பிள்ளை (ஹாட்லிக்கல்லூரி) திரு.கே.எம்.எஸ்.சீனித்தம்பி (தேவரையாளி இந்துக்கல்லூரி) திரு.ஈ.சபாலிங்கம் (யாழ்-மத்திய கல்லூரி) ஆகியோரைக் குறிப்பிட்டார். இது அதிபரின் முகாமைத்துவம் தலைசிறந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இவர் தமிழ் ஆங்கிலம் இலத்தீன் ஆகிய மொழிகளைத்துறை போகக்கற்றவர். நீதிமன்றத்தில் அதிபரை வழக்கறிஞர் நீங்கள் என்ன சாதி எனக்கேட்டபோது நான் மனித சாதியெனத்துணிச்சலுடன் கூறிய செம்மல்.

31.12.1979ம் ஆண்டு 26ஆண்டு அருஞ்சேவை புரிந்த அதிபர் திரு.க.மூ.சி.சீனித்தம்பி அவர்கள் ஓய்வு பெற்றார். அதன் பின்னர் வதிரி அபிவிருத்தி நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் தான் வாழ்ந்த கிராமிய நலிந்த மக்களுக்குச் சேவை செய்தார்.

அதிபர் 20.10.1995ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர்செய்த சேவைகளின் அரிச்சுவட்டைப் பின்பற்றி இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உழைப்பதே இச்சமூக மக்களின் பிரதான கடமைக்கூறாகும்.

# கலாநிதி அம்பேத்கார்

அவர் அறிவாலும், அஞ்சாமையாலும் நிறைந்தவர். பல திறமைகளை இயற்கையாகவே பெற்றவர். நிறையக் கற்றவர். தீண்டாமை என்னும் கொடிய நோயைப் போக்க வேண்டுமெனப் பாடுபட்டவர் தான் கலாநிதி அம்பேத்கார். ராம்ஜீக்கும், பீமாபாய்க்கும் மகனாகப் பிறந்தவர் கலாநிதி அம்பேத்கார். மகாரட்டினம் என்ற இந்திய மாநிலத்தில் ராம்ஜீ குடும்பத்தினர் வாழந்தனர். மராட்டியர் இயற்கையாகவே விவேகமும், தீரமும் நாட்டில் பற்றும் மிக்கவர்.

அம்பேத்காரின் தந்தை ராம்ஜீ ஒரு ராணுவப்பள்ளி ஆசிரியர். அவர் தன் மனைவியை இழந்தார்.அம்பேத்கார் தாய் இல்லாவிட்டாலும், தனது அத்தையினதும், உடன் பிறப்புக்களின் அரவணைப்பிலும் வாழந்து வந்தார். மனிதனைப் பண்படுத்துவது கல்வி, இன்று அக் கல்வியைப் பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அன்றைய நிலையில் ஏழைகளுக்கும், தாழ்ந்த சாதியினருக்கும் அக் கல்வி அளிக்கப்படவில்லை.

தொடக்கப் பள்ளியில் அண்ணனுடன் சேர்ந்த படித்தார் அம்பேத்கார். அதன் பின் அவர்கள் உயர் நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். அங்கு தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் ஒரு மூலையில் அமர வேண்டும். ஆசிரியர்களும், மாணவர்களும் தவறிக்கூட தாழ்த்தப்பட்ட மக்களைத் தொடமாட்டார்கள். அந்தக் குழந்தைகள் தாங்களாகத் தண்ணீர் எடுத்துக் குடிக்கக் கூடாது. உயர் சாதிப் பிள்ளைகள் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் வாயை ஆவென்று வைத்துக்கொள்ளத் தண்ணீரை ஊற்றுவர். கள்ளமற்ற பிள்ளைகள் உள்ளத்திலும் தீண்டாமை என்னும் நச்சு விதைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு கொடுமைகளுக்கு மத்தியில் அவருக்குக் கல்வியில் கவனம் இல்லை. பேருக்கு மட்டும் பாடசாலை சென்று வந்தார்.

அம்பேத்காருக்குக் கற்பித்த அந்தண ஆசிரியர் மட்டும் இரக்கம் காட்டினார். இடைவேளைகளின் போது அந்த ஆசிரியர் அவரை அழைத்துச் சென்று உணவுகளையும் அளித்து அறிவுரையும் வழங்குவார். அந்த ஆசிரியர் அவர் மீது காட்டிய அன்பும், கனிவும்

மாணவனான அம்பேத்காரைக் கவர்ந்தன. அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பின்நாளில் அம்பேத்கார் என தன்னுடைய பெயரை மாற்றினார்.

அவரது பாடசாலை வாழ்க்கையில் தீண்டாமை என்னும் கொடுமை நடந்த சம்பவங்கள் பல தடவைதான். அவர் தந்தையை சந்தித்த ஹேரிக்கேன் என்ற இடத்திற்கு அண்ணனுடன் சென்றார். தந்தை அவர்களைக் கூட்டிச் செல்ல வரவில்லை. புகையிரத நிலைய அதிபர் இவர்கள் மீது இரக்கம் கொண்டு ஒரு மாட்டுவண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொடுத்தார். வண்டிக்காரன் இவர்களை தாழ்ந்த சாதிக்காரர் என அறிந்து கோபப்பட்டு அண்ணர் கூலியை இரு மடங்காகத் தருவதாகக் கூறி தானே வண்டியை ஓட்டினார். செல்லும் வழியில் அவர்களுக்குத் தண்ணீர்த்தாகம் ஏற்பட்டது. அருகிலுள்ள வீட்டுக்காரர் குழம்பிய சேற்று நீரைக் குடிக்கும் படியும், விலகிச் செல்லும் படியும் கூறினாராம். அவர்கள் மாலையிலிருந்து இரவுவரை நீர் அருந்தாமல் இருந்த பின் தந்தையிடம் நீரை வாங்கிக் குடித்த பின்பே அந்த இளம் உள்ளங்கள் பூரிபடைந்தனர். உயர் சாதிக்காரரின் கொடுமையை எண்ணி அம்பேத்காரின் மனம் கொதித்தது.

தீண்டாமைக் கொடுமைக்குக் காரணம் சாதி, அந்தச் சாதி இந்துமத்தில் நிறைந்து இருப்பதுமாகும். தான் வளர்ந்து பெரியவர் ஆனதும் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென மனதில் உறுதி பூண்டார்.

கல்லூரிகள் திறக்கப்பட்டன. அம்பேத்கார் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அவர்ஆரம்ப முதலே கல்வியில் கவனம் செலுத்தி வந்தார். எனவே சாயாஜி என்பவர் பரோடா சமஸ்தான மன்னர் அவர் மிகவும் நல்லவர் தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் அக்கறை உடையவர். எனவே கிருஸ்ணாயி சாயாஜி மூலம் அம்பேத்காருக்கு உதவி பெற்றுக்கொடுத்தார். எனவே அவர் கல்லூரியில் படிப்பதற்கு கிடைத்த உதவியினால் அவருடைய படிப்பிற்கு எந்தவித இடையூறுமில்லை. அவருடைய வீட்டுக்காரர் வீடு மாறினார்.அது ஒரே ஒரு அறையைக்கொண்டது. அங்குதான் அம்பேத்காரின் படிப்பு இவ்வளவு கஸ்டங்களுக்ககு மத்தியிலும் அவர் பீ.ஏ பரீட்சையில் சித்தியடைந்தார். தந்தையின்

மறைவிற்குப்பின்னர் பரோடா செல்லாமல் பம்பாயில் தங்கினார். மன்னரைச்சந்தித்ததன் பலனாக அவருக்கு அமெரிக்க கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கல்வி அனுமதி கிடைத்தது. அமெரிக்கா சென்று படிதத தலைசிறந்த தலைவர்களுள் அம்பேத்காரும் ஒருவர்.

அவர் தனது குறிக்கோளை மனதில் வைத்து எப்போதும் படித்துக்கொண்டேயிருந்தார். அவர வெறும் பட்டம் மட்டும் பெறுவதை நேக்கமாகக்கொள்ளாது அறிவியல். அரசியல், பொருளாதாரம், ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கவேண்டுமென எண்ணினார். இங்கு படித்துக்கொண்டிருக்கும் போதே "இந்தியாவில் சாதிகள்" என்ற கட்டுரை எழுதினார். " இந்தியாவில் தேசிய பங்கு வீதம் " என்ற ஆராய்ச்சிக்கட்டுரைக்காக கொலம்பியா பல்கலைக்கழகம் பொருளியல் துறையில் அவருக்குக் கலாநிதிப்பட்டத்தை வழங்கியது. இக்கட்டுரையை கொலம்பியா பல்கலைக்கழப்பேராசிரியர், நண்பர்கள் பாராட்டினர்.

அவர் அரசியல், பொருளாதாரம் இரண்டிற்கும் பேராசிரியர் ஆனார். இப்பதவியை அவர்வகித்தபோதும் தீண்டாமையை ஒழிப்பதை பற்றிச்சிந்திக்கத் தவறியதில்லை. அவர் ஒரு பத்திரிகையத் தொடங்கி அதில் சாதிக்கொடுமைகள் பற்றிச் சிந்தித்தார். இந்தியா சுதந்திரம் பெற்றாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரம் பெற்றால் அன்றி அது பூரண சுதந்திரம் பெறாது எனக் கூறினார். அம்பேத்கார் லண்டனில் பொருளதாரத்துறையைப் பற்றி ஒரு ஆராய்ச்சிக்கட்டுரை எழுதி பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தார். அதற்காக அவருக்கு எம்.எஸ்.சி. பட்டம் வழங்கியது. விரைவிலேயே சட்டப்பரீட்சையிலும் வெற்றி பெற்று பாரிஸ்டர் பட்டமும் பெற்று ஒரு வழக்கறிஞர் ஆனார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு சபாவைத்தொடங்கினார். அந்தச்சபாவின் ஆதரவில் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஒரு விடுதியை ஆரம்பித்தார். அம்மாணவர்களுக்குத்தேவையான உணவு, உடை, புத்தகங்கள் இலவசமாகவே வழங்கப்பட்டன. முழுச்செலவு களையும் சபாவே ஏற்றுக்கொண்டது.

பம்பாய் அரசாங்கம் அமபேத்காரின் அறிவாற்றலை அறிந்திருந்தது. அவரைப்பெருமைப்படுத்த நினைத்து மேற்சபை

உறுப்பினராக நியமித்தது. தகுதி வாய்ந்தவரும், தாழ்த்தப்பட்டவருமான கே.எம்.ஜெதாவ் என்பவருக்கு உதவிக்கலக்டர் பதவி வழங்கப்பட்டது. அவரே தாழ்த்தப்பட்ட இனத்தைச்சேர்ந்த முதல் கலக்டர் ஆவார்.

1947ம் ஆண்டு அரசியல் நிர்ணயசபைக்கூட்டத்தில் தீண்டாமையைக் கடைப்பிடிப்பவர் ஆயினும் கடுமையாகத்தான் அரசியல் சட்டமாகின்றது எனப் பேசினார். நேருஜீ அம்பேதகாரரை சட்ட அமைச்சர் ஆக்கினார்.இந்திய அரசியல் யாப்பை வரைந்தவர் அம்பேத்கார் ஆவார்.அம்பேத்கார் புத்த மதத்தில் சேர்ந்தார். மகா நாடுகளுக்கு அமைச்சராக இருந்தாலும் இலட்சியத்தைப் பொறுத்த மட்டில் ஒரு சுதந்திர புருஸராகவே விளங்கினார். அவர் 1956ம் ஆண்டு மறைந்தார். இன்று அவரின் சிலை பம்பாயில் கம்பீரமாக காட்சி தருகின்றது.

# லால் பகதூர் சாஸ்திரி

மனிதாபிமானம், மனிதம் என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஒரு வடிவம் இருக்குமானால் அந்த எளிமையின் வடிவம் லால் பகதூர் சாஸ்திரியாவார். சேற்றிலே மலர்ந்த செந்தாமரை போல 02.12.1904 இல் பிறந்தார் சாஸ்திரி. இவர் $1^{1}/_{2}$ வயதில் தனது தந்தையை இழந்தார். இதனால் குடும்பம் ஏழ்மையில் வாடியது. அவர் இரண்டு பெண்பிள்ளைகளுடன் ஒரே ஒரு அருமை மகனாகப் பிறந்தார். சாஸ்திரியின் தந்தையின் பெயர் ஹர்தா பிரசாத் . அவரது தாயின் பெயர் ராம்துலாரி தேவியார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க இளம் லால் பகதூர் சாஸ்திரி குணம் என்னும் குன்றேறி நின்றார். அதனால் அவர் வையம் போற்றி வாழ்ந்தார். அதற்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தவர்கள் அவரது பெற்றோரும், தாத்தா ஹரிசாலும் இதர குடும்பத்தினரும் ஆவார்.

சாஸ்திரி பச்சிளங் குழந்தையாக இருந்தபோது ஊரில் பெரிய ஒரு திருவிழா நடைபெற்றது. அவரின் குடும்பத்தினர் சனநெரிசலில் அகப்பட்டுத் திக்கு முக்காடினர். பாரத மாதாவின் திருவடிகளுக்கு லால் பகதூரின் சேவை நிரம்பத் தேவையிருந்ததல்லவா? அவர் அதிசயமாகப் பிழைத்தார். பக்கத்தில் நின்ற இடையர் ஒருவரின் கூடையில் பத்திரமாக விழுந்தார். அவரின் பெற்றோர் குழந்தையை இழந்து கவலையடைந்தனர். ஈற்றில் காவல்துறையினரின் முயற்சியின் பயனாகக் குழந்தை இடையரிடமிருந்து பெறப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர். பெற்றோர் கவலை நீங்கி ஆனந்தம் அடைந்தனர்.

சிறுவயதில் எல்லோருமே தவறு செய்கின்றனர். அதே போல் சாஸ்திரியும் சிறுவயதில் தனது நண்பர்களுடன் பழங்கள் பறிக்கச்சென்றார். தோட்டக்காரனைக் கண்டதும் சாஸ்திரியின் நண்பர்கள் ஓட்டமெடுத்தனர். அவர் மட்டும் தோட்டக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டார். அப்போது தோட்டக்காரன் கெட்ட பையன் களோடு சேரக் கூடாது என சாஸ்திரிக்கு அறிவுரை கூறினார். அதற்கேற்ப சாஸ்திரி தீவிரமாகச் சிந்தித்து நல்ல செயல்களையே செய்ய வேண்டுமென உறுதி பூண்டார். சாஸ்திரி 4ம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது அவரது ஆங்கில புலமையையும்,

உச்சரிப்பையும் கல்வி அதிகாரி புகழ்ந்துரைத்தார்.

அவர் விளையாட்டில் நல்ல விருப்பம் உடையவர். விளையாட்டுப் பொருட்களையோ, பந்தையோ அவரால் எப்படி வாங்க முடியும்? சாஸ்திரி கவலையடைந்தாரா? அவர் சோர்வுற்றாரா? செடி, கொடி மரங்கள் ஆகியவற்றிலிருந்து உதிரும் பூக்களை ஒன்று சேர்த்துப் புக்கதுவியல்களைத் துண்டு ஒன்றில் கட்டுவார், இத்தகைய பூப்பந்துகளை நணபர்களோடு சேர்ந்து விளையாடுவார்.

சாஸ்திரி அரிச்சந்திரா உயர்நிலைப்பள்ளியில கல்வி கற்றபோது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பேச்சைக் கேட்க வேண்டுமென ஆசைப்பட்டார். காசி பல்கலைக் கழக அடிக்கல் நாட்டு விழா வைபவத்தில சாஸ்திரி காந்திஜியின் உரையைக் கேட்டார். அவரது உரையைக் கேட்டு 13 வயதான சாஸ்திரி காந்தித் தாத்தாவைப்போல் தானும் நாட்டிற்காக உழைக்க வேண்டுமென முடிவெடுத்தார்.

அகலபாத் நகரில் சாஸ்திரியின் சேவையை அறியாதவர்களும், பாராட்டாதவர்களும் இல்லை. விரைவில் அவர் நகரசபை உறுப்பினர் ஆனார். பின்பு அகலபாத் நகர காங்கிரஸ் கட்சிச் செயலாளரானார். கட்சியின் தலைவராகவும், செயலாளராகவும் பணிபுரிந்தார். உத்தரப் பிரதேச சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றதன் பயனாக அமைச்சர் ஆனார்.

அவர் அமைச்சராக இருந்தபோது ஒரு துடுப்பெடுத்தாட்டப் போட்டியைப் பார்க்கச் சென்றார். அப்போட்டி மாணவர்கள் அணிக்கும், காவல்துறை அணிக்குமிடையே நடைபெற்றது. போட்டி நடந்து கொண்டிருக்கும்போது ஒரு சிறுகலவரம் ஏற்பட்டது. அக்கலவரத்தையடக்கி இரு பகுதியினரையும் சமாதானப்படுத்தச் சாஸ்திரி முயன்றார். அப்போது மாணவர்கள் சிவப்புத் தொப்பி அணிந்தவர்கள் இப்போட்டிக்கு வரக்கூடாதெனக் கூறினர். சாஸ்திரியும் அதற்கு ஒத்துக்கொண்டார்.

மறுநாட் காலை மீண்டும் போட்டி ஆரம்பமாகியது. மாணவர் காவல்துறையினர் போட்டி நடைபெறுமிடத்தில் பிரசன்னமாய் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதற்குச் சாஸ்திரி கோபப்படவும்

இல்லை, பதட்டப்படவும் இல்லை. நீங்கள் சிவப்புத் தொப்பி அணிந்தவர்களையே மைதானத்துக்கு வரவேண்டாம் என்றீர்கள். இன்று காக்கித்தொப்பியை அணிந்தே காவல்துறையினர் வருகை தந்துள்ளனர் என்றார். அவருடைய நகைச் சுவை ததும்பிய பேச்சைக் கேட்ட மாணவர் அமைதியடைந்தனர். அத்தோடு சமாதானமும் அடைந்தனர்.

அரியலூர் என்ற ஓர் ஊர் உண்டு . அது சென்னைக்கும் திருச்சிக்கும் இடையே அமைந்திருந்தது. அவ்வூருக்கு மேல் புறத்தில் ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருந்தது. அதைக்கடந்து செல்ல ஒரு பாலம் வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அது எவருக்குமே தெரியாது.

தூத்துக் குடியை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகைவண்டி அப்பாலத்தருகில் சென்றது. புகைவண்டிச் சாரதிக்கு பாலத்தை வெள்ளம் அரித்திருப்பது தெரியாது. வண்டியை அப்பாலத்தின் மேல் செலுத்தினார் . அந்தோ பரிதாபம் புகைவண்டி கவிழ்ந்தது. காட்டாற்றில் வீழ்ந்தது. சுமார் 150 பேர் மரணமடைந்தனர். பலர் காயமடைந்தனர்.

சாஸ்திரி இந்த விபத்தை அறிந்தார். மனம் வருந்தினார். புகைவண்டி அமைச்சராகப் பணிபுரிந்த சாஸ்திரி தன் கடமையைச் சரியாகச் செய்யவில்லையே என எண்ணினார். தன் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார். அதைப் பார்த்தவர் பாராட்டினர். கேட்டவர் புகழ்ந்தனர். நேர்மையிலும் நெறியிலும் உயர்ந்தவர் நமது சாஸ்திரி என நேருஜி புகழ்ந்து பேசினார். இன்று அரசியலில் என்ன சீர்கேடு நடந்தாலும் தமது அமைச்சர் பதவியைத் தக்கவைத்துக் கொள்பவர்களுக்குச் சிறந்த படிப்பினையல்லவா?

உருவத்தில் சிறிய உளி பெரிய மலையையும் உடைக்கிறது உருவத்தில் சிறிய மனிதரும் பெரிய செயல்களைச் செய்கின்றனர். சாஸ்திரி உருவத்தில் சிறியவர். செயலிலோ மிகப்பெரியவர்.

உத்தரப் பிரதேச மந்திரி சபையில் சாஸ்திரி காவல்துறை அமைச்சராகப் பதவி வகித்தார். அப்போது ஒரு முறை ஆக்ரா நகருக்குச் சென்றார். புகைவண்டியில் சென்ற சாஸ்திரியை மக்கள் வரவேற்கக் காத்திருந்தனர்.

அந்த வழியை அடைந்து நின்றார். நந்தி போல் காவல்துறை உறுப்பினர். அவர் லால் பகதூர் செல்வதைத் தடுத்தார். அமைச்சர் சென்ற பின்தான் ஏனையோர் செல்ல அனுமதிக்கப்படுவர் எனக் கூறினார். அந்தக் காவல்துறை உறுப்பினர் அவர் தான் அமைச்சர் என்பதை ஒருவர் கூற நம்பவில்லை.

தூரப்போ ஐயா! இந்தக் குட்டை மனிதரையா எங்கள் அமைச்சர் என்கிறீர் என்று எரிந்து விழுந்தார்.

இவற்றையெல்லாம் கண்ட சாஸ்திரி சிறிதும் பதற்றமொ, கோபமோ அடையவில்லை. புன்முறுவல் பூத்தபடியே ஒதுங்கி நடந்தார். அத்துடன் நகரப் பிரமுகர், உயர் அதிகாரிகள் ஆகியோர் சாஸ்திரிக்கு மரியாதை செலுத்தினர். இதனைக் கண்ட காவல்துறை உறுப்பினர் தனது வேலைக்கு ஆபத்து வருமோ எனச் சிந்தித்தார். இன்னா செய்தார்க்கும் இனியனவே செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர் சாஸ்திரி. தம்முடன் வந்த காவல்துறை அதிகாரியிடம் தவறாக நடந்த காவல்துறை உறப்பினர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது எனப் பெருமிதத்தோடு கூறினார்.

அவர் லிலிதாதேவியைத் திருமணம் செய்தார். திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பது முதியோர் கூற்று. ஆனால் இன்று திருமணம் பல லட்சங்களால் நிச்சயிக்கப்படுகின்றது. சாஸ்திரியின் மனைவியும் காங்கிரஸ் கட்சியின் கொள்கைப்பற்றுள்ளவர். திருமணத்தினபோது சாஸஸ்திரியின் மனைவி கதர் உடையணிந்தார்.

நேருஜியின் மறைவுக்குப்பின் சாஸ்திரி பிரதமமந்திரியானார். அவர் பிரதமராய் பதவிவகித்தபோது இந்திய -பாகிஸ்தான் போரில் வெற்றி பெற்றார். மக்கள் அவரின் துணிவைப் பாராட்டினார்கள். அவரது புகழ்ச்சி இமயம் போல் உயர்ந்தது.

சாஸ்திரி மறைந்தார். உலகம் கண்ணீர் வடித்தது. பாரத மக்கள் அதிர்ச்சியிலிருந்து மீள ஒரிரு தினங்கள் சென்றன. அவரின் பொன்னுடல் மறைந்தாலும் அவரின் புகழுடல் தம் நெஞ்சங்கள் அனைத்திலும் வாழும்.

## சிவகாமியின் செல்வன்

குறிக்கோளைத் தெளிவாக வைத்துக்கொண்டு அதற்காக வாழ்நாளை அர்ப்பணித்துச் செயலாற்றுகின்ற மனிதர்கள் மிகச் சிலரே அவர்களிலும பெரும்பாலானவர்கள் தன்னலம் கருதிய வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் பிறர் நலம் கருதிய பொது வாழ்க்கையில் ஈடுபடமாட்டார்கள். அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துகின்ற இலட்சியத்தை முன்வைத்துச் செயல்படுகின்றவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்ளேயாகும்.

எளிய வாழ்வு தியாக சீலர் ஏழை மக்களுக்கு மனதில் உறுதிமொழி வழங்கிச் செயல் வடிவங்கொடுத்த உத்தமர் இவைகளுக்கு இலக்கணம் வகுத்தவர் தான் காமராஜர். சாதாரணகுடும்பத்தில் பிறந்த வரலாறு சுவையானது மட்டுமல்ல நமக்கெல்லாம் வழி காட்டியும் கூட அந்நிய ஆதிக்கத்தில் இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த காலம். இப்படிப்பட்ட ஒருகால கட்டத்தில் மத்தியவர்க்க குடும்பத்தில் பிறந்தவர்தான் காமராஜர். ஏழைமக்களின் வாழ்க்கைத்தரத்ந்தை உயர்த்துவதையே தன் கடமையாகக் கொண்டவர். அவர் தன் இறுதி மூச்சு உள்ளவரை மக்களுக்காகப் பணியாற்றினார். எனவே நாம் காமராஜர் வாழ்க்கையிலிருந்து பல பாடங்களைக் கற்க முடியும் என்பதில் ஐயமில்லை.

அவர் சிறு பையனாக இருந்த போது நாட்டில் சுதந்திர வேட்கை தீவிரமாகப் பரவிக் கொண்டிருந்தது. அதன் பாதிப்புக்கு உள்ளானர். அதனால் பாடசாலையில் தொடர்ந்து கற்கின்ற வாய்ப்பை இழந்தார். நாடு விடுதலை பெற வேண்டுமென்ற ஆர்வம் சிறு வயதிலேயே அவரை ஆட்கொண்டுவிட்டது. சுதந்திரப்போரில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். தேசமே அவருடைய பள்ளியாயிற்று. சிறைக்கூடமே அவர் வாழ்கின்ற இடமாயிற்று.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு எத்தனையோ பேர் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் காமராஜர் அந்தப்

பதவியில் இருந்த காலத்தில் தான் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி செல்வாக்கு மிகுந்த பலம் பெற்ற ஸ்தாபனமாக விளங்கியது. நேரு, ராஜேந்திரப்பிரசாத் மௌலானா அப்துல்கலாம் போன்ற பெருமக்கள் அகில இந்தியக் காங்கிரசுக்கு தலைவர்களாக இருந்து அரிய சாதனை படைத்திருக்கிறார்கள் ஆனால் அவர்களைப் போல் காமராஜர் பெரிய கல்விமான் என்று கூறமுடியாது. இந்திய தேசம் மிக நெருக்கடியான நிகழ்ச்சிகளை எதிர் நோக்கும் போது காமராஜர் அந்த நெருக்கடிகளை வெற்றிகரமாக சமாளித்தார் என்பது அவருடைய தனிச்சிறப்பாகும். நேருவின் காலத்திற்குப் பின் யார் பிரதமராவது என்ற விடயத்தில் கடுமையான போட்டி ஏற்பட்டது. இந்தியாவின் அரசியல் ஸ்திரம் பாதிக்கப்பட்டு விடும் எனப் பலரும் சந்தேகப்பட்டார்கள். ஆனால் அப்படி எதுவும் ஏற்படாமல் தடுத்து லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமர் ஆக்குவதற்கான ஏற்பாடுகளை காமராஜர் வெற்றிகரமாகச் செய்து முடித்தார். லால் பகதூர் சாஸ்திரி பிரதமர் பதவி வகித்து 18 மாதங்களில் மரணம் அடைந்தார். மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடி தோன்றியது. அதனையும் அவர் சமாளித்து இந்திராகாந்தி பிரதமராக வழி வகுத்தார்.

திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது தன் பணிக்கு இடையூறு என எண்ணினார். அவருக்கு லட்சாதிபதி வீட்டில் பெண் கொடுக்க முன்வந்த போதும் அதனைத் தூக்கி எறிந்து விட்டுத் தேசப் பணியில் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

அவரோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரும் குடும்ப வா்ழ்க்கையில் ஈடுபாட்டுக் கொண்டே அதிற் செயற்பட்டார்கள். ஆனால் காமராஜர் இறுதிவரை திருமண பந்தத்தில் ஈடுபடவில்லை. அதனால் நாம் அவரது தியாகத்தைச் சாதாரணமாக கருதி விடமுடியாது.சுதந்திரப் போரில் அவர் அனுபவித்த சிறைவாசம் சந்தித்த அடக்கு முறைகள் துன்பங்கள் எதுவும் இலட்சியப் பயணத்திலிருந்து அவரைத் திசை திருப்பி விடவில்லை. இலட்சக் கணக்கான மக்களை காந்திஜியின் வாழ்க்கையும் உபதேசங்களும் கவர்ந்ததைப் போலவே காமராஜரும் கவரப்பட்டார்.

பதவிகள் மக்களுக்குச் சேவை செய்வதற்கான வாய்ப்பு என நிருபித்தவர் காமராஜர். அவர் 12ஆண்டுகளாக தமிழகத்தின்

முதலமைச்சராகப் பதவி வகித்தவர். அவர் ஒருபோதும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காகவோ தான் வசதியாக வாழ்வதற்காகவோ பதவியைக் கருதியதில்லை. அவர் ஏழை மக்களுக்குப் பணிபுரியும் சந்தர்ப்பமாகவே கருதினார். அவர் நாள் தோறும் நூற்றுக் கணக்கான மக்களைச் சந்தித்தார். சாதாரண மக்களைச் சந்திப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் வக்கீல்களைச் சந்தித்துவிட்டு வரும் மக்களுடன் கதைக்கமுடியாது. அவர்களைப் பார்த்து ஆகட்டும் பார்க்கலாம் எனக் காமராஜர் கூறுவாராம். மக்களைச் சந்திப்பதில் தனக்கு ஒருபோதும் சலிப்பு ஏற்படுவதில்லையாம். பதவியைப் பதவிக்காகவே விரும்புகின்ற மனப்பான்மை அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. ஏழை மக்களுக்கு தொண்டாற்றுகின்ற புனிதப் பொறுப்பாகவே அவர் பதவியை கருதினார். பெரிய பதவிகளிலும் பொறுப்புக்களிலும் உள்ளவர்களுக்குத் தான் இது பொருந்தும் என்கிற அவசியமில்லை. நாம் செய்கிற வேலை சிறிதாயினும் பெரிதாயினும் சேவை மனப் பான்மையுடன் அதைச் செய்கின்ற பழக்கம் நமக்கு இருக்கவேண்டும். உற்பத்தியைப் பெருக்க தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவினார். உற்பத்தி பெருகாமல் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர முடியாது தொழிற்சாலைகள் நிறையத் தோன்றியதால் வேலை வாய்ப்பும் அதிகமாயிற்று.

தொழிற்சாலைகள் நிறையத் தோன்ற வேண்டுமானால் அவை செயல்பட பெரிய அளவில் மின்சக்தி தேவைப்படும். ஆகவே அவருடைய ஆட்சிக் காலத்தில் மின்சார உற்பத்தியில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கல்வி வளராமல் மக்கள் முன்னேற்றம் நடைபெறாது. ஆகவே கிராமந்தோறும் பாடசாலைகள் என்கிற திட்டத்தை உருவாக்கினார் காமராஜர். பல்லாயிரக் கணக்கான பாடசாலைகள் தமிழகமெங்கும் தோன்ற ஏற்பாடு செய்தார். அதனால் மக்களால் கல்விக்கண் கொடுத்த காமராஜர் என அவர் சிறப்பித்து போற்றப்படுகிறார்.

தன்னுடைய நாட்டில் உள்ள பிள்ளைகள் படிக்க முடியாமல் போனதற்கு அவர்களுடைய ஏழ்மைதான் காரணம். இதை உணர்ந்த காமராஜர் கல்வியை இலவசமாக்கினார். அதோடு குழந்தைகள் பசியின் கொடுமையால் பாடசாலைக்கு வராமல் இருப்பதைத் தடுக்க

பாடசாலையிலேயே உணவு வழங்கும் மதிய உணவுத் திட்டத்தை உருவாக்கினார்.

வர்த்தகம் வளர்ச்சியடைய வேண்டுமானால் நாட்டின் பல்வேறு பகுதிகள் சரியான சாலைகளால் இணைக்கப்படுவது அவசியம். அதனால் அவர் சாலை விஸ்தரிப்பு பணியிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்.

சமூகத் தொண்டுக்காக அமைந்தது தான் பொதுவாழ்க்கை ஆகவே வேறு எந்தத் துறையையும் விட பொது வாழ்க்கையில் பொறுப்புணர்ச்சி அதிகம் இருக்க வேண்டும் இதைத் தான் காமராஜர் வாழ்க்கையும் போதிக்கின்றது. அவர் தனது சொந்த வாழ்க்கையைத் தியாக வாழ்க்கையாக்கினார்.

அவர் ஏழைகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் அவர்களுடைய துயரைப் போக்க உதவாது என நம்பினார் பேச்சு செயலுக்கு ஆதாரமாக இருக்க வேண்டுமே தவிர பேச்சே செயலாகி விடமுடியாது அதனால் காமராஜர் பேச்சைக் குறைத்து செயல்படுவதை ஒருவாழ்க்கை முறையாக்கினார்.

முதலமைச்சராக அவர் பதவி வகித்தபோதும் தன் கரத்திற்கு கைக்கடிகாரம் அணியவில்லை. பதவிகள் மனிதர்களை அலங்கரிக்க ஏற்பட்டவை அல்ல மனிதர்களின் செயல்கள் பதவிகளை அலங்கரிப்படவேண்டும் என்பதை நிரூபித்து வாழ்ந்து காட்டியவர் காமராஜர்.

## பேருந்து நிலையமொன்றின் சுயசரிதை

அத்தியாவசிய சேவைகளுள் போக்குவரத்துச் சேவையும் ஒன்றாகும். மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கை இச்சேவை வழங்குகின்றது. போக்கு வரத்துச் சேவையை விருத்தி செய்வதற்கு அரசு செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இச்சேவையின் மகத்துவத்தை உணர்ந்தே முக்கியமான இடங்களில் பேருந்து நிலையங்களை அமைக்கின்றனர். அந்த வகையில் பருத்தித்துறை யாழ்ப்பாணப் பேருந்து சேவை வடமராட்சி மக்களுக்கு முக்கியமானதாகும்.

நெல்லியடி வடமராட்சியின் கேந்திர நிலையம் என மக்களால் கணிக்கப்படுகின்றது. வடமராட்சியின் நான்கு திசைகளாலும் மக்கள் கூடுதலாகச் சந்திக்கும் இடமும் இதுவேயாகும். இதனை மையமாக வைத்தே பஸ்தரிப்பு நிலையமொன்றை அமைத்தனர். நெல்லியடியில் அமைந்த இந்நிலையம் இன்று கம்பீரமாகக் காட்சி தந்து கொண்டிருக்கின்றது.

நெல்லியடிச் சந்தை வியாபாரிகள் அதிகாலையிலேயே நிலையத்திற்கு வந்துவிடுவார்கள். அவர்கள் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய சந்தைகளுக்குப் பேருந்து மூலம் செல்பவர்கள். அவர்கள் நேற்று மரக்கறிகள், தேங்காய்கள் போன்ற பொருட்கள் நல்ல சூடு எனப் பேசிக்கொள்வார்கள். தங்கள் வியாபாரத்தின் நிலைமையை என் சுவர்க்கட்டிலிருந்து பேசிக்கொள்வார்கள். அதன்பின் பேருந்து வந்ததும் அதில் ஏறித் தம் இடங்களுக்குச் செல்வார்கள்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்து வரும். வடபகுதியில் அரசிற்குக் கூடுதலான வருமானத்தைக் கொடுக்கும் சேவைகளுள் இதுவும் ஒன்றாகும். இச்சேவையில் பாடசாலைமாணவர், கச்சேரி ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், சாதாரண

மக்கள் ஆகியோர் பிரயாணஞ்செய்வர். இவர்கள் தங்கள் தொழில் ஸ்தாபனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொள்வார்கள். அத்துடன் பேருந்து வரும் வரை மக்கள் தமது குடும்பப்பிரச்சினைகளிலிருந்து உள்ளூர், வெளிநாட்டு அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொள்வார்கள்.

இச்சேவைக்குப் போதிய பேருந்து வண்டிகள் இல்லாமை பெருங்குறைபாடாகும். இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசு புதிய பேருந்து வண்டிகளைச் சேவைக்கு அமர்த்த வேண்டும். இல்லாவிடில் புதிய உதிரிப்பாகங்களுடன் பழைய பேருந்து வண்டிகளை சேவைக்கு அமர்த்தலாம். ஏனெனில் காலையிலும் மாலையிலும் மக்கள் மிகவும் நெருக்கடியாகப் பயணம் செய்வர். அப்பயணிகள் படும் இன்னல்களைக் கண்டு நான் அவர்கள்மீது இரக்கப்படுவதுண்டு.

காலை, மாலை வேளைகளில் எனது இடம் கலகலப்பாகத் தான் இருக்கும். இவ்வாறு செல்வாக்காக வாழ்நத எனக்கு ஒரு பேரிடி விழுந்தது. அன்றைய தினம் விடாமழை . இந்த மழையினைத் தொடர்ந்து புயற்காற்று வீசியது. இக்காற்றினால் பயனுள்ள பனை, வேம்பு போன்ற ஏனைய மரங்களும் வேரோடு சாய்ந்து வீழ்ந்தன. எனது பஸ்நிலையத்தின் கூரை தகரத்தினால் வேயப்பட்டிருந்தது. இக்காற்றினால் தகரம் காற்றுக்கு வீசப்பட்டது. இதனால் எனது இடம் ஒரே வெள்ளமாகக் காட்சியளித்தது.

இதன் பின் காலையிலும் மாலையிலும் பயணிகள் என்பக்கம் தலைகாட்டுவதே இல்லை. அவர்கள் பாதையோரங்களில் பேருந்து வரும்வரை காத்து நிற்பர். எனது பயன்கள் பற்றியும், தற்போதைய தமது அனாதரவான நிலை பற்றியும் பேசிக்கொள்வார்கள்.

தற்போது கூரை இல்லாத நிலையில் காகங்கள் சுவர்களில் தமது எச்சங்களை இட்டுச் செல்கின்றன. அத்துடன் ஆடுகள், நாய்கள் போன்றவை தமது எச்சங்களை இட்டுச் செல்கின்றன. சகல மக்களுக்கும் பயன்பட்ட நான் இன்று எவருக்கும் உதவாமல் அலங்கோலமாய்க் காட்சியளிக்கின்றேன்.

**இன்று எமது நாட்டில் விளையாட்டுத்துறையில் பெருமளவு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு விளையாட்டுப்போட்டிகளிலும் எமது நாட்டு வீரர்களும், வீராகங்கனைகளும் சாதனை புரிந்து வருகின்றனர். எமது நாட்டிற்குப் பேரும் புகழும் ஈட்டித்தந்துள்ளனர். இத்தகைய விளையாட்டுக்களில் போதிய பயிற்சியும் ஆர்வமும் பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி நீர் மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.**

**(2002 டிசம்பர் தமிழ் II)**

மன்றத்தின் காப்பாளர் அவர்களே! ஏனைய ஆசிரியர்களே! மாணவர்களே எல்லோருக்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

விளையாட்டு கல்வித்துறையில் முக்கிய பங்கை வகிக்கின்றது. உடல் வளர்ச்சிக்கும், உளவளர்ச்சிக்கும் விளையாட்டுத் துணைபுரிகின்றது. மனிதன் எப்போது தன்னைப்பற்றியும் தான் வாழ்கின்ற சமூதாயம் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தானோ அன்றிலிருந்தே விளையாட்டுக்கள் ஆரம்பித்துவிட்டன என்பதை பண்டைய வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஒரு சிறந்த விளையாட்டு வீரனைத் திட்டமிட்ட நேரசூசிகை மூலம் பொருத்தப்பாடுடைய பயிற்சியை வழங்கி அவனது திறமையை வெளிக்கொணர முடியும்.

பயிற்சி முழுமையளிக்கின்றது என்பதற்கிணங்க மாணவர்கள் பாடசாலைகளில் கூடுதலான பயிற்சியை விளையாட்டுத்துறைகளில் பெற்றுக்கொள்வது முக்கியம்சமாகும். இன்று பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன் 15 நிமிடங்கள் நலனோம்புப் பயிற்சி நடைபெற்று வருகின்றன. பாடசாலைகளில் தரம் 9இல் இருந்து உடற்கல்வி போதிக்கப்படுகிறது. பாடசாலைகளில் அரசு இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுப்பதில் முனைப்பாக இருக்கவேண்டும்.

உடற்கல்வி ஆசிரியர் அத்துறையில் நன்கு பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். ஏனெனில் உடற்கல்வி விதிமுறைகளுக்கு ஏற்ப ஒழுங்கு முறையில் கற்பிக்கப்படவேண்டும். இதில் செய்முறையும் கூடுதலாகக் காணப்படுதல் அவசியமாகும். இன்று எமது நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர் உடற்கல்வியைப் போதிப்பதில்லை. அவரிற்குப் பதிலாக இத்துறைசாராத ஆசிரியர்களே விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றுகின்றனர். இந்நிலையை மாற்றியமைப்பதில் அரசு முக்கிய கவனஞ் செலுத்த வேண்டும். எமது அரசு ஆசிரிய நியமனங்களை வழங்கும்போது கூடுதலான உடற்கல்வி ஆசிரிய நியமனங்களைப் பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும். இன்று பல்கலைக் கழகங்களில் உடற்கல்வி டிப்பிளோமா என்ற துறை கற்பிக்கப்படுகின்றது. இத்துறையைக் கற்ற மாணவருக்கு அரசு பாடசாலைகளில் உடற் கல்வி ஆசிரிய நியமனங்களை வழங்க வேண்டும். அது மட்டுமில்லாமல் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களத்தால் பல கல்விக் கருத்தரங்குகள் ஒழுங்கமைக்கப்படவேண்டும். அத்துடன் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் ஆசிரியர் ஊடாக, பயிற்சிகள் மாணவரைச் சென்றடையும்.

உடற்கல்வி ஆசிரியர் செய்முறைப் பாடங்களில் கூடுதலான கவனஞ் செலுத்த வேண்டும். மெய்வன்மைப் போட்டிகளுக்காக மாணவர்களுக்கு மைதான, சுவட்டு நிகழ்ச்சிகளில் கூடுதலான பயிற்சியளித்தல் முக்கியமானதாகும். இதில் தெரிவுப் போட்டிகளை நடாத்திச் சிறந்த போட்டியாளர்களுக்கு விசேட பயிற்சியளித்தல் வேண்டும்.

நகரப் புறப்பாடசாலைகளுக்கு வழங்கும் நவீன விளையாட்டு உபகரணங்கள் கிராமப் புறப் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும். உதாரணமாக மூன்று அயற்பாடசாலைகள் வீதம் மூன்று வித்தியாசமான உபகரணங்களை வழங்குவதன் மூலம் அதன் பூரண பயன்பாட்டை மாணவர் பெறுவர். இதன்மூலம் கிராமப் புறப்பாடசாலைகள் விளையாட்டுத்துறையில் முன்னேற வாய்ப்புண்டு.

வருடந்தோறும் உடற்கல்விப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், முதன்மை ஆசிரியர் ஆகியோருக்கு அனுபவமுள்ள பயிற்சியாளர்களினால் பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்படவேண்டும். இவ்வாறான பயிற்சிகள் மூலம் மாணவர்கள் தமது திறன்களை விருத்தி செய்ய முடியும்.

அனுபவமுள்ள பயிற்சியாளர்கள், பயிற்சிக்குரிய உபகரணங்கள், பொருத்தமான மைதானங்கள், ஒழுங்கு முறையான பயிற்சி வட்டங்கள் பல மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் இன்று இல்லாது காணப்படுகின்றன. இவற்றை அரசு கவனித்தால் பாடசாலை வீர, வீராங்கனைகளது உயர் மட்ட அடைவினைப் பெறக் கூடிய சிறந்த சூழ்நிலை உருவாகும்.

விளையாட்டுத்துறைமூலம் மனவெழுச்சி நல்லொழுக்க, நல்லாரோக்கிய விருத்தியை மாணவர் பெற முடியும். அத்துடன் ஆளுமையுள்ள நற்பிரஜைகளை உருவாக்க முடியும்.

எனவே விளையாட்டுத்துறை சார்ந்த உயர் அதிகாரிகளும், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மத்திய அரசும் தேவையான திட்டங்களை வகுத்தால், பாடசாலைகளில் விளையாட்டுத்துறை வளர்ச்சியை முன்னேற்ற முடியும்.

இத்துறை சார்ந்த சகல வசதிகளையும் பாடசாலை மாணவர் பெற்றால் தேசிய அந்தஸ்துப் பெறக் கூடிய வீரர்களாகத் திகழ்வர் எனக் கூறி எனது பேச்சை நிறைவு செய்கின்றேன்.

**தனது படிப்பை முடித்துவிட்ட சங்கர் வேலை தேடித் திரிகிறான். ஆனால் அவனது முயற்சி பலனளிக்கவில்லை. விவசாயியான அவனது தந்தை தம்மோடு வயலில் வேலை செய்யும்படி அவனைத் தூண்டுகிறார். சங்கரோ வெளிநாடு சென்று பிழைக்க வேண்டுமென்ற தன் எண்ணத்தை வெளியிடுகின்றான். வேறு வழியின்றி சங்கரின் தந்தை கடன் பட்டு வெளிநாடு செல்வதற்காக அவனைக் கொழும்பிற்கு அனுப்பி வைக்கின்றார். இதன் பின் நடந்தவற்றைச் சுவைபட விளக்கும் ஒரு கற்பனைச் சிறுகதை.**

**(2002 மார்கழி தமிழ் II)**

சங்கர் 1995ம் ஆண்டு வெளிநாட்டிற்குச் செல்வதற்காகக் கொழும்பிற்கு சென்றான். அங்கு புறக்கோட்டையில் உள்ள ஒரு தனியார் விடுதியில் சங்கர் தங்கினான். அதன் பின் அவன் கொட்டாஞ் சேனையிலுள்ள தனது முகவர் சுரேஸைச் சந்திப்பதற்காகச் சென்றான். சுரேசும், சங்கரும் யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவர்கள். அவர்கள் நண்பர்களாக கூடித்திரிந்தமையால் சங்கரைச் சுரேஸிற்கு நன்றாகத் தெரியும். சங்கர் தனது வெளிநாட்டுப் பயணம் பற்றிப் பேசியபோது உனது சகல வீட்டு நிலைமைகளும் எனக்கு நன்றாகத் தெரியும். உன்னை விரைவாக சுவிற்சர்லாந்துக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்கிறேன் என்றான் சுரேஸ்.

பின் சங்கர் கொழும்பிலுள்ள சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு தன் உணவையும் உண்டு விட்டு விடுதியிலிருந்து யோசித்தான். அங்கு தன்னைப் போல் வெளிநாடு செல்வதற்காகத் தங்கியுள்ள யாழ்ப்பாணப் பொடியன்களைச் சந்தித்தான். அவர்கள் தங்கள் கண்ணீரக் கதைகளைச் சங்கருக்குக் கூறினர். அதில் வியாபாரி மூலையைச் சேர்ந்த பொடியன் 2 வருடங்களாக இவ்விடுதியில் தங்கி 35 ஆயிரம் செலவழிந்து விட்டதாகக் கூறினான். இவற்றைக் கேட்ட சங்கர் வசதிகள் குறைவான இந்த அறைகளுக்கு 300/= நாள் ஒன்றிற்கு வாடகை கொடுக்கிறோம். தனக்கும் எவ்வளவு காலஞ் செல்லும் எனச் சங்கர் சிந்தித்தான். எனது பெற்றோருக்கும், ஏனையோருக்கும் வெளிநாட்டுக்

கடனோடு இதுவும் ஒரு கடன்தானே என யோசித்தான். என்றாலும் தன்னுடைய நண்பன் முகவராக இருப்பதனால் தன்னை விரைவில் அனுப்புவான் என நினைத்தான். அவன் கொழும்பில் சுரேஸை 20 தடவைகளுக்கு மேல் சந்தித்து ஒரு வருடம் கழிந்து விட்டது.

1996ம் ஆண்டு நடுப்பகுதியில் உனக்கு விசா கிடைத்து விட்டது எனக் கூறிக் கொண்டு சுரேஸ் சங்கரின் அறைக்கு வந்தான். சங்கர் அன்று அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவன் வீட்டுக்காரருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தான். அவர்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

அவன் சுவிட்சர்லாந்திற்குச் செல்வதற்காகச் சுரேசுடன் கட்டு நாயக்கா விமான நிலையத்திற்குச் சென்றான். அந்த விமானம் ஹொங்கொங்கில் இறக்கியது. சங்கருக்கு திக்குத் திசை தெரியவில்லை. இச்செய்தியை கனடா நாட்டில் வசிக்கும் உறவினர் அறிந்து பணத்தை அனுப்பி, காவல் துறையினரிடம் அகப்பட்டவனைக் காப்பாற்றினர். இங்கு முகவர் சுரேஸிற்கும் தொலைபேசி மூலம் அறிவித்தனர். அவனுடைய உதவியோடு 2 மாதங்களின் பின் ஏனையவர்களைப் போல கஷ்டங்களை அனுபவித்து சுவிற்சர்லாந்திற்கு ஒருவாறாக சென்றான்.

சுவிற்சர்லாந்திற்குச் சென்றவுடன் சங்கருக்கு அங்குள்ள சுவாத்திய நிலை ஆரம்பத்தில் ஒத்துவரவில்லை. அவன் அந்நிலமைகளை ஒருவாறு சமாளித்துக் கொண்டு ஒரு நண்பனின் அறையிலேயே தங்கினான். அவன் அச்சுவேலியைச் சேர்ந்த ஏனைய நண்பர்களுக்கும் அறிவித்தான். இந்நண்பர்கள் சங்கருக்குச் செய்ய வேண்டிய சகல உதவிகளையும் வழங்கினர். இதன் பயனாக ஒரு சில மாதங்களின் பின் அகதி அந்தஸ்து சங்கருக்குக் கிடைத்தது. அகதிகள் முகாமில் அவன் அனுபவித்த கஷ்டங்களோ எடுத்துச் சொல்ல முடியாதவை . பட்டினியோடு எத்தனை நாட்கள் வாழ்ந்தேன். என்றாலும் இவற்றைச் சமாளித்துக் கொண்டு வீட்டிற்கும் இடைக்கிடையே 15 ஆயிரம் ரூபா பணம் அனுப்புவான். ஆறுமாத

அகதி வாழ்வின் பின் 3 மாதங்களாக வேலையில்லாமல் அலைந்தான் சங்கர். அதன்பின் அங்குள்ள உணவுச் சாலை ஒன்றில் பணியாளர் வேலை கிடைத்தது. இந்த வேலையில் திருப்தியடையாத சங்கர் மேலதிக வேலைகளையும் செய்தான்.

இவ்வளவு கஷ்டப்பட்டு எங்கடை பொடியன்கள் பெற்றாருக்குக் காசு அனுப்ப அவையின்ரை பெருமையும், ஆடம்பர வாழ்க்கையும் ஊரிலை என மனதில் நினைத்தான் சங்கர். சில நேரங்களில் மரக்கறிகளை யந்திரங்களில் வெட்டும்போது காயப்படுவதுமுண்டு. இரத்தம் பெருகுவதை முதலுதவி மூலம் சீர் செய்து மருத்துவமனைக்கு அவன் செல்வான்.

எங்கடை ஊரிலை எண்டால் மிதிவண்டி மூலம் எத்தனை இடங்களைச் சுத்தலாம். இஞ்சை என்னண்டால். நாலு சுவர்களுக்கு மத்தியில் வாழ்க்கை. வெளிநாட்டிலை வாழ்கிறவையோடை உள்ளூரிலை உத்தியோகம் பார்ப்பவை நினைச்சும் பார்க்கமுடியுமோ என சங்கரின் நண்பர்கள் கூறுவார்கள்.

சங்கர் சுவிற்சர்லாந்திற்கு வந்து 3 வருடமாயிற்று. உழைத்துத் தன் வீட்டுக்காரருடைய கடனையும் அடைத்துவிட்டான். அவனுக்கு தகப்பனார் ஒரு கடிதம் போட்டார். தம்பி உனக்கு ஒரு பெண் அனுப்பட்டோ. சங்கர் அதனை நினைத்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றான்.

**எமது நாட்டில் வாழும் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனையில் நாட்டம் கொண்டவர்களாக மாறிவருகின்றனர். என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.**

பாடசாலை மாணவர் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் சிற்பிகள். அவர்களின் வாழ்வை வளம்படுத்தும் பொருட்டு உலகெங்குமுள்ள அரசுகள் கோடிக்கணக்கில் பணத்தை செலவழிக்கின்றனர்.எனவே மாணவ சமுதாயம் தீயவழிகளில் செல்லாமல் தம் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாகப் பற்றுள்ளவர்களாக மாறவேண்டும்.

நாம் பத்திரிகை வாயிலாகப் பாடசாலை மாணவர் போதைப் பொருளுக்கு அடிமையாவதை வாசிக்கின்றோம். இப் போதைப் பொருளை பாவிப்பதனால் எதிர்காலத்தில் தலைவர்களாக உருவாக வேண்டிய மாணவர்கள் தமது வாழ்க்கையை பாழடிக்கின்றனர். ஆரம்பத்தில் மாணவர் இப் போதைப் பொருள்கள் பாவிப்பதைப் பொழுது போக்காகக் கொள்கின்றனர். பின் இப் பொருட்களின் பாவனையைத் தமது நாளாந்த செயற்பாடாக மாற்றி வருகின்றனர்.இவற்றைப் பாவிப்பதனால் தமக்கு உற்சாகம் பிறக்கிறது என்ற தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர்.

ஹெரோயின், அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் மிகவும் பயங்கரமானவையாகும். இவற்றை ஒரு முறை பாவித்தால் திரும்பவும் பாவிக்கத் தூண்டும். தன்மையைக் கொண்டது. இப் போதைப் பொருட்களைத் தொடர்ந்து பாவிப்பதனால் மூளை மழுங்கடிக்கப்பட்டு சிநதனைத் திறனை இல்லாதொழிக்கிறது.

கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலை மாணவர் மத்தியில் ஹரோயின் பாவனை அதிகரித்திருந்தது ஒரு காலம். இப்போது அநுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களிலுள்ள மாணவர் இப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர்.

சமீபகாலமாக பாடசாலை மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனை கூடுதலாக அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அநுராதபுரத்தில் போதைப் பொருளான ஹேரோயினைப் பாவித்த கலாட்டாவில் ஈடுபட்ட இரு மாணவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். சிலாபம் நகரில் ஒரு விநோதமான ஊர்வலம் இடம்பெற்றது. பொலிசார் போதைப் பொருளை விற்பனை செய்வோர், அதனைப் பாவிப்போர் மீது ஒரேதினத்தில் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கையில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் சிலாபம் நகரவீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிலர் இலட்சக்கணக்கில் பெறுமதியான போதைப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து கடத்தி வருகின்றனர். அவர்கள் விமானநிலையத்தில் சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் சோதனைக்குள்ளாகும் போது அகப்படுகின்றனர் என்ற செய்தியையும் நாம் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். முன்னர் சிறு அளவில் விமானத்தின் மூலம் கடத்திவரப்பட்ட இப் போதைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து வள்ளங்களில் தற்போது பெருந்தொகையாகக் கடத்தி வரப்படுகின்றன. இந்தியாவிலிருந்து இராமேஸ்வரம் வழியாக சிலாபம், வென்னப்புவ ஆகிய நகரங்களுக்கு பிறவுண்சுகர் போன்ற போதைப் பொருட்கள் கடத்தி வரப்படுகின்றன. அண்மையில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பிறவுண் சுகர் என்ற போதைப் பொருள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது. எனவே சுங்கத்திணைக்கள அதிகாரிகள், பொலிசார் ஆகியோர் லஞ்சத்தைப் பெறுவதில் கரிசனை கொள்ளாமல் சமூகநலனில் அக்கறை காட்ட வேண்டும்


என்பது முக்கியமான அம்சமாகும்.

இப்பொருட்களைப் பாவிப்பதனால் ஏற்படும் தீமைகள் பற்றி பெற்றோர் தம் மாணவச் செல்வங்களுக்கு அறிவுரைகளைப் புகட்ட வேண்டும். மாணவர்களது குடும்ப அந்தஸ்து, பாடசாலைக்கீர்த்தி ஆகியவை குறைந்து சமூதாயத்தில் தரக்குறைவாகக் கணிக்கப்படுகின்றமை பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். மாணவர் இதனைப் பயன்படுத்துவதனால் உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றது.

மாணவர் இப்போதைப் பொருட்களைப் பாவிப்பதனால் பாலியல் வல்லுறவு, இயற்கைக்கு முரணான செயல்களில் ஈடுபடல், மற்றவர்கள் தங்கள் வன்செயல்களுக்காகப் பயன்படுத்துதல் ஆகிய தீய செயற்பாடுகளில் இலேசான முறையில் ஈடுபடுவர். இயற்கைக்கு முரணான செயல் என்பதற்கு உதாரணமாக பக்குவப்படாத பெண் பிள்ளைகளை பாலியல் வல்லுறவு என்ற தீய செயல் எனக் குறிப்பிடலாம். இதனால் ஏற்படும் தீமைகளை அரசு ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தலாம். அமெரிக்காவில் இப் போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு அந்நாட்டு அரசு ஏழு வருட சிறைத்தண்டனையை விதிக்கின்றது. எமது அரசாங்கமும் இந்த விடயத்தில் கடும்போக்கினை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இதனை அரசாங்கம் அசட்டை செய்தால் இப்பாவனை ஏனைய இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் தோற்று நோய் போலப் பரவி விடும் இதனால் நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்படக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலமை உருவாகும் என்பதனை அரசு மனதில் வைத்துச் செயற்பட வேண்டும்.

# அறிமுகவுரை



திரு ஆ.முருகதாஸ் ஆசிரியர் அவர்கள் வதிரி ஆழ்வார்ப்பிள்ளை பாக்கியப் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் எமது சமூகத்தின் விடிவெள்ளி எனத்திகழும், யாழ்: தேவரையாளி இந்துக்கல்லூரியின் முன்னைநாள் முகாமையாளரும். கொடை வள்ளலுமாகிய உயர்திரு க.மூ.சின்னத்தம்பியின் பேரனுமாவார்.

இவர் யாழ்/தேவரையாளி இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய தலை சிறந்த பாடசாலைகளின் பழைய மாணவனாயிருந்தமையால் கல்விசார் பல்துறைகளிலும் ஆற்றலும் அறிவு முடையவர் என்பது மனங்கொள்ளத் தக்கது.

பாடசாலைகளில் கல்விகற்றபோது பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலியவற்றில் பலபரிசில்களைப் பெற்றதோடமையாது சிறந்த நடிகராகவும் திகழ்ந்தார். கட்டுரைப்போட்டிகளில் இருந்த திறமையே இவர் இப்பொழுது எழுதியிருக்கும் நூலுக்குக் காரணமாய் அமைந்ததெனலாம்.

சாந்தமே உருவான இவர் அறிவாற்றலோடு மனஉறுதியுமுடையவர்.

தேவரையாளி இந்துக்கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் சிறப்பான சேவை புரிந்தவர். மாணவர்களின் இயல்பூக்கங்களை நன்கறிந்து அவர்களுடன் அன்பாகப் பழகி, கற்பித்தற் செயற்பாடுகளில் தன்னைச் சிறப்பாக ஈடுபடுத்தியதன் மூலம் கல்வி அதிகாரிகளினதும் மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்று யாழ்/ கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் இப்பொழுது தன் கடமையைத் தொடர்கிறார்.

இவர் என் அன்புக்குரிய பழைய மாணவனாகும்.

வே.அமிர்தலிங்கம்
ஓய்வுபெற்ற உப அதிபர்.

# பிழை திருத்தம்

| | | | | |
|---|---|---|---|---|
| பக் 03 – | இறுதிப்பந்தி – | 6வது வரி | – கொள்வதற்கவே – | கொள்வதற்காகவே |
| பக் 07 – | முதற்பந்தி – | 13வது வரி | – நண்ணறிவுடன் – | நுண்ணறிவுடன் |
| பக் 14 – | மூன்றாவது பந்தி – | 11வது வரி | – பொறுத் வரையில் – | பொறுத்தவரையில் |
| பக் 23 – | இறுதிப்பந்தி – | 4வது வரி | – நற்குணபபண்புகளை – | நற்குணப்பண்புகளை |
| பக் 34 – | மூன்றாவது பந்தி – | 8வது வரி | – கண்ணிகளை – | கணனிகளை |
| பக் 37 – | இறுதிப்பந்தி – | 2 வது வரி | – என்ற் – | என்ற |
| பக் 41 – | முதற்பந்தி – | 4 வது வரி | – எடுதிய – | எழுதிய |
| பக் 51 – | இரண்டாவது பந்தி – | 10 வது வரி | – பாடங்களைப் – | படங்களில் |
| பக் 60 – | இறுதிப்பந்தி – | 7 வது வரி | – 1கோடி – | $1\,^{1}/_{2}$ கோடி |
| பக் 76 – | இறுதிப்பந்தி – | 2 வது வரி | – அரிச்சுவட்டை – | அடிச்சுவட்டை |
| பக் 77 – | மூன்றாவது பந்தி | 1 வது வரி | – சேர்ந்த – | சேர்ந்து |